# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 38 | வள்ளுவர் ஆண்டு 2047 | மார்கழி 19, செவ்வாய்க்கிழமை 03.01.2017

## புதிய அரசமைப்பு இவ்வாண்டு உறுதி

*ஜனாதிபதி நம்பிக்கை*

கொழும்பு, ஜன. 3

புதிய அரசமைப்பு இந்த ஆண்டு கொண்டு வரப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை வெளியிட்டுள்ளார். அத்துடன் புது அரசமைப்புக்கு முன்வைக்கப்பட்ட மக்கள் கருத்தறியும் சகல பரிந்துரைகளும் உள்வாங்கப்படாது என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

கொழும்பு ஊடகத்துக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு இந்த ஆண்டில் கொண்டு வர முடியும் என்று நம்பிக்கை இருக்கின்றது. தற்போது வரை இடம்பெற்ற செயற்பாடுகளின் பிரகாரம் புதிய அரசமைப்புக்கான சாசனங்கள் உருவாக்கப்படவில்லை. மக்கள் கருத்தறியப்பட்ட >> 25

# எல்லை நிர்ணய அறிக்கையை ஏற்பதற்கு மறுத்தார் அமைச்சர்

யாழ்ப்பாணம், ஜன. 3

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கையை உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளார். ஆணைக் குழுவின் உறுப்பினர்கள் எல்லோரும் கையெழுத்திடாமையினால் அதனை அங்கீகரிக்க முடியாது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் அறிக்கை கையளிப்பு விவகாரம் பெரும் சர்ச்சையாக நீடித்துக் கொண்டிருக்கின்றது. ஆணைக் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுக் கடந்த டிசெம்பர் மாதம் 27ஆம் திகதி கையளிக்கப்படும் என்று >> 25

## எல்லை நிர்ணய ஆணைக்குழுவுடன் பேசவுள்ளார் ரணில்

யாழ்ப்பாணம், ஜன. 3

எல்லை நிர்ணய ஆணைக் குழு உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்களுக்கு இடையிலான பேச்சுக்கு, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் 9ஆம் திகதி குறித்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக, அரச தரப்புத் தகவல்கள் குறிப்பிடுகின்றன.

முன்னதாக எல்லை நிர்ணய மேன்முறையீட்டுக் குழுவின் அறிக்கையை, உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா நிராகரித் >> 25

## மகிந்தவின் சகா சரத்குமார கைது

*நிதி மோசடிக் குற்றச்சாட்டில்*



கொழும்பு, ஜன. 3

ஒரு கோடி ரூபா நிதி மோசடிக் குற்றச்சாட்டில், மகிந்த அரசின் அமைச்சரவையில் மீன்பிடிப்பிரதிஅமைச்சராக இருந்த சரத் குமார குணரத்ன குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டார். நீதிமன்றினால் பிடியாணை >> 25

## பிரபா உயிர் பிழைப்பதை விரும்பவில்லை இந்தியா

திட்டத்தை அமெ. கைவிட அதுவே முக்கிய காரணம்



கொழும்பு, ஜன. 3

அமெரிக்கப் படையினரை நாட்டுக்குள் பலவந்தமாக அனுப்பி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனைக் காப்பாற்றுவதற்கு >> 25

# இந்தியப் படகுகள் விடுவிப்புக்கு இலங்கை அரசு பச்சைக் கொடி

சாதகமாகப் பரிசீலிப்பதாக நேற்றைய பேச்சில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜனவரி 3

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபடுவதை குறைக்கும் - தடுக்கும் வகையிலான செயற்பாட்டுக்குரிய திருப்திகரமான பதில் கிடைத்துள்ளது. இதனால் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது தொடர்பில் சாதகமாக ஆராய்வதற்கு இலங்கை அரசு இணங்கியுள்ளது.

இந்திய - இலங்கை மீனவர் விவகாரம் தொடர்பில் கொழும்பில் நேற்று நடைபெற்ற பேச்சுத் தொடர்பில் அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சு மட்ட இந்தப் பேச்சுக்களில், இந்தியத் தரப்பில் இந்திய நடுவண் அரசின் விவசாய மீன்பிடி அமைச்சர் ராதாமோகன்சிங், தமிழ்நாடு மீன்பிடித்துறை அமைச்சின் செயலர் ஆகியோரும், இலங்கைத் தரப்பில் மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர, அயலுறவுத்துறை அமைச்சர் மங்கள சமரவீர, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற >> 25

முச்சந்தி முரளி




## அபிவிருத்திப் பிரகடனத்தை வெளியிட்டார் ஜனாதிபதி



யாழ்ப்பாணம், ஜன. 3

நிலையான அபிவிருத்தி மூன்று வருடக் கொள்கைப் பிரகடனம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்று வெளி யிடப்பட்டுள்ளது. >> 25



## முடிந்தால் கவிழ்க்கட்டும்

மகிந்தவுக்கு ரணில் சவால்

கொழும்பு, ஜன. 3

நான் நாட்டில் இல்லாத சந்தர்ப்பத்தில் ஆட்சிக் கவிழ்ப்புக்கு மகிந்த முயற்சிக்கக் கூடும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

புதுவருடக் கடமைகளை ஆரம்பிக்கும் முதல் நாள் நிகழ்வு, அலரி மாளிகையில் நேற்று நடைபெற்றது. இதன் போது பத்திரிகையாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே >> 25

## தமிழர்களின் விருப்பம் நல்லிணக்கமே

*கூறுகிறார் எஸ்.பி.*

கொழும்பு, ஜன. 3

கடந்த காலத்தில் பல்வேறு சீர்குலைப்புச் செயற்பாடுகளில் கடும் போக்காளர்கள் ஈடுபட்டனர். அவர்கள் என்ன கூறினாலும், வடக்கு - கிழக்கு மக்கள் நல்லிணக்கத்துடன் வாழ்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் என்று அமைச்சர் எஸ்.பி.திஸா >> 25

## பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பக்கூடப் பணமில்லை

*முன்னாள் பெண்போராளி கண்ணீர்*

கிளிநொச்சி, ஜன. 3

வறுமையால் பிள்ளையைப் பாடசாலைக்கு அனுப்பிப் படிக்க வைக்கக்கூடப் பணம் இல்லை. அதனால் பாடசாலையில் புது வகுப்புக்குக்கூடப் பிள்ளையை அனுப்பவில்லை என்று முன்னாள் பெண் போராளி ஒருவர் நேற்றுக் கண்ணீருடன் தெரிவித்தார்.

வேலை கோரி அவர் உள்ளிட்ட முன்னாள் போராளிகள் பலரும் நேற்றுப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

புனர்வாழ்வின் பின்னர் எங்களை விடுவிக்கும்போது வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று உறுதியளித்த போதும் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவித்த முன்னாள் போராளிகள், வேலை கோரி ஏ-9 வீதியில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த புனர்வாழ்வு பெற்ற பெண் ஒருவர் தெரிவிக்கையில், நானும் கணவரும் ஒன்றாகவே புனர்வாழ்வு பெற்று விடுதலையானோம். காட்டுக்குத் தடி வெட்டச் சென்ற கணவர் காணாமற்போனார். அனைத்துத் தரப்பினரிடமும் கணவர் காணாமற்போனமை தொடர்பாகப் பதிவுகளை மேற்கொண்டும் இதுவரை பதில் இல்லை. நானும் பிள்ளையும் வறுமையில் வாழ்கிறோம்.

இன்றுபிள்ளையைப்பள்ளிக்குஅனுப்பவில்லை. >> 25

## மகிந்தவின் பொய்

*சாடுகிறது பொதுபலசேனா*

யாழ்ப்பாணம், ஜன. 3

தற்போதைய அரசின் அமைச்சர்களான சம்பிக்க மற்றும் ராஜிதவுடன் சில விடயங்களுக்காகக் கலந்தாலோசனை நடத்தினோம். அதற்காக அவர்கள் எங்களின் பின்னணியில் உள்ளார்கள் என்று மகிந்த ராஜபக்ச தெரிவித்தது பொய். >> 25

## இலத்திரனியல் அ. அட்டை விரைவில்

யாழ்ப்பாணம், ஜன.3

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் வியானி குணதிலக தெரிவித்துள்ளார். இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் இந்த மாத இறுதியில் கிடைக்கப் பெறும் என்று அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். >> 25

## இளம் தாயும் 7 வயது மகனும் கிணற்றில் சடலங்களாக மீட்பு

*பன்றிக்கெய்தகுளம் பகுதியில் பரிதாபம்*

வவுனியா, ஜன. 3

வவுனியா ஓமந்தை, பன்றிக் கெய்தகுளம் பகுதியிலுள்ள வீட்டுக் கிணற்றில் தாயும் மகனும் நேற்றுச் சடலங்களாக மீட்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சதீஸ்வரன் சுபாசினி (வயது - 30), மகன் சதீஸ்வரன் டினோஜன் (வயது -7) ஆகியோரே சடலங்களாக மீட்கப்பட்டனர்.

கணவன் வேலையின் நிமித்தம் கிளிநொச்சிக்குச் சென்றுள்ளார். நேற்றுக் காலை மாமியார் கிராம சேவையாளர் அலுவலகத்துக்குச் சென்றுள்ளார். மாமனார் அருகிலுள்ள கடைக்குச் சென்றுள்ளார். முற்பகல் 11 மணியளவில் மாமனார் வீட்டுக்கு வந்தபோது தாயும் மகனும் வீட்டில் இருக்கவில்லை. அருகிலுள்ள வீடுகளில் தேடியபோதும் அவர்கள் இல்லை. >> 25



# நீதித்துறையினர் பொதுமக்களுக்கு சிறந்த சேவையை வழங்கவேண்டும்

## அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வில் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் கருத்து

யாழ்ப்பாணம் ஜன 3

நீதித்துறை எதுவிதமான தடையும் இல்லாமல் சுதந்திரமாக இயங்குவதற்கு நீதிமன்ற உத்தியோகத்தர்களின் கடமை முக்கியமானது என்று யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நீதிமன்ற அரச உத்தியோகத்தர்களை நம்பி மக்கள் நீதிமன்றத்துக்கு வருகின்றார்கள். அவர்களை எதுவிதமான சலிப்புகளுக்கும் உட்படுத்தாமல் சிறந்ததொரு சேவையை வழங்குகின்ற அரச சேவையின் அதிஉச்ச சேவையாக நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் இருக்கவேண்டும். 2017ஆம்ஆண்டுசுபீட்சம்நிறைந்த ஆண்டாக அமையவேண்டும். நாம் சமூகத்துக்கு என்ன செய்தோம்? நாம் நாட்டுக்கு என்ன செய்தோம் என்பதை உணர்ந்து புனிதமான அரச கடமையை நிறைவேற்றி அதன் மூலம் மக்கள் சிறந்த சேவையைப் பெற வேண்டும்–என்றார். (து-4-8-37)

# பண்டாரவன்னியனின் சிலை மல்லாவியில் நேற்றுத் திறப்பு

முல்லைத்தீவு, ஜன.3

முல்லைத்தீவு, மல்லாவியில் அமைக்கப்பட்ட பண்டாரவன்னியனின் சிலை கருத்து முரண்பாடுகளுக்கு மத்தியிலும் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகனின் வரவு - செலவுத் திட்ட குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்ட பண்டார வன்னியன் சிலை தொடர்பில் நேற்று முன்தினம் முதல் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன. அமைக்கப்பட்ட பண்டாரவன்னியன் சிலையில் மன்னன் வைத்திருக்கும் வாள் தொடர்பிலும், அவரது கண்கள் ஐயனாரின் கண்கள் போன்று அகன்றிருப்பதோடு அவர் வைத்திருக்கும் கேடயம் பின்நோக்கிய திசையில் காணப்படுவதோடு ஒட்டுமொத்தமாக ஒரு நோய்வாய்ப்பட்டவருடைய தோற்றமுடையதாக சிலை காணப்படுவதாகத் தெரிவித்து அந்தப் பகுதி இளைஞர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தனர்.



அந்த எதிர்ப்புக்களைக் கருத்தில் கொள்ளாத நாடாளுமன்ற உறுப்பினர் பொலிஸ் பாதுகாப்போடு நேற்று அதனைத் தான் திட்டமிட்டபடி திறந்துவைக்க முற்பட்ட போது, இளைஞர் ஒருவர் இத்தகைய எதிர்ப்புக்கள் உள்ளது. நீங்கள் இந்தச் சிலை திறப்பதற்கும் எதிர்ப்புள்ளது. எனவே காரணத்தை கூறி அதனை திறக்குமாறு கேட்டிருந்தார். தான் தனது தலைமை உரையில் அவற்றை தெளிவு படுத்துவதாகத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் இளைஞர்களை சமாதானப்படுத்தி சிலையைத் திறந்து வைத்தார். சிலை அமைப்பு தொடர்பான தன்னிலை விளக்கத்தையும் அவர் வழங்கியிருந்தார்.

"ஒரு மன்னன் இவ்வாறுதான் இருக்க வேண்டும் என்பது பற்றி மல்லாவி பகுதி இளைஞர்கள் ஆராய்வதற்கு முயற்சித்தமை பெருமைக்குரியது. மன்னனுடைய வாள்வீச்சுத் தொடர்பாக நான் இணையத்தளத்தை புரட்டிப் பார்த்தேன். அதில் மன்னனுடைய வாள் எவ்வாறு அமைய வேண்டும் என்பதுபற்றி குறிப்பிடப்பட்டிருந்தது. அது போன்றுதான் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் தனது உரையில் தெரிவித்தார்.

(வ-21,7)

# பட்டதாரி ஆசிரியர்களுக்கு நேற்று நியமனக் கடிதங்கள்

## வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் வழங்கினார்

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் உள்ள ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான நியமனக் கடிதங்களை நேற்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் அலுவலகத்தில் வைத்து மாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா வழங்கினார்.

இந்த நிகழ்வு நேற்று முற்பகல் 11 மணியளவில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இரவீந்திரன் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்மொழி மூலப் பாடசாலைகளில் உள்ள மனைப்பொருளியல் வெற்றிடத்துக்காக 26 பட்டதாரி ஆசிரியர்களும், சிங்கள மொழிப் பாடசாலைகளுக்கு 46 ஆசிரியர்களுமாக 72 பட்டதாரி ஆசிரியர் களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு வெலிஓயா கோட்டம், வவுனியா தெற்கு வலயம் ஆகிய இடங்களுக்கே சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். சிங்களமொழிப் பாடசாலைகளுக்குச் சிங்களமொழிக்காக 18 ஆசிரியர்களும் ஆங்கிலம் 1, வரலாறு 3, குடியுரிமைக் கல்வி 9, புவியியல் 3, தகவல்தொடர்பாடல்தொழில்நுட்பம் 1, விவசாயம் 1, சங்கீதம் 1, நடனம் 1, வழிகாட்டலும் ஆலோசனையும் 3, மற்றுமொரு பாடத்துக்கு 5 என 46 சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். (து-10)

# காலை 7.30க்கு ஆரம்பித்த வடக்குப் பாடசாலைகள்

## யாழ்ப்பாணத்தில் வரவேற்பு; வன்னியில் சில தடங்கல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

வடக்கு மாகாணப் பாடசாலைகள் நேற்று முதல் காலை 7.30 மணிக்கு ஆரம்பமாகத் தொடங்கின. இந்த நடைமுறை தொடர்பில் யாழ்ப் பாண மாவட்டத்தைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வரவேற்புத் தெரிவித்துள்ளபோதும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த கல்விச் சமூகத்தினரிடமிருந்து உரிய வரவேற்புக் கிடைக்கவில்லை. வன்னிப் பிரதேசத்தில் உரிய நேரத்துக்குச் சில பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

புதிய நடைமுறை தொடர்பில் கல்விச் சமூகத்தினர் தெரிவித்த கருத் துக்கள் வருமாறு:

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யின் அதிபர் ஐ.தயானந்தராஜா, புதிய நடைமுறையை ஏற்றுக் கொள்கின்றோம். மாணவர்கள், ஆசிரியர்கள் உரிய நேரத்துக்கு வருகை தந்தனர். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா ஆட்சிக் காலத்தில் பாடசாலை 7 மணிக்கு ஆரம்பமாகிய நாள்களும் இருக்கின்றன. எனவே இந்த நேர மாற்றம் பாதிப்பை ஏற்படுத்தாது. சூரிய உதயத்தைத் தேடி வெளிநாட்டவர்கள் வருகின்றனர். எமது மாணவர்கள் சூரிய உதயத் தில் எழுந்து கல்வியில் ஈடுபடுவது ஒருவித ஆரோக்கியம் என்றுதான் நான் கருதுகின்றேன் - என்றார்.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் ஆசிரியர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில், இதனை வரவேற்கின்றோம். பி.ப. 1.30 மணிக்கு பாடசாலை முடிவடைவதால் மாணவர்களை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து ஓரளவு பாதுகாக்கக் கூடிய சூழ் நிலை காணப்படுகின்றது.

யாழ். நகரப் பாடசாலை மாணவர்கள் தெரிவித்ததாவது:

காலையில் கல்விச் செயற்பாட்டில் சுறுசுறுப்பாக இயங்க முடிகின்றது. எங்களைப் போல சில மாணவர்கள் பயிற்சிகளுக்காக வழக்கமாகவே நேரத்துக்கு வருகை தந்து பழகியுள்ளோம். எங்களுக்கு இது தாக்கமாகவே இருக்காது. மாற்றத்தை மகிழ்சியுடன் வரவேற்கின்றோம் - என்றனர்.

யாழ். மாவட்டச் செயலகத்தில் பணி புரியும் அரச ஊழியர் ஒருவர் குறிப்பிடுகையில், பிள்ளைகள் காலையில் சாப்பிடாமல் பாடசாலைக்குச் செல்கின்றனர். வழமைபோன்று 8 மணிக்கு ஆரம்பிப்பதுதான் பொருத்தம். நாம் எமது கடமைகளையும் பார்க்க வேண்டியிருக்கின்றது என்றார்.

முல்லைத்தீவு செம்மலை மகா வித்தியாலய அதிபர் சி.பாஸ்கரன், வெளி மாவட்டத்தில் இருந்துவரும் ஆசிரியர்களில் பெரும்பாலான ஆசிரியர்கள் நேற்றைய தினமே (நேற்றுமுன்தினம்) இங்கு வந்து தங்கி நின்றனர். இரண்டு ஆசிரியர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந் திருந்ததால் இன்றைய (நேற்று) தினம் 8.15 மணியளவில்தான் வந்திருந்தார்கள். உரிய நேரத்துக்குப் போக்குவரத்து வசதிகள் கிடைக்கும் எனின் அவர்களும் குறித்த நேரத்துக்கு வரக் கூடியதாக இருக்கும். 60 வீதமான மாணவர்கள் குறிக்கப்பட்ட நேரத்துக்கு முன்னதாகவே பாடசாலைக்கு வந்து விட்டார்கள். எமது பாடசாலைக்கு நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டுக் கேணி, கொக்கிளாய் பகுதிகளில் இருந்து அதிகமான மாணவர்கள் வருகின்றார்கள். அவர்களுக்கு 6.30 மணிக்கு இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து சேவையில் ஈடுபட்டமையால் அதிகமான மாணவர்கள் அந்தப் பேருந்திலேயே வந்து விட்டார்கள் - என்றார்.

முல்லைத்தீவு முத்துஐயன்கட்டு இடதுகரை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் பரமலிங்கம் இராஜ்குமார், யாழ்ப்பாணத்தில் இருந்து இன்றைய (நேற்று) தினம் காலை 5 மணிக்குப் புறப்பட்டோம். 8.30 மணிக்குத்தான் ஒட்டுசுட்டானை வந்தடைந்தோம். ஒட்டுசுட்டானில் இருந்து '9.15 மணியளவில் தான் முத்து ஐயன்கட்டு இடதுகரைக்கான பேருந்து வரும். பாடசாலையை வந்தடைய 9.45 மணியாகிவிட்டது. இதற்கு முன்னைய காலத்திலும் இதே நேரத்துக்குத் தான் வந்தடைவோம். இதைவிட நேரத்துக்கு வருவதற்கு இந்தப் பகுதிக்கு வேறு போக்குவரத்து வசதிகள் இல்லை. நாங்கள் திங்கள் வந்து வெள்ளிக்கிழமைதான் யாழ்ப்பாணம் செல்வோம். முல்லைத்தீவு இடதுகரை அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையை பொறுத்தவரையில் மாண வர்கள் ஜீவநகர், மண்ணாகண்டல், போன்ற தூர இடங்களில் இருந்து நடந்தே வருகின்றனர். அவர்களுக்கு இந்த நேரமாற்றம் சிரமமா னதாகவே அமையும் - என்றார்.

முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயத்தில் தரம் 8 இல் கல்வி கற்கும் மாணவி வி.கௌசிகா, எங்களுடைய பாடசாலை 7.30 மணிக்கு ஆரம்பமானது. நான் கேப்பாப்பிலவு கிராமத்தில் இருந்து சைக்கிளில் தான் சென்று வருகின்றேன். யாழ்ப்பாணத்தில் இருந்து வருகின்ற ஆசிரியர்கள் சிலர் இன்றையதினம் வரவில்லை. யாழ்ப் பாணத்தில் இருந்து வரும் மற்ற ஆசிரியர்கள் இன்று வந்தார்கள். வழமைபோல் சந்தோசத்துடன் எங்களுக்குப் படிப்பித்தார்கள் - என்றார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை மகாவித்தியாலய அதிபர் எஸ்.கலாதேவன், பாடசாலை நேற்றையதினம் காலை 7.30 மணிக்கு ஆரம்பமானது. மாணவர்கள் குறித்த நேரத்துக்கு வருகை தந்திருந்தனர். வெளிமாவட்ட ஆசிரியர்களும் நேரத்துக்கே வருகை தந்தனர் - என்றார்.

பளை மத்திய கல்லூரியின் அதிபர் எஸ்.பாலகிருஷ்ணன், நேற்றைய தினம் 7.45 இற்கே பாடசாலை ஆரம்பமானது. 50 சதவீதமான மாணவர்கள் குறித்த நேரத்திற்கு வருகை தந்திருந்த போதும் மற் றையவர்கள் தாமதமாக வருகை தந்ததால் 7.45இற்கு ஆரம்பிக்கப்பட்டது. வெளிமாவட்ட ஆசிரியர்களில் ஒரு சிலர் குறித்த நேரத்திற்கு வருகை தரவில்லை. இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் குறித்த நேரத்துக்கு வருகை தந்தனர். மாணவர்கள் வருகை தருவ தில் தாமதம் ஏற் படாமல் இருப்பதற்கு 7 தொடக்கம் 7.15க்குள் பாடசா லைக்கு வருகை தருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

பளைப் பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவியின் தாயான கமலராணி, நான் தையல் வேலை செய்கின்றேன். பிள்ளைகள் .பளை ஆரம்ப வித்தியாலயத்தில் முதலாம் தரம் மற்றும் மூன்றாம் தரத்தில் கல்வி பயில்கின்றனர். தற்போது பனிக்காலம். மாணவர்கள் உரிய நேரத்துக்கு எழுந்து குளிப்பதில் கொஞ்சம் தயக்கம் காட்டுகின்றனர் - என்றார். (து-5-6-7-8)

# யாழ். நகர் வர்த்தகர்களுக்கு வணிகர் கழகத்தின் அறிவிப்பு

யாழ்ப்பாணம் நகரின் சீரான கழிவகற்றல் செயற்பாட்டுக்கு ஒத்துழைத்து வர்த்தகர்கள் திண்மக் கழிவுகளை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்று யாழ். வணிகர் கழகத் தலைவர் கேட்டுள்ளார்.

"யாழ். நகரின் கழிவகற்றல் தொடர்பாக வர்த்தகர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றி யாழ். மாநகர சபை ஆணையாளரால் யாழ். வணிகர் கழகத்துக்கு அறிவிக்கப்பட்டது. பிளாஸ்ரிக், பொலித்தீன் பொருள்களை ஒரு பொதியாகவும், உக்கக்கூடிய பொருள்களை இன்னொரு பொதியாகவும், இலத்திரனியல் போன்ற கழிவுகளை மேலும் ஒரு பொதியாகவும் வகைப்படுத்தி வர்த்தக நிலையத்துக்கு முன்பாக வைத்திருக்க வேண்டும். எந்தக் காரணம் கொண்டும் எந்தவகையான பொருள்களையும், வர்த்தக நிலையத்துக்கு முன்பாகவோ அல்லது வடிகாலிலோ போடக்கூடாது. அவ்வாறு கழிவுப் பொருள்கள் காணப்படின் உரிய கடைக்காரர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

தேநீர்ச்சாலைகள் மற்றும் உணவு விடுதிகளுக்கு சிறப்பு கழிவகற்றும் முறைமை நடைமுறைப்படுத்தப்படுவதனால் மேற்படி கழிவகற்றும் முறைமைக்குள் அவை உள்ளடங்கமாட்டாது" என்று யாழ். வணிகர் கழகத் தலைவர் தெரிவித்தார். (வ-10)

# கார் தடம்புரண்டு விபத்து; குரும்பசிட்டி முதியவர் சாவு

## புத்தாண்டுக் கொண்டாட்டம் முடித்து திரும்பிய போது ஹபறணையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.3

கிறிஸ்மஸ், புத்தாண்டு கொண்டாட்டத்துக்காக சிலாபத்திலுள்ள உறவினர் வீட்டுக்குச் சென்று வீடு திரும்பிய போது, அவர்கள் பயணித்த கார் தடம் புரண்டதில் வடமராட்சியைச் சேர்ந்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். காரில் பயணித்த மேலும் ஐவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் ஹபறணைப் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் ஓய்வுநிலை பாடசாலை அதிபரான சி.கந்தசாமி (வயது -86) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

கிறிஸ்மஸ், புத்தாண்டுக் கொண்டாட்டத்துக்காக மட்டக்களப்பில் இருந்து கார் ஒன்றில் குறித்த குடும்பத்தினர் சிலாபத்துக்குச் சென்று அங்குள்ள தங்களது உறவினர்களுடன் நிகழ்வுகளில் கலந்துகொண்டு நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் உள்ள தங்களது வீட்டுக்குத் திரும்பியுள்ளனர். எதிர்பாராத விதமாக குறித்த கார் ஹபறணைப் பகுதியில் பயணித்த போது தடம்புரண்டுள்ளது. இதன்போது காரில் பயணித்த முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மேலும் 5 பேர் காயமடைந்தனர். (வ-21)

# பழிவாங்குகிறது வடக்கு மாகாண சுகாதார அமைச்சு

## சுகாதாரப் பரிசோதகர்கள் குற்றச்சாட்டு போராட்டம் தொடரும் என்றும் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.3

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தங்களைப் பழிவாங்குவதாகக் குற்றஞ்சாட்டிய பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், தமக்கு உரிய தீர்வு கிடைக்கும் வரை போராட்டம் காலவரையின்றித் தொடரும் என்று தெரிவித்தனர்.

பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் தொடர்பான செய்தியாளர் சந்திப்பு யாழ். நகரில் உள்ள விருந்தினர் விடுதியில் யாழ். மாவட்டப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

அதில் யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத் தலைவர் க.சதீஸ் தெரிவித்ததாவது:

திட்டமிடப்படாத இடமாற்றம் தொடர்பாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பணிப் புறக்கணிப்புப் போராட்டம் கடந்த மாதம் 19 ஆம் திகதியில் இருந்து நடைபெறுகின்றது. இடமாற்றங்களில் தாபன விதிக்கோவை, திணைக்கள விதிக்கோவை முறைகள் மாறுகின்ற செயற்பாடு காணப்படுகின்றது. பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் இடமாற்றம் தொடர்பாக இலங்கையில் வடக்கு மாகாணம் மட்டும்தான் கூடிய பாதிப்புக்கு உள்ளாகின்றது. இடமாற்றங்கள் செய்யப்படும்போது அரச சுற்றறிக்கைகளை ஏற்று நடப்பதாக இல்லை.

வடக்கு மாகாணத்தில் போர்க் காலத்தில் கடும் சிரமங்களுக்கு மத்தியிலும் சேவை மனப்பான்மை அடிப்படையில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தமது கடமையைச் சரிவரச் செய்துள்ளார்கள். இதனால்தான் இற்றைவரை நோய்கள் தீவிரமடையாமல் கட்டுக்குள் உள்ளன. களத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களும் முக்கியமானவர்கள்.

இலங்கையில் ஏற்பட்ட சுமுகமான சூழ்நிலைக்குப் பின்னர்கூட உத்தியோகத்தர்களின் நலன்களில் கவனம் எடுப்பதாகத் தெரியவில்லை. உத்தியோகத்தர்களின் நலன்களைக் கருத்திற்கொண்டே இடமாற்றங்கள் செய்யப்படவேண்டும். அந்த விதி தற்போது மீறப்படுகின்றது. கடந்த காலத்தில் 72 நாள்கள் தொழிற்சங்கப் போராட்டம் நடைபெற்றது. பின்னர் இனிவரும் காலங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பழிவாங்கப்படமாட்டார்கள் என எழுத்து மூலம் உறுதியளிக்கப்பட்டது.

ஆயினும் ஒவ்வொரு ஆண்டும் இடமாற்றம் என்ற ரீதியில் பழிவாங்கல்கள் இடம்பெறுகின்றன. அதுவும் திட்டமிட்டுப் பழிவாங்கப்படுகின்றனர்.

இடமாற்றக் கொள்கை தயாரிக்கும்போது தொழிற்சங்கங்களை உள்வாங்கவேண்டும். ஆனால் அவ்வாறில்லாமல் தன்னிச்சையாகவே கொள்கைள் தயாரிக்கப்பட்டு ஒரு வருடத்தில் இரண்டு கொள்கைகள் அனுப்பப்படுகின்றன. செப்ரெம்பர் மாதம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு மட்டும் என்று இடமாற்றக் கொள்கை அனுப்பப்பட்டுள்ளது. இது ஒரு பழிவாங்கல் செயற்பாடாகும்.

இடமாற்றங்களை மாகாண மட்டத்தில் சுகாதார சேவைகள் பணிப்பாளரும், மாவட்ட மட்டத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரும் மேற்கொள்வர். ஆனால் இந்த முறை சுகாதார அமைச்சின் செயலர் இடமாற்றத்தை மேற்கொண்டுள்ளார். இது சொல்லப்பட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்டுள்ளமையை சுட்டிக்காட்டுகின்றது.

இந்த இடமாற்றம் தொடர்பாக நியாயமான தீர்வு கிடைக்கும் வரை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் தொடரும் - என்றார். (த-10)

### ரயிலுடன் மோதியது 'கப்' இருவர் காயமடைந்து வைத்தியசாலையில்



முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முறிகண்டி அக்கராயன் ரயில்பாதையில் ரயிலுடன் கப் ரக வாகனம் மோதியதில் இருவர் காயமடைந்து கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற ரயிலுடன் முற்பகல் 11.30 மணியளவில் கப் வாகனம் மோதி இந்த விபத்து நேர்ந்தது. கப் வாகனத்தில் சென்ற இருவர் பாதுகாப்புக் கடவை சமிக்ஞையை மீறி ரயில் பாதையைக் கடக்க முற்பட்டபோதே விபத்து இடம்பெற்றது. வாகனம் சேதமடைந்துள்ளது.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை மாங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (த-6)

### மழை வேண்டி குளிர்ந்த அபிசேகம்

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் மழை வேண்டி குளிர்ந்த அபிசேகமும் சிறப்பு வழிபாடும் ஆலய நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டத்தில் அண்மைய நாள்களாக மழை இல்லாமல் விவசாய நிலங்கள் அழிவடைந்து வருகின்றன. இதனைக் கருத்திற்கொண்டு ஆலயங்களில் வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய நிர்வாகத்தினர் மழை வேண்டி முருகப்பெருமானுக்கு குளிர்ந்த அபிசேகமும் சிறப்புப் பூசையும் மேற்கொண்டனர் (த-6)

## பருத்தித்துறை நீதிமன்றில்

# 32 வருடங்களின் பின்னர் தனித் தனியே இயங்கும் சிவில், குற்றவியல் மன்றங்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

பருத்தித்துறை நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நீதிவான் மன்றமும் மாவட்ட நீதிமன்றமும் 32 வருடங்களின் பின்னர் நேற்றுத் தொடக்கம் தனித் தனியே இயங்க ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இதுவரை இரண்டு நீதிமன்றப் பணியையும் முன்னெடுத்த நீதிபதி பெ.சிவகுமார் நேற்றுத் தொடக்கம் பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகவும் நீதிவான் மன்றின் மேலதிக நீதிவானாகவும் செயற்படும் வகையில் நியமிக்கப்பட்டார்.

பருத்தித்துறை நீதிமன்றின் நீதிவானாக, இறுதியாக அக்கரைப் பற்று மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றிய திருமதி நளினி கந்தசாமி நியமிக்கப்பட்டார்.

பருத்தித்துறை நீதிமன்ற வளாகத்தில் மாவட்ட நீதிமன்றமும், நீதிவான் மன்றமும் தனித் தனியே உள்ளன. 1984ஆம் ஆண்டுவரை இந்த இரண்டு நீதிமன்றங்கள் செயற்பட்டு வந்தன. நாட்டில் ஏற்பட்ட போர் காரணமாக 1984ஆம் ஆண்டு கரவெட்டி வதிரிக்கு இடம் பெயர்ந்த நீதிமன்றம் அப்போது தொடக்கம் 1997ஆம் ஆண்டு வரை ஒரே நீதிபதியின் கீழ் குற்றவியல், சிவில் வழக்குகள் நடைபெற்று வந்தன. பின்னர் அதே காலப்பகுதி தொடக்கம் 1998ஆம் ஆண்டு வரையாக 10 வருடகாலம் நீதிமன்றம் இயங்கவில்லை. இலங்கைப் படையினர் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அக்காலப்பகுதி தொடக்கம் தற்காலிக இடமான கரவெட்டி வதிரியில் நீதிமன்றம் இயங்கி வந்தது.

நாட்டு நிலமை வழமைக்குத் திரும் பியதை அடுத்து பருத்தித்துறை நீதிமன்ற வளாகம் சீரமைக்கப்பட்டு 2011ஆம் ஆண்டு திறந்து வைக்கட்டது. அன்றிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றம் சொந்த இடத்திலேயே இயங்கிவருகின் றது.

1984ஆம் ஆண்டுக்கு முன்னர் பருத்தித்துறை நீதிமன்றில் குற்றவியல் வழக்குகள் நீதிவான் மன்றிலும் சிவில் வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்திலும் தனித்தனி நீதிபதிகள் முன்னிலையில் நடைபெற்றுவந்தன. சுமார் 32 வருடகாலத்திற்கு பின்னர் இந்த வருடம் தொடக்கம் தனித் தனியே இயங்க ஆரம்பித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (வ-4,109,173)

### விபத்தில் இருவர் படுகாயம்

ஒழுங்கையில் பயணித்த மோட்டார் சைக்கிளின் சில்லு சறுக்கியதில் தூக்கிவீசப்பட்ட இருவர் வேலியில் பொருத்தப்பட்டிருந்த படையினர் பயன்படுத்தும் கொமாண்டோ கம்பியின் மீது வீழ்ந்து படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மிருசுவில் தெற்கில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த நமசிவாயம் நவதர்ஷன் (வயது -31) ஹென்றி மனோகரன் யூட் மனோராஜ் (வயது-32) ஆகிய இருவரும் காயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (வ- 9)

# ஜனநாயகப் போராளி கட்சி உறுப்பினர் சாவு

புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளியும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தென்மராட்சிப் பிரதேச அமைப்பாளருமான ஐந்து பிள்ளைகளின் தந்தை, கட்சி அலுவலகத்தில் தூக்கில் தொங்கிய நிலையில் மீட்கப்பட்டதாகச் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் நிலைய வீதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சாவகச்சேரி டச்சு வீதி சங்கம் ஒழுங்கையைச் சேர்ந்த தர்மசேன ரிஸிகரன் (வயது -34) என்பவரே தவறான முடிவு எடுத்து உயிரை மாய்த்தார்.

"தினமும் காலையில் வேலைக்குச் சென்று விட்டு இரவு 9 மணிக்கு வீடு திரும்புவார். சம்பவ தினத்தன்றும் மதியம் வீட்டுக்கு வந்த உணவருந் திவிட்டு வேலைக்குச் சென்றிருந்தார். நிறையக் கடன் பட்டிருக்கிறார். நேற்றுமுன் தினமிரவு 9 மணியளவில் பொலிஸார் வீட்டுக்கு வந்து சம்பவத்தைக் கூறினர்" என்று அவரது மனைவி கூறினார்.

பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை விசாரணை நடத்தினார். சடலம் யாழ்ப்பாணப் போதனா வைத்திய சாலையில் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் குடும்பத்தினரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது. (த-4-9)

# மின் தடை

யாழ்ப்பாணம், ஜன.3
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.30 மணி வரையும் கீழ்க்குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடக்கு மாகாண மின் வழங்கல் கட்டுப் பாட்டு நிலைய மின் பொறியிய லாளர் அறிவித்தார்.
யாழ்.பிரதேசத்தில் புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய இடங்களி லும் - வவுனியாப் பிரதேசத்தில் ஓமந்தை வீட்டுத்திட்டம், ஐ.சி.ரி கல்லூரி, யூனியன் அலான்ஸ் லிமிட்டட் ஆகிய இடங்களிலும் - மன்னார் பிரதேசத்தில் எருக்கலம் பிட்டி நீர்ப்பாசனத் திட்டம், கொன்னயன் குடியிருப்பு, கடலோரி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று தெரி விக்கப்பட்டது. (வ-10)

# புத்தாண்டு தினத்தன்று 3 குழந்தைகள் பிரசவம்

வவுனியா, ஜன. 3
வவுனியா பொது வைத்தி யசாலையில் புத்தாண்டு தினத்தில் தாய் ஒருவர் மூன்று பிள்ளைகளைப் பிரசவித்தார் என்று வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
மூன்று பிள்ளைகளும் தாயும் நலமுடன் உள்ளனர் என்றும் வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன. (ற-4)

# முள்ளிவாய்க்காலை சுயலாப அரசியலுக்கு பயன்படுத்துகிறது தமிழ்க் கூட்டமைப்பு

## முன்னாள் எம்.பி வினோ குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜன.3
முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் என்ற சொற்பதம் பன்னாட்டளவில் மாத்திரமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களும் தமது சுயலாபங் களுக்குப் பயன்படுத்தி வருகின்றனர்.
இவ்வாறு குற்றஞ்சாட்டுகின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடா ளுமன்றஉறுப்பினர் வினோநோகராதலிங் கம்.
வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பின ரான ஆண்டி ஐயா புவனேஸ்வரனை வர வேற்கும் நிகழ்வு நேற்று உடையார்கட்டு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த உள்ளூராட்சி, மாகாண சபை தேர் தல்களின் போது நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வேட்பாளர்களை தேர்வு செய்கின்ற போது, கூட்டமைப்புக்குள் இருக்கின்ற கட்சிகள் வேட்பாளர்களை பிரித்தாளுகின்ற நிலை முதல் முதலாக தோன்றியது. கடந்த மாகாண சபைத் தேர்த லின் போது தற்போது மாகாணசபை உறுப் பினராக உள்ள சிவநேசனை தவிர அனை வரையும் நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் வேட்பாளர்களாகவே நியமித் தோம். சிவநேசன் மட்டுமே கட்சி சாந்த வேட்பாளராகக் களமிறங்கினார். ஆனால் காலப்போக்கிலே அவர்களில் சிலர் ஒவ் வொருவரும் ஏதோ ஒரு வகையில் கட்சி சார்ந்து தங்களுடைய அரசியல் வேலைத் திட்டங்களை முன்னெடுத்தார்கள்.
கூட்டமைப்பைப் பொறுத்த வரையிலே, அல் லது கூட்டமைப்பினுடைய ஒற்றுமையைப் பொறுத்த வரையிலே அது ஒரு ஆரோக் கியமான விடயமல்ல. இன்று வரைக்கும் அது ஒரு பிரச்சினையாக இருந்துகொண்டி ருக்கின்றது. நாடாளுமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு தெரிவு செய்யப்பட்ட நாடாளு மன்ற உறுப்பினர் ஒருவர் போட்டியிட்டு ஒரு சில நாட்களிலேயே கூட்டமைப்புக்குள் ளேயே இன்னும் ஒரு கட்சிக்குத் தாவிவிட்டார். கட்சிக்கு என்று ஒரு கொள்கையில்லை, உறுப்பினர்களுக்கு என்று கொள்கை இல்லை, அல்லது கொண்ட கொள்கை யிலே உறுதியாக இல்லை. இப்படி ஒரு நிலை கூட்டமைப்புக்குள் இருக்கின்றது.
இன்று ஒரு சிலை விவகாரத்திலே கூட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள்ளேயே மாகாணசபை உறுப்பினர்களும், நாடா ளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இல்லை. ஒரே நிலைப்பாட்டை எடுக்க முடி யாத ஒரு நிலை. ஏனென்றால் அவர்கள் கூட்டமைப்புக்குள்ளேயும் கட்சி சார்ந்து தங்களுடைய அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்ற அல்லது எதிர்கால நலன் சார்ந்து தங்களுடைய நடவடிக்கை களை முன்னெடுக்கின்ற நிலமைகள்தான் உள்ளன. ஆனால் அவர்கள் வெளியிலே பேசுகின்ற விடயம் என்ன? நாங்கள் தமிழ் தேசியத்துக்காக உழைக்கின்றோம், முல் லைத்தீவு மாவட்டத்துக்காக உழைக்கின் றோம், நாங்கள் ஒற்றுமையாக இருக்கின் றோம். உண்மை அதுவா? நிச்சயமாக இல்லை. இது அவர்களுடைய உள்ளத் தியே இருக்கின்ற விடயம் அல்ல. அவர் கள் வெளியிலே உதட்டளவிலே இவற்றை சொல்கின்றார்கள் - என்றார். (வ-21,7)

# சிறுப்பிட்டி இளைஞர்கள் படுகொலை

## 14 படையினருக்கு எதிரான அறிக்கையை முன்வைப்பதில் சட்டமா அதிபர் தாமதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3
சிறுப்பிட்டிப் பகுதியில் இரண்டு இளைஞர்கள் கடத்தப்பட்டுக் கொலை செய்யப்பட்ட வழக்கில் சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்க பெறவில்லை என்று மன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. அதனையடுத்து 14 இராணுவத்தினரதும் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது.
1998ஆம் ஆண்டு காலப்பகுதியில் புத்தூர் பகுதியில் இளைஞர்கள் இருவர் காணாமல் ஆக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை தொடர்பாக அந்தக் காலப்பகுதியில் சிறுப்பிட்டி இராணுவ முகாமில் கடமையாற்றிய 16 இரா ணுவத்தினர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. சட்டமா அதி பரின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து யாழ். நீதிவான் மன்றினால் இந்தக் கொலைக் குற்றச் சாட்டு வழக்கு மீள விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன் போது குற்றஞ்சாடப்பட்டவர்களில் 14 இராணுவத்தினர் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.
நேற்றையதினம் குறித்த வழக்கு அழைக்கப்பட்ட வேளை இராணுவத்தினர் பொலிஸாரின் சிறப்புப் பாதுகாப்புடன் அனுராதபுரம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.
இந்த வழக்கு தொடர்பான மேலதிக அறிக்கையை அணைத்த அச்சுவேலி பொலிஸார், சட்டமா அதிபரின் ஆலோசனை இதுவரை கிடைக்கப் பெறவில்லையென வும் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் மன்றில் தெரி வித்தனர். அதனையடுத்து 14 இராணுவத்தினரின் விளக்க மறியலை தொடர்ந்தும் இம்மாதம் 16ஆம் திகதி வரையும் நீடிக்குமாறு நீதிவான் சி.சதீஸ்தரன் கட்டளை யிட்டார்.
இதேவேளை இந்த வழக்குத் தொடர்பான வழக்கோடும் ஏனைய ஆவணங்களும் அச்சுவேலி பொலிஸ் நிலை யத்திலிருந்து முன்னரே காணாமல் போயுள்ளதால், வழக்குத் தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப் பதில் அச்சுவேலி பொலிஸார் சட்ட மா அதிபர் திணைக் களத்தில் தங்கியிருக்க வேண்டியுள்ளதாக தெரிய வரு கின்றது. (வ-4,103)

# நாடகப் பெருவிழா

காலையடி மறுமலர்ச்சி மன்றத்தின் நாடகப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமையும், நாளை மற்றும் நாளை மறுதினனும் 3 நாள்களுக்கு காலையடி பண்டத்தரிப்பில் அமைந்துள்ள மறுமலர்ச்சி மன்றத்தின் தியாகராஜா மகேந்திரன் குடும்பஞாபகார்த்த உள்ளரங்கில் இடம் பெறவுள்ளது.
ஆஹா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி' என்று மகாகவி பாரதியால் வரவேற்கப்பட்ட - 1917 ஆம் ஆண்டு ரஷ் யாவில் இடம்பெற்ற ஒக்ரோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை வரவேற்கும் முகமாக இந்த நாடகப்பெரு விழா நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வுகளில் முதல் நாளான இன்று செவ்வாய்க் கிழமை செம்முகம் ஆற்றுகைக் குழு வழங்கும் 'எனக் கும் வலிக்கும்' சிறுவர் நாடகமும் மனச்சிறை' நவீன நாடகமும் 'கோமாளிகள்' என்ற சிறப்பு ஆற்றுகையும் இடம்பெறவுள்ளன.
நாளை புதன்கிழமை நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பில் உருவான கிரேக்க அவலச்சுவை நாடக ஆசிரியர் சோஃபகிளிஸின் அன்டிகனி' நாடகம் இடம் பெறவுள்ளது.
நாடகத்தைக் குழந்தை ம. சண்முகலிங்கம் தமிழாக்கம் செய்துள்ளதுடன் நெறியாள்கையை யாழ்.பல்கலைக் கழக மூத்த விரிவுரையாளர் க. ரதிதரனும் மேற்கொண் டுள்ளனர்.
நாளைமறுதினம் வியாழக்கிழமை இணுவில் இளந் தொண்டர் சபையினர் வழங்கும் சத்தியவான் சாவித் திரி' இசைநாடகம் மற்றும் வைபிறேற் நடனக் குழு வழங்கும் 'புத்தாக்க நடனம்' என்பனவும் இடம்பெறவுள் ளன. (ற-4,ரி)

மரண அறிவித்தல்

## சின்னையா கந்தசாமி

( ஓய்வு பெற்ற அதிபர், சித்தி விநாயகர் வித்தியாலயம் வல்வெட்டித்துறை)



மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மட்டக்களப்பு புதுக்குடி யிருப்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா கந்தசாமி (01.01.2017) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.
அன்னார் காலஞ்சென்ற அழகம்மா (ஓய்வு பெற்ற ஆசிரியர், உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) வின் அன்புக்கணவரும் காலஞ் சென்ற சின்னையா - செல்லாச்சி தம்பதி யரின் அன்பு மகனும் சரவணமுத்து - சகுந்தலை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ் சென்றவர்களான பொன்னுத்துரை, சின்னத்தங்கம், பூலோகம், சரஸ்வதி, சுப்பிரமணியம் மற்றும் நடராஜா ஆகியோரின் சகோதரரும் வனஜா (கனடா), தயாநிதி (கனடா), அற்புதமலர் (மட்டக்களப்பு), சத்தியானந்தன் (உபஅதிபர், சாவகச்சேரி இந்துக்கல்லூரி), நித்தியானந்தன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர், நானாட்டான் பிரதேச சபை மன்னார்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சொலொமன் (கனடா), அன்ரன் ஜெயக்குமார் (கனடா), மத்தியூ (கட்டார்), சுகந்தி (ஆசிரியை - மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயம் கொடிகாமம்) பரஞ்சோதிமலர் (குடும்ப நல உத்தி யோகத்தர், மட்/புதுக்குடியிருப்பு) ஆகியோரின் மாமனாரும் ஆஷா (கனடா), ஜெமீமா, எப்சிபா (மட்டக்களப்பு), மதுஷா., லதுசிகன் (சாவகச்சேரி), யபீசன், நிர்மிதன், சஸ்மிதன் (மட் / புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்புப்பாட்டனாரும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2017) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணி வரைக்கும் மட்/புதுக்குடியிருப்பு தெற்கில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு (04.01.2017) புதன்கிழமை பருத்தித்துறை கிராமக்கோட்டுச்சந்தியில் உள்ள புலோலி இலங்கை பெந்துகொஸ்தே சபையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 05.01.2017 பி.ப 2 மணியளவில் நல்லடக்க ஆராதனை இடம் பெற்று பி.ப4 மணியளவில் பருத்தித்துறையில் உள்ள இலங்கை பெந்துகொஸ்தே சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், ஊழியர்கள், விசுவாசிகள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: சத்தியானந்தன் (மகன் )
077 2811 333, 077 2511 333

# பொலிஸாரை தகாத வார்த்தையால் பேசிய குற்றச்சாட்டில் இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜன.3
பொலிஸாரை தகாத வார்த்தையால் பேசினார் என்ற குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவரைக் கைதுசெய்துள்ள தாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம், குருநகர் பகுதியைச் சேர்ந்த 26 வயது டைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.
"கைதுசெய்யப்பட்ட இளைஞர் நேற்றுத் திங்கட்கிழமை யாழ்.பஸ்தியன் சந்திப்பகுதியில் இளைஞர்களுடன் நின்றுள்ளார். அப்போது, சிங்கள மொழி பேசும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அந்த இடத்தில் நின்ற போது, குறித்த இளைஞர் பொலிஸ் உத்தியோகத்தருக்கு தமிழ் மொழி தெரியாதென நினைத்து தகாத வார்த்தை யால் அவரைப் பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.
அவர் பேசிய தகாத வார்த்தை என்னவென புரிந்து கொண்ட குறித்த பொலிஸ் உத்தியோகத்தர், பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கினார். இதனையடுத்து அந்த இளைஞன் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலை யத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளார்.
குறித்த இளைஞரிடம் விசாரணைகள் மேற்கொள்ளப் படுகின்றன. அவர் யாழ்.நீதிவான் மன்றில் முற்படுத்தப்ப டுவார்" என்றும் பொலிஸார் கூறினர். (வ-4, 21,106)

# சாவகச்சேரி வைத்தியசாலையில் தோல் சிகிச்சைகள் மீள ஆரம்பம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தோல் சிகிச் சைப் பிரிவு நேற்று மீண்டும் ஆரம்பமானது.
"யாழ்.போதனா வைத்தியசாலையிலிருந்து தோல் சிகிச்சை மருத்துவ வல்லுனர்கள் இருவர் மாதத்தின் பிரதி முதலாவது திங்கள் மற்றும் மாதத்தின் மூன்றாவது வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் சிகிச்சை வழங்க முன்வந்துள்ளனர். வைத்தியசாலையில் தோல் சிகிச்சை பெற்ற நோயாளர்கள் மற்றும் புதிதாக கலந்து கொள்ள விரும்பும் நோயாளர்கள் குறித்த தினங்களில் வருகை தர முடியும்" என்று வைத்தியசாலை நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

# மீனவர் மீதான வழக்குகளில் ரூ.966,500 தண்டம் விதிப்பு

## கடந்த ஆண்டில் மட்டும்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் எல்லைப் பரப்பில் 2016ஆம் ஆண்டில்திணைக்களத்தின் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் உள்ளூர் மீனவர்களுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட 72 வழக்குகளில் நீதிமன்றங்களால் 9 லட்சத்து 66 ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சட்டவிரோதமான முறையில் சங்கு, அட்டைத் தொழில் புரிந்த குற்றச்சாட்டின் கீழ் 5 லட்சத்து 93 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

தடை செய்யப்பட்ட தங்கூசி வலை பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட 17 வழக்குகளுக்காக ஒரு லட்சத்து 88 ஆயிரம் ரூபாவும், கடலாமை பிடித்த குற்றச்சாட்டில் 3 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. அவற்றுக்கு 85 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்த குற்றச்சாட்டில் இரு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டதற்கு 75 ஆயிரம் ரூபாவும், கடலட்டை பிடித்த குற்றச்சாட்டில் தாக்கல் செய்யப்பட்ட 3 வழக்குகளுக்கு 23 ஆயிரம் ரூபாவும், மினிமுத்து சுறா பிடித்த ஒரு வழக்குக்கு ஆயிரம் ரூபாவும் அனுமதியற்று சிங்க இறால் வைத்திருந்த குற்றச்சாட்டுக்கு ஆயிரத்து 500 ரூபாவும் மொத்தம் 72 வழக்குகளுக்கும் குறித்த 9 லட்சத்து 66 ஆயிரத்து 500 தண்டம் விதிக்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

(ற-10)

# அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்துக்கு புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம்.ஜன. 3

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் இந்த வருடத்துக்கான - 26 ஆவது ஆண்டு பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

கடந்த செவ்வாய்க்கிழமை அன்று வி.முருகதாஸ் தலைமையில் இணைய அலுவலகத்தில் நிர்வாகத் தெரிவு நடைபெற்றது. நிகழ்வுக்கு நேர்மை அதிதியாக வட மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி.கே சிவஞானம் கலந்து கொண்டார். கூட்டத்தில் நிதி,நிர்வாக, அபிவிருத்தி, செயற்பாட்டு அறிக்கைகள் மற்றும் 26வது ஆண்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

தொடர்ந்து 2017ஆம் ஆண்டிற்கான நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக ரி.தேவானந் (அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்), உப தலைவராக வி.முருகதாஸ் (சாந்தீகம்), செயலாளராக வி.ஜி. தங்கவேல் (அற வழிப்போராட்டக்குழு), உப செயலாளராக எஸ்.சேந்தினி (பெண்களின் மாற்றத்துக்கான செயற்பாட்டு வலையமைப்பு), பொருளாராக வி.கேசவன் (காருண்யா பௌண்டேசன்), அங்கத்தவர்களாக சரோஜா சிவச்சந்திரன் (மகளிர் அபிவிருத்தி நிலையம்), பி. ஜமுனா தேவி (வட இலங்கை சர்வோதயம்), எஸ். திருக்குமரன் (ஐக்கிய அபிவிருத்தி நம்பிக்கை நிதியம்), மு.பரம்சோதி (வடமராட்சிநல்லொழுக்க நிறுவனம்), ஆகியோரும் உள்ளக கணக்காய்வாளர்களாக எஸ். சுமதி (ஆறுதல்), பத்திராதிபராக நு. பிரபாகரன் (தியாகிஅறக்கொடை நிலையம்) ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

இணையத்தின்செயற்பாடுகள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆராயப்பட்டதோடு கூட்டம் நிறைவடைந்தது.

(ற-ரி)

**பாராட்டி வாழ்த்துகின்றேன்**

திரு.சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன்
ஹற்றன் நஷனல் வங்கி யாழ்.மெற்றோ கிளையில் முகாமையாளராகக் கடமையாற்றி வடபிராந்திய முகாமையாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு இன்னும் பல உயர்வுகளைப் பெற இறை ஆசி வேண்டுகின்றேன்.




திரு. S.கனகரத்தினம்
கதிர்வேலவன் அரிசி ஆலை, கதிர்வேலவன் ஹாட்வெயார்.
கண்டிவீதி, கைதடி.

**கல்வியியற் சொற்பொழிவும் கலந்துரையாடலும்**
**வாழ்க்கைக்கான கல்வியும் இலத்திரனியல் ஊடான கற்கையும்**

சொற்பொழிவாளர் - கல்வியியல் ஆய்வாளர் வழிகாட்டி

பேராசிரியர் கலாநிதி
**Bridge Somekh**
(Metroplitan University - u.k)

காலம்
04.01.2017 பிற்பகல் 3.00 மணி

இடம்
நோத்லங்கா IIT சர்வதேச பல்கலைக்கழகம்
ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கி மூன்றாம் மாடி மண்டபம்.

கல்வியியல் ஆய்வுத்துறையில் ஈடுபட்டுள்ளோர், அதிபர்கள், ஆசிரியர்கள்,கல்விப்பணிப்பாளர்கள், கல்வியியலாளர்கள் அனைவரும் கலந்து பயனடையலாம். இலவசமாக நடைபெறும் இந்நிகழ்வில் தமிழ் மொழி பெயர்ப்பும் உண்டு.

ஆர்வலர்கள் அனைவரையும் அழைக்கின்றோம்.

கலாநிதி பா.தனபாலன்
077 068 1958 (Gen/7347) (11.17)
'ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்', யாழ்ப்பாணம்.

**விற்பனைக்குண்டு**

சணல் ஆடுகள், கிடாய், மறி, பாலுடன் கூடிய ஆடுகள், பொம்மேரியன் நாய்க்குட்டிகள், அல்சேசன் நாய்கள் விற்பனைக்குண்டு.

077 101 6407

**வேலையாள்கள் தேவை**

அலுமினிய பிற்றிங் வேலை செய்வதற்கு ஆள்கள் தேவை. வேலை தெரிந்தவர்கள் மட்டும் தொடர்புகொள்ளவும்.

077 646 8452

**அறிவித்தல்**

ஆயுர்வேத பாதுகாப்புச் சபைத் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட இலங்கா சித்த ஆயுர்வேதக் கல்லூரியின் புதிய நிர்வாகம் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் 06.01.2017 வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணியளவில் வலி/தெற்கு பிரதேச செயலக (உடுவில்) கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொண்டு சமுகமளிக்கவும்.

077 872 5251/ 076 851 1525

**Air Ticket & Visa**

சகலநாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள். விசாக்களை மிகக்குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

சென்னை, மதுரை விசேட விலைக்கழிவுடன் 23, 800/=

மலேசியா, தாய்லாந்து, பாங்கொக், இந்தியா நாடுகளுக்கான விசாக்களை மிக விரைவில் பெறலாம்.

Air Ticketing வகுப்புக்களும் 2 மாத பயிற்சிகளுடன் தற்போது.

SB Travels & Tours(Pvt) Ltd.
216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 691 1080, 81 / 076 691 1082, 83

## University of Jaffna, Sri Lanka

## FACULTY OF TECHNOLOGY, ARIVIYAL NAGAR, KILINOCHCHI

University of Jaffna will entertain applications upto **16.01.2017** from suitably qualified persons for the under mentioned posts **on Temporary basis**.

**Temporary Lecturer/ Temporary Instructor/ Temporary Demonstrator in Engineering Technology /Bio system Technology/ Information Communication Technology/ Mathematics**

**Qualification:**

1. A Degree with Specialization in the relevant subject with First or Second Class (Upper Division) Honours;
   **OR**
2. A Degree with Specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
   **OR**
3. (a) A Degree with Specialization in the relevant subject without Honours or any other degree with at least second class honours and
   (b) a recognized postgraduate degree in the relevant subject.

**Note I:** Special consideration will be given in Engineering Technology those who have degrees in Technology or Engineering in one or more of the following fields:
- Building Construction /Civil Engineering
- Automobile Technology/Mechanical Engineering
- Electro technology/Electrical & Electronic Engineering

**Note II:** Special consideration will be given in Bio System Technology those who have degrees inBio system Technology specialized in one or more of the following fields
- Food Production Technology
- Commercial Green farming Technology

**Note III: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the position.**

**Salary Scale**

| | |
|---|---|
| Temporary Lecturer | 35,556 p.m (Fixed) |
| Temporary Demonstrator / Instructor | 29,190 p.m (Fixed) |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission will also be paid.

Application forms and other details may be obtained from the office of the Deputy Registrar/ Academic Establishments, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of Rs.100/- per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order drawn in favour of the **Bursar, University of Jaffna** together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications shall be sent to the Deputy Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka.

Application forms and other details will also be available in the University website **www.jfn.ac.lk**.Those who wish to send the application forms downloaded from the University website should attach a Money Order for Rs.100/- to the application form drawn in favour of the **Bursar, University of Jaffna.**

Those who wish to apply for **more than one** post should apply in **separate forms.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.
02.01.2017.
(C/27557) (10.17)

# யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்று அரச சேவை சத்தியப்பிரமாண நிகழ்வு





யாழ்ப்பாணம் ஜன. 3

2017ஆம் ஆண்டுக்கான அரச சேவை சத்தியப் பிரமாண நிகழ்வு நேற்று முற்பகல் 9 மணியளவில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலர் நா. வேதநாயகன் இலங்கைக் கொடியை ஏற்றிய பின்னர் மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்களால் இந்த ஆண்டுக்கான அரசசேவை சத்தியப் பிரமாணம் மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையை இந்த வருடம் வறுமையில் இருந்து மீட் கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கமைய ஆளணியினர் அனைவரும் தமது பங்களிப்பை நேர்மையாகவும் தாமதம் இன்றியும் மிகுந்த அர்ப்பணிப்புடனும் வழங்க வேண்டிய அவசியம் எனும் தொனிப்பொருளில் மாவட்டச் செயலர் உரையாற்றினார்.

ஜனாதிபதியின் நிலைபேறான நோக்கு பிரகடனமும் நேரடியாகத் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டது.

நிகழ்வில் மாவட்டச் செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ற-8)

# முன்பள்ளிகளிடையே இணைப்பு அவசியம்

## யாழ். மாவட்டச் செயலாளர் கருத்து


யாழ்ப்பாணம் ஜன. 3

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்பள்ளிகளிடையே இணைப்பு இல்லை. அனைத்து முன்பள்ளிகளையும் இணைத்துச் செயற்பட வேண்டும் என்ற உத்வேகம் இருந்தது. ஆனால் கடந்த காலங்களில் அதற்கான சந்தர்ப்பங்கள் கைகூடவில்லை.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார். ப்ளோசம்ஸ் ஆரம்பப் பிள்ளை பருவ அபிவிருத்திப் பயிற்சி நிலையத்தின் ஆரம்ப விழா நேற்று ஆறு தல் நிறுவனத்தின் முதன்மை நிறைவேற்று அதிகாரி சு.டிவகலாலா தலைமையில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

ஆறுதல் நிறுவனம் எதிர்காலத்தில் அனைத்து முன் பள்ளிகளையும் இணைத்துச் செயற்பட உள்ளது. இது மிகவும் வரவேற்கத்தக்கது. இன்றைய காலத்தின் தேவையாகவும் இருக்கின்றது.




முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சிகள் வழங்க வேண்டிய தேவைகளும் இருக்கின்றன. ஆறுதல் நிறுவனங்கள் 3 ஆயிரம் முன்பள்ளி ஆசிரியர்களுக்குப் பயிற்சிகள் வழங்கி யுள்ளனர்.

பிள்ளைகளின் பண்புகளை சிறப்புற வளர்த்துக்கொள்ள வேண்டும். பெற்றோர்களுக்கு அடுத்தபடியாக ஆசிரியர்களே இருக்கின்றனர். எனவே ஆசிரியர்கள் எதைப் பழக்குகின்றனரோ அதனையே பிள்ளைகளும் பின்பற்றுகின்றனர்.

சிலவேளைகளில் பெற்றோர்கள் சில விடயங்களைச் செய்யும் போது எங்களின் ஆசிரியர்கள் இப்படித்தான் செய்ய வேண்டும் எனக்கூறி இருக்கின்றனர் எனச் சொல்லப்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது. ஆசிரியர்கள் நன்கு பயிற்சி பெற்று விசாலமாகச் செயற்பட வேண்டும்.

கடந்த கால முன்பள்ளிப் பிரச்சி னைகளுக்குத் தீர்வு கொடுக்கும் வகையில் அமையும் என நினைக்கின்றேன். இங்கு பல அனுபவம் வாய்ந்த பேராசிரியர்கள் கல்வியியலாளர்கள் என பலர் பக்கபலமாக இருக்கின்றனர். முன்பள்ளி தொடர்பில் மிகவும் பிரகாசமான வளர்ச்சி ஏற்பட வாய்ப்பு உள்ளது - என்றார்.

நிகழ்வில் வடமாகாணக் கல்வியமைச்சின் ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பணிப்பாளர் த.ஜெயக்குமாரி, யாழ். வலய ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவின் உதவிக்கல்விப் பணிப்பாளர் க.விமலநாதன், நல்லை ஆதின முதல்வர், சின்மயா மிசன் சுவாமிகள், பேராசிரியர்கள் என பலர் கலந்துகொண்டனர். (ற-8)

**03.01.2017 இல் மணிவிழாக் காணும் எமது வித்தியாலய கணித ஆசான்**

**திரு. அருளம்பலம் ஜெயதாசன் அவர்களின்**

**சேவைநலன் பாராட்டு**




**திரு. அருளம்பலம் ஜெயதாசன்**

( Spl.Trd Maths, SLTS - I )

**சேவை விவரம்**

01.09.1992 - 31.12.1996 - யா/இடைக்காடு ம.வி.
01.01.1997 - 30.06.2010 - யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி.
01.07.2010 - 02.01.2017 - யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.

**கணிதத்தைக் காலமெலாம் கரும்பாய் ஊட்டி**
**கல்விப் பணி செய்த கலங்கரை நீர் வாழி!**

சேவையிலிருந்து ஓய்வுபெறும் தங்கள் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் உங்கள் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வாழ்த்துவோர்:- ஆசிரியர் நலன்புரிக்கழகம் -**
**யா/கோண்டாவில் இராமகிருஷ்ண ம.வி.**

**31ஆம் நாள் நினைவஞ்சலியும்**

**அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**

உதிப்பு
21 . 03 . 1962



உதிர்வு
06 . 12 . 2016

எமது அன்புத் தெய்வம்

**அமரர் திருமதி அம்பிகாவதி யேசுராசா**

06.12.2016 அன்று எம்மை விட்டு நீங்கிய எமது அன்புத் தாயாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (03.01.2017) செவ்வாய்க்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்று வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 05.01.2017 வியாழக்கிழமை எமது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக தயவுடன் ஏற்று வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி கேட்டு நேரடியாகவும், தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் துன்பவேளையில் பல்வேறு வழிகளில் உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது ஆத்மார்த்தமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தம்பகாமம், பளை. குடும்பத்தினர்.

**சிறுநீரகம் தேவை**

மண்டைதீவை வசிப்பிடமாகக் கொண்ட 52 வயதுடைய நபருக்கு O⁻ உடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.

**076 383 7040**

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி**

பூவுலகில்
03 . 02 . 1921



விண்ணுலகில்
30 . 12 . 2011

**அமரர் தியாகர் அருணாசலம் (நயினாதீவு)**

திதி : பூர்வபக்க ஷஷ்டி (03.01.2017)

"உள்ளத்தால் பொய்யது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன்"

கூடும் உறவில் கூடி மகிழ்ந்து
நேசம் வைத்தே நெகிழ்ந்து பேசி
பாசப் பிணைப்பில் பரிந்து நின்று
தேறலின் தெளிவில் பக்தி புனைந்து வாழ்ந்தே
பற்றற்றான் பற்றினை பற்றி ஆண்டுகள் ஐந்தானதோ!

117/4, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.

# பைக்கற்றுக்களில் அடைக்கப்பட்ட பதநீர் சந்தைக்கு

அச்சுவேலி, ஜன.3

வடக்கு மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் 40 லட்சம் ரூபா செலவில் பதநீரைப் பைக்கற்றில் அடைக்கும் தொழிற்சாலையை நிறுவவுள்ளது. இந்த வருடம் பைக்கற்றில் அடைக்கப்பட்ட பதநீரைச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு வடக்கு மாகாண பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் என்.கணேசு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:-

வலிகாமம் பகுதியில் பதநீரைப்பைக்கற்றில்அடைக்கும் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. சமகாலச் சூழலில் பனை, தென்னை தொழில் வல்லுநர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே தமது தொழில் முயற்சிகளைமேற்கொண்டு வருகின்றனர். அதனால் வருமான இழப்புக்கு ஆளாகின்றனர். பதநீருக்கு நல்ல சந்தை வாய்ப்பும் கேள்வியும் உள்ளது. பதநீரை அருந்துவது உடல்நலத்துக்கு நல்லது. பதநீரை இதுவரை காலமும் போத்தலில் அடைத்து விற்பனை செய்தோம். இந்த வருடத்தில் இருந்து 250 மில்லிமீற்றர் பைக்கற்றில் அடைத்துச் சந்தைப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்து வருகின்றோம்.

தொழிற்சாலைக்கான கட்டட வசதி உள்ளது. இயந்திரசாதனங்கள் மற்றும் ஏற்பாடுகளுக்கு 40 லட்சம் ரூபா தேவை என உத்தேச மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மானிப்பாயில் உள்ள கட்டடத்தில் தொழிற்சாலையை செயற்படவைப்பதற்கு ஏற்பாடு செய்து வருகின்றோம். பனையில் இருந்து பெறப்படும் கள் மற்றும் பதநீர் என்பன குறிப்பிட்ட பருவகாலத்தில் ஐந்து மாதங்களுக்கு மட்டும் பெறக்கூடியதாகும். பெறப்படும் பதநீரைப் பைக்கற்றில் அடைத்துக் குறிப்பிட்ட காலத்துக்கு விற்பனை செய்யமுடியும். - என்றார். (ந-11)



புதுவருட இரவில் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் மோட்டார் சைக்கிள் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டது. வவுனியா வடக்கு, நெடுங்கேணி கற்குளம் சந்தியில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இரு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. அதன்போதே மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டது. நெடுங்கேணி பொலிஸார் சம்பவம் குறித்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7)

# கிளிநொச்சியில் கடல் உணவு உற்பத்தி வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜன. 3

கிளிநொச்சி மாவட்டத்தில் கடலுணவு உற்பத்தி 2016ஆம் ஆண்டு பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது என்று மாவட்ட கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தது.

2015ஆம் ஆண்டு கிளிநொச்சியில் 11 ஆயிரத்து 189 மெற்றிக்தொன் கடலுணவு உற்பத்தி பெறப்பட்டது. 2016ஆம் ஆண்டு 10 ஆயிரத்து 338 மெற்றிக் தொன் கடல் உற்பத்தியே பெறப்பட்டது.

போரின் பின்னர் சற்று வளர்ச்சிப்போக்கில் காணப்பட்ட கடலுணவு உற்பத்தி கடந்த ஆண்டு 851 மெற்றிக் தொன்னால் வீழ்ச்சியடைந்துள்ளது. அதேவேளை 2015 ஆம் ஆண்டளவில் 917 படகுகள் காணப்பட்டபோதிலும்2016ஆம்ஆண்டு 929 படகுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடற்றொழிலை மட்டுமே நம்பி 3 ஆயிரத்து 914 குடும்பங்கள் வாழ்கின்றன. கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் மூலம் 2016ஆம் ஆண்டு சட்டவிரோத மீன்பிடி தொடர்பில் நீதிமன்றங்களில் 30 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 2015 ஆம் ஆண்டு 24 வழக்குகளே தாக்கல் செய்யப்பட்டன. (ந-101)

# வீடமைப்பு பணிகள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.3

வடமராட்சி கிழக்கில் அரசின் 312 வீட்டுத்திட்ட கட்டுமானங்கள் யாவும் நிறைவு பெற்றுள்ள நிலையில் அவை உரியவர்களுக்கு கையளிக்கப்பட்டுள்ளன என்று பிரதேச செயலர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

வீடுகள் யாவும் எட்டு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டன. மேலும் 32 வீடுகள் இந்த வீட்டுத்திட்டத்தின் கீழ் அமைக்கப்படுகின்றன. வீடுகளின் கட்டுமானப் பணிகள் 75 வீதத்தை தாண்டிவிட்டன. அவை இரண்டு வாரங்களுக்குள் நிறைவுறுத்தப்படும் - என்று அவர் தெரிவித்தார். (ந-17)

# முல்லையில் வினாகிரி தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை

சிவமோகன் எம்.பி. தெரிவிப்பு

முல்லைத்தீவு மாவட்ட புதுக்குடியிருப்பு பகுதியில் வினாகிரி மற்றும் சோர்சிக்கல் ஸ்பிரிட் ஆகியவற்றை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட உள்ளது என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் தெரிவித்தார்.

புதுக்குடியிருப்பு ப்குதியில் ஏற்கனவே சோர்சிக்கல் ஸ்பிரிட் தொழிற்சாலை ஒன்று இயங்கியது. தற்போது விநாகிரியையும், சோர்சிக்கல் ஸ்பிரிட் ஆகிய இரண்டையும் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையைச் சேர்த்து இயக்கலாம். அதற்கான முன்வரைபை முல்லைத்தீவு மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் இணையத்திடம் ஒப்படைத்துள்ளேன். தொடர்ந்து இதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றேன்.

புதுக்குடியிருப்பில் இந்தத் தொழிற்சாலை அமையும் போது பலருக்குரிய வேலை வாய்ப்பைப் பெற முடியும் - என்றார். (ந-7)

# ஒளிப்பட பயிற்சி நெறி

கொழும்புத்துறை,ஜன.3

பல்சமய கருத்தாடல் நிலையமும், யாழ்.ராகஸ்வரம் இசை மன்றமும் இணைந்து ஒளிப்படப் பயிற்சி நெறியை நடத்தவுள்ளது. இலவசமாக வழங்கப்படும் இந்தப்பயிற்சி பகுதிநேரமாக வழங்கப்படும். சமூக சேவையில் ஆர்வமுள்ளோர் கலந்து கொள்ள முடியும். ஒளிப்படத் துறையில் சமூகத்துக்கு பயனுள்ள வகையில் சிறந்த படங்களை வெளிக் கொணர்ந்து கண்காட்சிகள் மற்றும் கருத்தாடல்கள் மூலம் நல்ல சமூகத்தை கட்டி எழுப்புவதன் நோக்கமாக இந்தப் பயிற்சி நடத்தப்படவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். விண்ணப்பங்களை ஒளிப்படப் பயிற்சி நெறி 2017 யாழ்.ராகஸ்வரம் இசைமன்றம் 28/1 ஏ.வி.றோட் கொழும்புத்துறை என்னும் முகவரிக்கு தைப்பொங்கலுக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ந-135)

# கடல் வளத்தைப் பாதுகாக்க அகிம்சை வழிப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜன. 3

முல்லைத்தீவு மாவட்ட கடல் வளத்தை பாதுகாக்கும் நோக்கோடு வெளிமாவட்ட மீனவர்களின் அத்துமீறலை முற்றாக கட்டுப்படுத்த வேண்டும். சட்டவிரோத மீன்பிடி முறைகளை முற்றாக தடை செய்ய வேண்டும் என்பவற்றை வலியுறுத்தி அகிம்சைவழிப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் எ.மரியராசா தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாவட்டத்தின் நல்ல தண்ணீர்த் தொடுவாய் முதல் பேய்ப்பாறைப்பிட்டி வரைக்குமான சுமார் 73 கிலோமீற்றர் நீளமான கரையோரப்பகுதிகளைக் கொண்ட கடற்பகுதியிலும், நாயாறு வட்டுவாகல் ஆறு உள்ளிட்ட சிறுகடல் பகுதிகளிலும் சுமார் 5 ஆயிரத்துக்கும்மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் தமது வாழ்வாதாரத் தொழிலான கடற்றொழிலை மேற்கொண்டு வருகின்றனர்.

நந்திக்கடல், கொக்கிளாய் சிறுகடல் பகுதிகளில் சட்டவிரோத மீன்பிடி முறைகள் மூலம் மீன்பிடி மேற்கொள்ளப்படுவதால் தமது தொழில் நடவடிக்கைக்கள் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என மீனவர்களால் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

முல்லைத்தீவு கடல் பகுதிகளில் முறையற்ற வகையில் கரை வலைப்பாடுகளுக்காக அனுமதிகள் வழங்கப்பட்டு உழவு இயந்திரங்களை பயன்படுத்தி கரைவலைப்பாடுகளை இழுத்தல் டைனமற் பாவித்து மீன்பிடித்தல், வெளிச்சம் பரப்பி மீன்பிடித்தல், நிபந்தனை மீறிய அட்டைத் தொழில்கள் என பல்வேறு சட்டத்துக்கு முரணான தொழில் நடவடிக்கைகள் வெளி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2017 ஆம் ஆண்டை வடக்கு மாகாண கடல்வள பாதுகாப்பு ஆண்டாக கடைப்பிடிக்க எண்ணியுள்ளோம். முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டபோதும் இதுவரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இடையிலான ஒரு கலந்துரையாடல் நாளை (இன்று) நடைபெற உள்ளது. எமது கடல் வளத்தை பாதுகாக்க வேண்டிய கடமை எங்கள் கையிலேயே உள்ளது. அதுவே எங்கள் வாழ்வாதாரம். அகிம்சை வழியில் போராடுவதை தவிர வேறு வழி எமக்குத் தெரியவில்லை. இந்தக் கலந்துரையாடலில் இறுதி முடிவு எடுக்கப்படும் - என்றார். (ந-7)

# கண்டாவளையில் கடந்த ஆண்டு 21 திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த வருடம் முக்கிய திட்டங்களாக 21 திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் தலா 8 லட்சம் ரூபா செலவில் 260 வீடுகளும் கட்டப்பட்டன.

இவ்வாறு பிரதேச செயலாளர் த.முகுந்தன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

21 திட்டங்களில் 15 திட்டங்கள் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா செலவில் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோன்று மேலும் 6 முக்கிய திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அவற்றில் முரசு மோட்டை முருகானந்தாக் கல்லூரி மற்றும் நாகேந்திரபுரம் வித்தியாலயம் என்பவற்றுக்கு தலா 1.5 மில்லியன் ரூபா வீதம் 3 மில்லியன் ரூபா செலவில் இரு கட்டடங்களும், குமரபுரம் அ.த.க. பாடசாலைக்கு 3 லட்சம் ரூபா செலவிலும் , தர்மபுரம் மேற்கு பொது மண்டபத்திற்கு ஒரு லட்சம் ரூபா செலவிலும் மலசலகூடங்களும் அமைக்கப்பட்டன.

5 பொதுக் கிணறுகள் தலா 2.5 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டன. 20 விவசாயக் கிணறுகள் தலா 3 லட்சம் ரூபா செலவில் சீரமைக்கப்பட்டன -என்றார். (ந-4,101)

## கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஜன.3
இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தால் 2016-2017 ஆம் கல்வியாண்டுக்குப் பொறியியல் கற்கைநெறிக்குப் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகள் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சையில் கணித / உயிரியல் பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருக்கவேண்டும். அல்லது இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் அடிப்படை தொழில்நுட்பக் கற்கை நெறியில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கவிரும்பும்விண்ணப்பதாரிகள் எதிர்வரும்17 ஆம் திகதி வரை (www.ou.ac.lk) இணையத்தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று அவர் தெரிவித்தார். (ந-10)

◇◇◇◇◇◇◇◇◇◇◇

யாழ்ப்பாணம், ஜன. 3
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தால் 2016 -2017 ஆம் கல்வியாண்டுக்கு முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன என்று யாழ். பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார்.

விண்ணப்பதாரிகள் ஜீ.சி.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் கணிதம், தமிழ் உட்பட குறைந்தது ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 18ஆம் திகதிவரை (www.ou.ac.lk) என்னும் இணையத் தளத்தினுள் பிரவேசிப்பதன் மூலம் விண்ணப்பங்களைப் பெற்று விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவித்தார். (ந-10)

## பாசையூர் கடலில் மீனவர் வலையில் சிக்கிய பெரும் சுறா

யாழ்ப்பாணம், ஜன.3
பாசையூர் கடலில் பெரிய அளவிலான சுறா மீன் ஒன்று மீனவரின் வலையில் கடந்த வியாழக்கிழமை சிக்கியது.

அந்தச் சுறா சுமார் ஏழு அடி நீளமானதாக இருந்தது என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

அது கரைக்குக் கொண்டுவரப்பட்டு 83 ஆயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ந-17)



வடமராட்சி கிழக்கு, உடுத்துறையிலுள்ள சனசமூக நிலையம் ஒன்று நேற்றுமுன்தினம் தீக்கிரையாகியுள்ளது. வேம்படி முத்தமிழ் சனசமூக நிலையமே தீயால் முற்றாக எரிந்துள்ளது. தீ பரவியமைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர். சனசமூக நிலையத்திலிருந்த சுமார் 100 புத்தகங்களும் தளபாடங்களும் முற்றாக அழிவடைந்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ந-4,6)

### வவுனியா வடக்கில்

# மணிக்கணக்கில் நடந்தே பள்ளி செல்லும் மாணவர்

## போக்குவரத்து வசதிகள் செய்து தருமாறு கோரிக்கை

வவுனியா, ஜன. 3
வவுனியா வடக்கில் உள்ள 75 பாடசாலைகளில் பிரதான வீதியோரம் உள்ள 26 பாடசாலைகள் தவிர்ந்த 44 பாடசாலைகளுக்கு இன்றுவரையில் போக்குவரத்து வசதிகள் கிடையாது. மாணவர்கள் காலை உணவைக் கூட உண்ண நேரமில்லாது பசியுடனே பாடசாலைக்கு மணிக் கணக்கில் நடக்கின்றனர். இந்தப் பிரச்சினையைச் சம்பந்தப்பட்டவர்கள் நீக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட நெடுங்கேணி கோட்டப் பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின்பெற்றோர்கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:
நெடுங்கேணி சேம்மடு அனர்ந்தர் புளியங்குளம், விஞ்ஞானகுளம் பகுதிகளில் பாடசாலைகள் உள்ளன. அவற்றுக்கு இன்றுவரை போக்குவரத்து வசதிகள் கிடையாது. பாடசாலைகள் அனைத்தும் காலை 7.30 க்கு ஆரம்பிப்பிக்கும். எமது பிள்ளைகள் காலை 6.30 மணிக்கு நடக்க ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறு புறப்படும் பிள்ளைகள் ஒரு தேநீருடனேயே செல்ல முடியும்.

வவுனியா வடக்கு கல்வி வலயத்தைப் பொறுத்தவரையில் மொத்தம் 81 பாடசாலைகள் உள்ளன. அவற்றில் தற்போது 75 பாடசாலைகள் இயங்குகின்றன. அவற்றில் ஏ - 9 வீதியோரத்தில் ஓமந்தை முதல் கனகராயன் குளம் வரையிலும் புதுக்குளம் முதல் கல்மடுவரையான வீதியோரத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மட்டுமே வாகன சேவைகள் இடம்பெறுகின்றன. வேறு எந்த மார்க்கத்துக்கும் இன்றுவரைக்கும் போக்குவரத்து வசதிகள் கிடையாது.

எங்கள் பகுதி மாணவர்கள் கால் நடையாகவும் துவிச்சக்கர வண்டிகளிலுமே செல் கின்றனர். சிறுவர்கள் பெரியவர்கள் என்ற வேறுபாடு கிடையாது. பாடசாலை சென்ற பெண்பிள்ளைகள் சில சந்தர்ப்பத்தில் வீடு வருவதற்கு தாமதித்தால் தாய் அல்லது தந்தை தனது அன்றாட பணியை கைவிட்டு வீதிக்கு ஓடும் நிலமையே உள்ளது. எமது பகுதிகளுக்கும் சீரான போக்குவரத்து சேவைகளோ அல்லது குறிப்பிட்ட சில பாடசாலைகளை உள்ளடக்கும் வகையில் தனியான போக்குவரத்து வாகன வசதிகளையோ வழங்க முன்வர வேண்டும்.

இந்தப் பிரச்சினையைத் தீர்க்க அரச மற்றும் தனியார் பேருந்துகளின் சபைகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்குச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைக்கான அழுத்தங்களைக் கொடுத்து பிரச்சினையைத் தீர்க்க முன் வர வேண்டும்.- என்றனர். (ந-4,101)

## கிராமத்துக்கு ஒரு மில்லியன் திட்டங்கள் நிறைவு

யாழ்ப்பாணம், ஜன.3
வடமராட்சி கிழக்கில் கிராமத்துக்கு ஒரு மில்லியன் ரூபா செலவில் கடந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன.

வடமராட்சி கிழக்கில் 17 கிராம சேவகர் பிரிவுகளிலும் ஒரு மில்லியன் ரூபா செலவிலான வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. வீதிச் சீரமைப்பு, பொதுநோக்கு மண்டபங்கள் அமைத்தல், முன்பள்ளிகள் அமைப்பு உட்பட மற்றும் பல்வேறு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன என்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் தெரிவித்தது. அவற்றுக்கு பொது அமைப்புக்கள் முழு ஆதரவை வழங்கின என்றும் பிரதேச செயலகம் தெரிவித்து. (ந-17)

# ஓய்வூதிய அதிகரிப்பை வழங்குவதில் இழுத்தடிப்பு

அச்சுவேலி, ஜன.3
புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் ஓய்வுநிலை ஆசிரியர் - அதிபர்களுக்கு கிடைக்கக் கூடிய ஓய்வூதிய அதிகரிப்பு மற்றும் நிலுவைகளை வழங்குவதில் காலம் கடத்தி இழுத்தடிப்பு செய்யப்படுகின்றது என்று ஓய்வு நிலை ஆசிரியர்கள் அதிபர்கள் கவலை தெரிவித்தனர்.

இலங்கை ஆசிரியர்சேவை இலங்கை அதிபர் சேவை ஆகியவற்றுக்கு புதிய சேவைப்பிரமாணக் குறிப்பு 2014 ஆண்டு ஒக்ரோபர் 23, 24 ஆம் திகதிகளில் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் அறிவிக்கப்பட்டது.

ஆசிரியர் - அதிபர்களுக்கான புதிய சேவைப் பிரமாணக் குறிப்பு 2007 ஆம் ஆண்டு ஜுலை முதலாம் திகதி தொடக்கம் முன் கூட்டியே நடைமுறைக்கு வருகின்றது என்றும், அதன் மூலம் கிடைக்கும் சம்பளப் படிநிலை அதிகரிப்பு மற்றும் நிலுவைகள் 2011 ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியில் இருந்து வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

புதிய சேவைப்பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2007ஆம் ஆண்டுக்குப்பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர் அதிபர்களுக்கு அதிகரிப்புக்களை பெற்றுக் கொள்வதற்கும் அதனோடு தொடர்பான நிலுவைகளை பெற்றுக் கொள்வ தற்கும் வாய்ப்புக்கள் உள்ளன.

2011 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற ஆசிரியர் - அதிபர் 2016 ஆம் ஆண்டு முடியவுள்ள காலப்பகுதியில் 70 மாதங்களுக்கு நிலுவைக் கொடுப்பனவு, அத்துடன் மாதாந்த ஓய்வூதியக் கொடுப்பனவிலும் அதிகரித்த தொகையை பெற்றுக் கொள்ள முடியும். ஓய்வுபெற்ற என்ற வகையில் முன்னுரிமை அடிப்படையில் கொடுப்பனவுகளை வழங்க வேண்டும்.

பொருளாதார நெருக்கடி நிலையிலும் வயோதிப நிலையிலும் உள்ள ஓய்வு நிலை ஆசிரியர்- அதிபர்கள் தமக்குரிய கொடுப்பனவுகள் உரிய காலப்பகுதியில் வழங்காமல் இழுத்தடிக்கப்படுவதால் இறப்புக்குப் பிந்திய கொடுப்பனவாகத் தான் கிடைக்குமோ என விசனம் தெரிவிக்கின்றனர்.

மூத்த பிரச்சைகள் விடயத்தில் முன்னுரிமை அடிப்படையில் கருமங்கள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற கொள்கைத் தீர்மானம் உள்ள நிலையில் ஓய்வுநிலை ஆசிரியர் - அதிபர் விடயத்தில் ஓய்வூதியத் திணைக்களமும் - கல்வி அமைச்சும் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என ஓய்வு நிலை ஆசிரியர் - அதிபர்கள் கோருகின்றனர். (ந-11)



காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை உற்சவப்பெருவிழா நேற்றுத் திங்கட்கிழமை பல நூற்றுக்கணக்கான பக்தர்களின் அரோகராக் கோசத்துடன் பக்திபூர்வமாக ஆரம்பமானது. உற்சவத்தில் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பஞ்சரத பவனியும் மறுநாள் புதன்கிழமை அதிகாலை 2 மணி முதல் நடேசப் பெருமானுக்கு ஆருத்திரா அபிஷேகமும் அதிகாலை 5.30 மணிக்கு ஆருத்திரா தரிசனமும் நடைபெறும். மாலை 3.30 மணிக்கு திருவூடல் உற்சவமும் தொடர்ந்து தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ந-250)

## மைல்கல்லை சீரமைக்குமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 3
யாழ்ப்பாணம் - காரைநகர் பிரதான வீதி சங்கானையில் மல்லாகம் சந்தி என அழைக்கப்படும் இடத்தில் அமைந்திருந்த மைல கல்" உடைத்துச் சேதமாக்கப்பட்ட நிலையிலுள்ளது. அதனால் பயணிகள் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்தச் சந்தியின் மூன்று பக்கமும் மூன்று மைல் கல்கள் அமைக்கப்பட்டு பொன்னாலை, காரைநகர், கட்டுவன் போன்ற இடங்களின் திசையும் தூரமும் தமிழ் ஆங்கில சிங்கள மொழிகளில் எழுதப்பட்டிருந்தன. வெளியிடங்களில் இருந்துவரும் சுற்றுலாப் பயணிகளோ அல்லது தனிப்பட்டவரோ எந்தவித சிரமமின்றி தமது பயணத்தை அந்த இடங்களுக்குச் செல்ல இந்தக் கல் உதவியாக இருந்து வந்துள்ளது. மைல் கல் தற்போது சேதமாக்கப்பட்டுள்ளதால் அதைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ந-29)

## 2016இல் 50 ஆயிரம் டெங்கு நோயாளர்


கொழும்பு, ஜன. 3
2016ஆம் ஆண்டு, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 50 ஆயிரத்தையும் தாண்டியுள்ளதாகச் சுகாதார அமைச்சுத் தெரிவித்தது.

இதற்கமைய கடந்த 12 மாதங்களில், 77 இக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்தாகவும் 50,519 பேர் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும், சுகாதார அமைச்சின் தொற்று நோய்ப் பிரிவு சுட்டிக்காட்டியது.

மேல் மாகாணத்திலேயே 49.46 சதவீத மானவர்கள் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கமைய 3,407 பேர் கொழும்பு மாநகரத்துக்குட்பட்ட பகுதிகளிலும், 12,014 பேர் கொழும்பை அண்டிய பகுதிகளிலும் என மொத்தம் 15,421 பேர், கொழும்பு மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கம்பஹா - 6,263 பேர், களுத்துறை - 3,303 பேர், இரத்தினபுரி - 2,969 பேர், காலி - 2,702 பேர், குருநாகல் - 2,415 பேர், யாழ்ப்பாணம் - 2,227 பேர், புத்தளம் - 1,002 பேர், மட்டக்களப்பு - 537 பேர் மற்றும் அம்பாறை - 238 பேர் என்ற எண்ணிக்கையில் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சு மேலும் கூறியது.

(து)



மட்டக்களப்பு ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் பிரதேச செயலாளர் உ.உதயசிறிதர் தலைமையில் நேற்றுப் புத்தாண்டு உறுதியுரை எடுத்துக்கொண்டனர். (து)

# மட்டு. வாவியில் மீன்பிடியில் பெரும் பாதிப்பு

## ஜெலி மீன்களின் பெருக்கத்தால்

மட்டக்களப்பு, ஜன. 3
இந்தமுறை பருவ மழை பெய்யாததால் மட்டக்களப்பு வாவியில் சொறி முட்டைகள் (ஜெலி மீன்கள்) பல்கிப் பெருகியுள்ளன. இதனால் தமது மீன்பிடி பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளதாக வாவி மீனவர்கள் தெரிவித்தனர்.



ஏறாவூர் தொடக்கம் துறைநீலாவணை வரை பரந்து விரிந்து கிடக்கும் மட்டக்களப்பு வாவியில் சொறி முட்டைகள் எப்போதுமில்லாத வகையில் பெருகியுள்ளதால் மீன் பிடிக்காக வாவியில் வீசப்படும் வலைகளை அவை சேதப்படுத்தி விடுவதாக மீனவர்கள் கூறினர்.

இந்தச் சொறி முட்டைகள் வலைகளைச் சுருட்டிக் கயிறு போன்று முறுக்கிவிடுவதால் மீன்கள் அகப்படுவதில்லை என்றும், வலைகள் நாசமாகி விடுவதாகவும் மீனவர்கள் கூறுகின்றனர்.

வழமையாக சொறி முட்டைகள் வாவி உவர் நீரில் காலத்துக்குக் காலம் உற்பத்தியாகின்ற போதும் அவை மாரிகாலத்தில் நன்னீர் வெள்ளத்தோடு அழிந்து விடுவதுண்டு.

ஆனால், இம்முறை பருவ மழை பெய்யாததால் சொறி முட்டைகள் இயற்கையாக அழிவடையாமல் பல்கிப் பெருகியுள்ளன என்று மீனவர்கள் குறிப்பிட்டனர்.

இது குறித்து மட்டக்களப்பு மாவட்ட கடற்றொழில் பரிசோதகர் ஏ.ஏ. பரீட் தெரிவிக்கையில், "ஜெலி பிஸ்' எனப்படும் உவர் நீரில் உற்பத்தியாகும் உயிரிகள் வழமையாக வாவிகளில் நன்னீர் வெள்ளம் கலக்கும் போது அதில் இறந்துவிடக் கூடியவை.

ஆனால், இம்முறை நன்னீர் வெள்ளம் கடலுக்குள் செல்வதற்குப் பதிலாகக் கடற்பெருக்கு வாவிகளில் ஊடுருவியதால் இன்னும் அதிகமாகக் கடலில் காணப்படும் ஜெலி மீன்களும் வாவிக்குள் வந்து சேர்ந்து விட்டன. அதனாலேயே மீனவர்கள் தற்போது பாதிப்பைச் சந்தித்து வருகின்றார்கள்.

இயற்கையாக ஏற்படும் பெருமழை வெள்ளத்தினாலேயே இந்த ஜெலி மீன்கள் அழிய வாய்ப்புண்டு" என்று தெரிவித்தார். (து-46)

## 2017ஐ விற்பனை ஆண்டாக்கியுள்ள நல்லாட்சி அரசு

### பொது எதிரணி குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 3
பிறந்துள்ள 2017ஆம் ஆண்டு, விற்பனை ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது எனப் பொது எதிரணி தெரிவித்தது.

மாத்தறையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, அம்பாந்தோட்டைத் துறைமுக விற்பனையானது, இவ்வாண்டின் தொனிப் பொருளை உறுதி செய்துள்ளது என்று குறிப்பிட்டார்.

இந்த அரசின் வேலைத்திட்டங்கள் தொடர்பில், பொதுமக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். நல்லாட்சி என்று முத்திரை பதித்துக்கொண்ட இந்த அரசு, இந்த 2017ஆம் ஆண்டை, விற்பனை ஆண்டாகப் பிரகடனப்படுத்திக்கொண்டு உள்ளது. இந்தப் பிரகடனம், உத்தியோகபூர்வமாக இல்லாவிடினும், அரசின் வேலைத்திட்டங்கள், இந்தப் பிரகடனத்தை அடிப்படையாகக் கொண்டே செயற்படுத்தப்படுகின்றன -என்றார் அவர். (தி)

## இலங்கைக்கு தங்கம் கடத்தியவர் கைதானார்

கொழும்பு, ஜன. 3
டுபாயிலிருந்து இலங்கைக்குத் தங்கம் கடத்திய நபரை, கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகள், நேற்றுமுன்தினம் அதிகாலை கைது செய்ததுடன், அவரிடமிருந்து, 540 கிராம் தங்கத்தையும் கைப்பற்றினர்.

மட்டக்களப்பு, காத்தான் குடியைச் சேர்ந்த (வயது-45) நபரே, இதன்போது கைதுசெய்யப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சுங்கத் திணைக்களப் பிரிவினர் மேற் கொண்டு வருகின்றனர்.

(தி)

## ஹெரோயினுடன் பாகிஸ்தான் குடிமகன் கைது

கொழும்பு, ஜன. 3
சுமார் இரண்டரைக் கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளுடன் 46 வயதுடைய பாகிஸ்தான் குடிமகன் ஒருவர் கட்டுநாயக்க பன்னாட்டு விமான நிலையத்தில் வைத்துக்கைது செய்யப்பட்டார்.

குறித்த நபர் கட்டாரில் இருந்து இலங்கைக்கு வந்துள்ளமை தெரியவந்தது. இவரிட மிருந்து இரண்டு கிலோ 136 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(தி)

## மட்டக்களப்பில் 30 புதிய பாலங்கள்

மட்டக்களப்பு, ஜன. 3
மட்டக்களப்பு மாவட்டத்தில் போக்குவரத்துப் பிரச்சினையைக் குறைக்கும் வகையில் மாவட்டத்தின் 8 பிரதேச செயலாளர் பிரிவுகளில் புதிதாக 30 கிராமியப் பாலங்கள் அமைக்கப்படவுள்ளதாக மாவட்ட செயலர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இந்தப் பாலங்களை அமைப்பதற்காகச் சுமார் 600 மில்லியன் ரூபா நிதி மத்திய அரசின் மாகாண உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சால் செலவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

போரதீவுப்பற்று, மண்முனை தென்மேற்கு, மண்முனை மேற்கு, மண்முனை வடக்கு, ஏறாவூர்ப்பற்று, கோறளைப் பற்றுத் தெற்கு, கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று வடக்கு ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளிலேயே இந்தப் பாலங்கள் அமைக்கப்படவுள்ளன.

புதிய பாலங்களுக்கான வடிவமைப்பு வேலைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 2 பாலங்களுக்கான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், இவற்றுக்கான கட்டுமான வேலை விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார். (தி)

## நோயாளியின் கத்திக் குத்துக்கு இலக்கானார் மருத்துவ நிபுணர்

### உயிருக்கு ஆபத்தான கட்டத்தில் வைத்தியசாலையில் சேர்ப்பிப்பு

கொழும்பு, ஜன. 3
கொழும்பிலுள்ள பிரபல தனியார் வைத்தியசாலையொன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நோயாளியொருவரின் கத்திக் குத்துக்கு இலக்கான சிறப்பு மருத்துவரொருவர் ஆபத்தான நிலையில் அதே வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் சிறப்பு மனநல வைத்திய நிபுணரான ரோன் மகேந்திர (வயது- 41) என்பவரே காயமடைந்துள்ளார் எனவும், அவரது கழுத்து, முகம் மற்றும் தலைப் பகுதிகளில் பத்து கத்திக்குத்துக் காயங்கள் ஏற்பட்டிருப்பதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தக் கத்திக் குத்தை மேற்கொண்டவர் பொரலஸ்கமுவ, ரத்னபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 31வயது நபர் எனவும், அவர் ஒரு மனநோயாளி எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் கொம்பனித் தெரு பொலிஸார் தெரிவித்தனர்.

மருத்துவரின் பரிசோதனை அறையில் இந்தச் சம்பவம் நடந்திருப்பதாகவும், அவரது அலறலைக் கேட்டு அங்கு ஓடிவந்தவர்களை மீறிக் கொண்டுச் சந்தேகநபர் தப்பியோட முயற்சித்தபோது மடக்கிப் பிடிக்கப்பட்டிருப்பதாகவும், இவர் கடந்த ஒக்ரோபர் மாதம் 9ஆம் திகதியும் இதே வைத்தியசாலையில் இதே மருத்துவரைத் தாக்கியதாகவும்,மருத்துவரின் வேண்டுகோளால் அவருக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை எனவும் கொம்பனித்தெரு பொலிஸ் பொறுப்பதிகாரி தனஞ்சய சோமஜித் தெரிவித்தார்.

இந்த மருத்துவர் நோயாளிகளின் அந்தரங்க விடயங்களைப் பற்றி விசாரிக்கும்போது அந்த விடயங்கள் மூன்றாமவருக்குத் தெரியக்கூடாது என்பதற்காகப் பரிசோதனை அறையில் தாதியரையோ, உதவியாளர்களையோ அனுமதிப்பதில்லை எனவும் தெரியவருகிறது. (து)

## 1,492 கோடி ரூபாவை இலக்கு வைக்கின்றது கொழும்பு மாநகரசபை

கொழும்பு, ஜன. 3
இந்த வருடத்தில் கொழும்பு மாநகர சபை சுமார் 1,492 கோடி ரூபாவை இலக்காகக் கொண்டிருப்பதாக அதன் 2017ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு மாநகர சபை ஆணையாளரான கே.ஏ. அநுர அண்மையில் சமர்ப்பித்த வரவு-செலவுத்திட்ட அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

2017ஆம் ஆண்டுக்கான உத்தேச வரி வருமானமாக 418 கோடி ரூபாவும், வாடகை மற்றும் ஏனைய வருமானங்களாக 241 கோடி ரூபாவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

நீண்டகாலமாக நிலுவையில் இருக்கும் வரித்தொகை சுமார் 300 கோடி ரூபாவுக்கும் அதிகம் எனவும், அதில் 50 சதவீதமான தொகை அரச நிறுவனங்களுக்கு உரியது எனவும், அதனை அறிவிடுவதே நீண்டகாலமாக நிலவிவரும் பெரும் பிரச்சினை எனவும் வரவு- செலவுத்திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநகர சபையின் பிரதான வருமானம் அதன் வரி அறவீடுகளிலேயே தங்கியிருந்த போதிலும், அந்த வரிகள் வருடாந்தம் வெறும் 4 சதவீதத்தினாலேயே அதிகரிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பு மாநகர சபையின் பதவிக்காலம் 2016 ஜூன் மாதம் 30ஆம் திகதி முடிவடைந்த பின்னர் அதன் நிர்வாகம் ஆணையாளரின்கீழ் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த)

## ரயில் கடவைகளுக்கு மணி ஒலி மின் கதவு

கொழும்பு, ஜன. 3
ரயில் கடவைகளில் மணி ஒலியுடனான மின்சாரக் கதவு அமைக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் பி.ஏ. பி.ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

ரயில் கடவைகளில் பயன்படுத்தப்படும் மூங்கில்களுக்குப் பதிலாக மணி ஒலியுடனான மின்சாரக் கதவு அமைக்கப்படவுள்ளதாகவும் இதற்கான நடவடிக்கைகள் இந்த வருடம் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

முதல் கட்டத்தின் கீழ் 300 இடங்களில் இவை பொருத்தப்படவுள்ளன. இதற்கான கேள்விமனு தொடர்பான பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. மேலும் 200 இடங்களுக்கு மின்சாரவேலிகளை பொருத்துவதற்கான கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (த)



சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சில் நேற்று நடைபெற்ற புதுவருட நிகழ்வில் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ், அமைச்சின் செயலாளர் டீ.எம்.அமரதுங்க, இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசு உள்ளிட்ட அமைச்சின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர். (த)

# கிழக்கில் போதையை முற்றாக ஒழிப்போம்

### முதலமைச்சர் சூளுரை

மட்டக்களப்பு, ஜன. 3
கிழக்கு மாகாணத்தில் இருந்து போதையை முற்றாக ஒழிக்கும் ஆண்டாக 2017 ஆம் ஆண்டு அமையும் எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக போதைக்கு எதிரான பேரணி பெப்ரவரி மாதம் முதலாம் திகதி; ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக வும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்போது மதுபானப் பாவனை அதிகரித்திருப்பதுடன், சில பகுதிகளில் ஹெரோயின் உள்ளிட்ட போதைப் பொருள்களின் பாவனையும் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

போதைப் பாவனைக்குச் சில பாடசாலை மாணவர்களும் இலக்கு வைக்கப்படுகின்றமை வேதனை தருவதாகவும் அவர் கவலை வெளியிட்டுள்ளார்.


இதனூடாக கிழக்கு இளைஞர்களின் எதிர்காலம் கேள்விக்கு உட்படுத்தப்படுவதுடன், அவற்றை முளையிலே கிள்ளி எறியாவிட்டால் அபாயகரமான நிலை உருவாகும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக் காலமாக இடம்பெறும் கொலை, கொள்ளை மற்றும் கற்பழிப்பு சம்பவங்களை ஆராயுமிடத்து, அதன் பின்னணியில் போதைவஸ்துப் பாவனை முக்கிய உடந்தையாக இருப்பதாகவும், எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஏறாவூரில் இருந்து முன்னெடுக்கப்படவுள்ள போதைப் பொருள் பாவனைக்கு எதிரான பேரணியில் கிழக்கின் சுபீட்சத்தை கனவு கண்டுள்ள அனைவரும் கைகோக்க வேண்டும் என்றும்- முதலமைச்சர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அத்துடன் போதைப் பொருள் விநியோகஸ்தர்கள் மற்றும் பாவனையாளர்கள் குறித்த தகவல்களை மக்கள் உடனடியாக வழங்குவதற்குப் போதைப் பொருளுக்கு எதிரான செயலணி ஒன்று ஜனாதிபதியினால் கிழக்கில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. அதனூடாகத் தகவல் வழங்குபவர்களின் இரகசியத் தன்மையும் பாதுகாக்கப்படும் என்றும்-கிழக்கு முதலமைச்சர் உறுதியளித்துள்ளார். (த)

# பௌத்த வரலாற்று எச்சங்களைத் தேடி கிழக்கைக் கிண்ட முயலும் நல்லாட்சி

### முஸ்லிம் காங்கிரஸ் குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன. 3
நீண்ட காலத்தின் பின்னர் பௌத்த தீவிரவாத அமைப்பினரும், சில பொறுப்பளிக்கப்பட்ட அமைச்சர்களும் பௌத்த வரலாற்று எச்சங்களைத் தேடி கிழக்கைக் கிண்ட ஆயத்தமாகி வருகின்றனர் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்தார்.

நல்லாட்சியின் ஒரு பகுதியினருக்கு, பௌத்த சிங்கள உணர்வூட்டலை அரசியல் ஆயுதமாகக் கையில் எடுக்க வேண்டிய அவசியமும்-அவசரமும் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் இருந்ததைப்போல், மதம் சார்ந்ததாக இவ்வுணர்வூட்டல் அமையக் கூடாது என்று, நல்லாட்சியினர் விரும்புவதாகவும்-எனவே, வடக்கு - கிழக்கில் வாழும் சிங் களவர்களின் நில, மத மற்றும் இன அடிப்படையிலான உரித்துகள் தொடர் பா னதாக இந்த உணர்வூட்டலை அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

இதனை நிறைவேற்றுவதற்காகச் சிறுபான்மையினரின் வாழ்விடங்களை இலக்கு வைத்து, அங்கு பௌத்த புராதன சின்னங்களைக் கண்டுபிடிக்கும் ஒரு லாவக விளையாட்டை மேற்கொண்டு வருதாகவும் பஷீர் சுட்டிக்காட்டினார். (த)

## கைதிகளுக்கு புதுவருடத்தில் அலுமினிய உணவுப் பெட்டி

கொழும்பு, ஜன. 3
இந்த வருடம் முதல் சிறைக்கைதிகளுக்கான உணவை விநியோகிக்க ஒவ்வொருவருக்கும் அலுமினியத்தினால் செய்யப்பட்ட உணவுப்பெட்டியொன்று வழங்கப்படவுள்ளதாகச் சிறைச் சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அரசு இணக்கம் தெரிவித்திருப்பதாகவும், கைதிகளுக்கு உணவு வழங்கும்போது ஏற்படும் பாரபட்சம் மற்றும் அநீதி ஆகியவற்றை விலக்கிக் கொள்வதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாகவும் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

முதற் கட்டமாக நாட்டிலுள்ள ஒருசில சிறைச்சாலைகளில் மாத்திரம் இந்த உணவுப்பெட்டிகள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும், ஆரம்பத்தில் 18 ஆயிரம் பெட்டிகள் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் கூறினார்.

இலங்கை வரலாற்றில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த உணவுப்பெட்டி மூலம் கைதிகளுக்கான உணவுகள் அவர்களது சிறைக்கூடங்களுக்கே எடுத்துச்செல்லப்பட்டு, விநியோகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (த)

# டிஜிற்றல் மயமாகின்றது பரீட்சைத் திணைக்களம்

கொழும்பு, ஜன. 3
2016ஆம் ஆண்டில் இலங்கையின் மிகச் சிறந்த அரச நிறுவனமாக நாடாளுமன்ற கணக்காய்வுக் குழுவால் தெரிவுசெய்யப்பட்டிருக்கும் இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் இந்த ஆண்டில் டிஜிற்றல் மயப்படுத்தப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

திணைக்களத்தின் தற்போதைய நடவடிக்கைகளை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் பரீட்சைப் பெறுபேறுகள் மற்றும் பெறுபேற்றுச் சான்றிதழ்களைத் துரிதப்படுத்துவதற்கும் டிஜிற்றல் முறை அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்.ஜே.புஷ்பகுமார தெரிவித்துள்ளார். கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் ஆலோசனையின்கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்த டிஜிற்றல் திட்டத்துக்கான நிதி கல்வியமைச்சால் ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் சுனில் ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு இந்த வருடம் வழங்கப்படவுள்ள ரப் கணினிகள் மூலம் அவர்களுக்கான மாதிரி வினாத்தாள்களைப் பிரசுரிக்கவும் அவர்களே தெரிந்துகொள்வதற்கும் இந்த டிஜிற்றல் முறை வழிவகுக்கும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கூறினார்.

திணைக்களத்தின் தரவுகளை நீண்டகாலம் பாதுகாத்தல், அவற்றின் இரகசியத் தன்மையைக் காப்பாற்றல், மாகாண மற்றும் வலயக் கல்விப் பணிமனைகளுடனான துரிதத் தொடர்புகளை உறுதிப்படுத்தல், பாடசாலைகளுடனான தகவல் தொழில்நுட்பத் தொடர்புகளை மேம்படுத்தல், வகுப்பறைகளுடன் ஒன்லைன் முறையில் தொடர்புகொள்ளல் போன்றவை இந்த டிஜிற்றல் முறை மூலம் சாத்தியமாகும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் புஷ்பகுமார நம்பிக்கை தெரிவித்தார். (த)

# இளைஞர்களை ஒற்றுமையாக்கியே நீடித்த சமாதானத்தைப் பெறமுடியும்

## மட்டு. இயேசு சபைத் துறவி அடிகளார் தெரிவிப்பு

மட்டக்களப்பு, ஜன. 3

சமாதான எண்ணக்கரு சகல சமூகங்களையும் சேர்ந்த இளைஞர்களின் உள்ளத்திலும் விதைக்கப்பட வேண்டும். நீடித்த சமாதானத்தை வேறு வழிகளில் அடைய முடியாது.

இவ்வாறு மட்டக்களப்பு இயேசு சபைத் துறவி அடிகளார் ஜேசெப் மேரி தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது-

உலக இயங்கியலில் இளைஞர்களின் பங்களிப்பு இன்றியமையாதது. அது நன்மையில் தொடங்கி நன்மையில் முடிவடைவதற்கான வழிவகைகளை நாம் இளைய சமுதாயத்தினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பிடல் காஸ்ட்ரோ தன்னுடைய நாட்டின் விடிவுக்காக தன்னுடைய இளமைக் காலத்தை அர்ப்பணித்தவர். அன்று அவரைத் திட்டித் தீர்த்த நாடுகள் இப்பொழுது அவரது மறைவு கண்டு அவருக்குப் புகழாரம் சூட்டி அனுதாபம் தெரிவிக்கின்றன.

இலங்கை நாட்டிலும் சமாதானம் தழைத்தோங்கி மக்களுக்கு விடிவும் சுபீட்சமும் தர வேண்டுமாகில் இந்த நாட்டில் வாழும் அனைத்து சமூக இளைஞர்களின் உள்ளத்திலும் சமாதானம் விதைக்கப்பட வேண்டும்.

சிங்கள, தமிழ், இஸ்லாமிய இளைஞர்கள் இனத் துவேசத்தோடு நோக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அவர்கள் இதய அனுசரணையோடு அணுகப்பட வேண்டியவர்கள்.

நாட்டின் சட்டத்தை அனைத்திற்கும் மேலாக நாம் மதிக்கின்றோம். ஆனால், இங்குள்ள பேரின மதவாத குருக்களின் ஆத்திரமூட்டும் செயல்களைப்பார்த்து சிறுபான்மை இன இளைஞர்கள் அதிர்ந்து போய் ஆத்திரப்பட்டு நிற்க வேண்டிய சூழ்நிலை கடந்த வருடம் இருந்தது. அத்தகைய துரதிர்ஷ்ட வசமான சூழ்நிலையை இந்த ஆண்டும் நீடிக்க விடக் கூடாது. பேரின மதவாத மதகுருக்கள் நீதியையும் சட்டத் தையும் அவமதிக்க, நீதிமன்ற உத் தரவை நடுத்தெருவில் வைத்துக் கிழித்தெறிய இனிமேலும் இடமளிக்கக் கூடாது.

சமாதானத்துக்குச் சாபக்கேடான சகலவழிகளும் மூடப்பட வேண்டும். இல்லையேல் அழிவு நமக்கு அருகில் வந்து கதவைத் தட்டும்.-என்றார்.

(ற-4,46)

# பெண்களின் உள்ளாடைகளை திருடினார் என ஒருவர் கைது

திருகோணமலை, ஜன. 3

திருகோணமலை.கோமரங்கடவெல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல மாதங்களாக பெண்களின் உள்ளாடைகளைத் திருடினார் என்ற குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோமரங்கடவெல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவரே கைது செய்யப்பட்டார்.

அவர் மக்களால் தாக்கப்பட்ட நிலையில் மீட்கப்பட்டு நேற்று அதிகாலை திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாக தெரியவிக்கப்பட்டது.

குறித்த பகுதியில் பல மாதங்களாக பெண்களின் உள்ளாடைகள் காணாமல் போயிருந்தன. நேற்று அதிகாலை ஒருவர் வீடொன்றுக்குள் சென்று உள்ளாடைகளை திருடிய போது, வீட்டு உரிமையாளர் கண்டு துரத்திச்சென்று பிடித்துள்ளார். பிடிக்கப்பட்டவரிடம் இருந்து உள்ளாடைகள் சிலவும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-4,45)

# சமுதாயத்துக்கு சேவையாற்றுவது அனைவரினதும் முக்கிய கடமை

## கிழக்கு பல்கலை. துணைவேந்தர் தெரிவிப்பு

செங்கலடி, ஜன. 3

பல்கலைக் கழகத்தில் தொழில் புரியும் ஒவ்வொருவரும் பொது மக்களின் வரிப் பணத்தில் இருந்துதான் சம்பளம் பெறுகின்றோம். சமுதாயத்துக்கு சேவை செய்ய வேண்டியது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமை.

இவ்வாறு கிழக்கு பல்கலைகழக துணை வேந்தர் ரி.ஜெயசிங்கம்

> பல்கலைகழகம் முற்று முழுதான அரச தாபனம். ஒவ்வொரு ரூபாவும் பொது மக்களின் வரிப் பணத்தில் இருந்து கிடைக்கின்றது. அதன் காரணமாக சமுதாயத்துக்குச் சேவை செய்ய வேண்டியது கிழக்கு பல்கலைகழகத்தின் தலையாய கடமையாக உள்ளது.

தெரிவித்தார்.

கிழக்கு பல்கலைகழகத்தில் 2017 ஆம் ஆண்டின் முதல் நாள் நிர்வாகப் பணிக்கான ஒன்றுகூடல்கிழக்குப்பல்கலைக் கழக உபவேந்தர் கலாநிதி த.ஜெயசிங்கம் தலைமையில் நேற்று நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது-

பல்கலைகழகம் முற்று முழுதான அரச தாபனம். ஒவ்வொரு ரூபாவும் பொது மக்களின் வரிப் பணத்தில் இருந்து கிடைக்கின்றது. அதன் காரணமாக சமுதாயத்துக்குச் சேவை செய்ய வேண்டியது கிழக்கு பல்கலைகழகத்தின் தலையாய கடமையாக உள்ளது.

கிழக்கு பல்கலைக் கழகத்தில் எவ்வாறான வேலைத் திட்டங்களைச் செய்தாலும் சமூகத்துக்கு கூடுதலான வேலைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த வாரத்திலிருந்து கிழக்குப் பல்கலைகழகத்தில் வேலை செய்யும் ஒவ்வொருவரும் தங்களின் கடமைகளை மேலும் திறம்பட நடத்திக் காட்ட வேண்டும்.

பல்கலைகழகத்தில் இடமாற்றங்கள் இல்லை. ஓய்வு நிலை அடையும் வரைக்கும் பணிகளை செய்யவேண்டிய ஒரு தாபனம்.

பல்கலைகழகத்தில் வேலை செய்ய வருகின்றவர்கள் அவர்களின் வாழ்க்கைகையை ஓய்வு நிலை அடையும் வரை கழிக்கவேண்டி நிலை உள்ளது. அதன் காரணமாக சிறந்த வேலைத் திட்டங் களையும் சேவைகைளையும் செய்யவேண்டும்.

வாழ்வையும் தாழ்வையும் பல்கலைகழகம் நிர்வகிக்கின்றது. பல்கலைகழகம் வாழ்ந்தால் அனைவரும் வாழ்வோம். பல்கலைகழகம் உயர்ந்தால் அனைவரும் உயர்வோம். - என்றார்.


நிகழ்வில் தேசியக் கொடி மற்றும் பல்கலைக் கழகக் கொடிகள் ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டதும் இந்த ஆண்டுக்கான சத்தியப் பிரமாணத்தை எடுத்துக் கொண்டனர்.

(ற-4)

# வேலைவாய்ப்பு கேட்டு வீதியில் இறங்கிய முன்னாள் போராளிகள்

கிளிநொச்சி, ஜன. 3

தமக்கான தொழில் வாய்ப்புக்களை அரசியல் தலைவர்கள் உருவாக்கித் தரவேண்டும் என்று வலியுறுத்தி நூற்றுக்கும் மேற்பட்ட முன்னாள் போரா ளிகள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



ஏ-9 வீதியில் இரணைமடுச் சந்தியில் அவர்களால் கவனவீர்ப்பு போராட்டம் நடத்தப்பட்டது.

இரணைமடுவில் அமைந்துள்ள சிவில் பாதுகாப்பு திணைக்களத்துக்கு முன்பாக ஒன்று திரண்டு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"நாங்கள் புனர்வாழ்வு பெற்று வெளியில் வந்த காலம் முதல் நிரந்தர தொழில் இன்றி பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் வாழ்கின்றோம்.

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்கு புதிதாக ஆள்களைச் சேர்க்கின்றனர் என்று எங்களுக்குத் தகவல் கிடைத்தது. புனர்வாழ்வு பெற்று விடுதலையான கடிதம் உள்ளிட்ட ஆவணங்களுடன் வருமாறு தகவல் வெளிவந்தது. அதன்படி இங்கு வந்திருகின்றோம். எங்களுக்கு வேலைவாய்ப்பைத் தாருங்கள்"- என்று சிவில் பாதுகாப்புத் திணைக்கள கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர வீரசிங்கவிடம் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"ஆரம்பத்தில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் வேலைவாய்ப்புக்கு ஆள்கள் உள்வாங்கப்பட்டபோது பெரும்பாலான முன்னாள் போராளிகள் தடுப்பில் இருந்து வெளிவரவில்லை. வெளிவந்தவர்களில் பலர் அப்போது இணைந்து கொள்வதில் விருப்பம் தெரிவிக்கவில்லை. புதிதாக படையினருக்கு ஆள்கள் சேர்க்கின்றார்கள் என்று பரப்புரை செய்யப்பட்டமையே அதற்குக் காரணம். இப்போது அவர்களுக்கு மாதாந்தம் முப்பதாயிரம் ரூபாவுக்கு மேலதிகமான சம்பளத்துடன் பண்ணைகளில் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதை அறிந்தோம். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் எமக்கும் வேலை தாருங்கள்.

நாங்கள் பல்வேறு இடங்களில் வேலை வாய்ப்புக் கோரினால் முன்னாள் போராளிகளுக்குதானே சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலை இருக்கிறது என்று கூறுகிறார்கள்''- என்று முன்னாள் போராளிகள் தெரிவித்தனர்.

"சிவில் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு புதிதாக ஆள்களை எடுப்பதாக வெளியான தவறான தகவலை அடிப்படையாக கொண்டு கூடியிருக்கிறீர்கள். சிவில் பாதுகாப்பு திணைக்களத்தை பொறுத்தவரை தற்போதைக்கு புதிதாக ஆள்கள் எவரையும் உள்வாங்கும் நிலையில் இல்லை. உங்களைப் பார்க்கும்போது கவலையாக இருக்கிறது. இந்த விடயத்தில் எங்களால் எதுவும் செய்ய முடியாது. இது கொழும்பு மட்டத்தில் உயரதிகாரிகளால் தீர்மானிக்கப்படுகின்ற விடயம்"- என்று சிவில் பாதுகாப்புத் திணைக்கள கிளிநொச்சி கட்டளை அதிகாரி மேஜர் சாகர வீரசிங்க தெரிவித்தார்.

பின்னர் அங்கிருந்து வெளியேறிய முன்னாள் போராளிகள் இரணைமடுச் சந்தியில் சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தில் வேலைவாய்ப்புக் கோரி கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். முன்னாள் பெண் போராளிகள் தமது குழந்தைகளுடன் கலந்துகொண்டனர். 170 பேர் கையொப்பமிட்டு வேலை வாய்ப்புக் கோரிக்கை அடங்கிய மனு ஒன்றையும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகத்திடம் கையளித்தனர்.

(ற-4,6,34,35)

# குடியிருப்புக்களுக்கு மத்தியில் சுன்னாகம் பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன. 3

மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அமைக்க எடுக்கப்படும் நடவடிக்கைக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் வரும் சுன்னாகம் மத்தி கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியைச் சுவீகரித்து அதில் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளை அந்தப் பகுதி மக்கள் தீவிரமாக எதிர்ப்பதோடு இது தொடர்பாக பிரதேச செயலர் உள்ளிட்ட உயர் மட்டத்தினர் பலருக்கும் மனுக்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

அரச காணிகள் பல இப் பகுதியில் உள்ள போதிலும் மக்கள் நெருக்கமாக வாழ்கின்ற பகுதியொன்றில் பொலிஸ் நிலையம் அமைக்கப்படுவதைத் தாம் விரும்பவில்லை எனத் தெரிவித்து முடவேம்படி எனும் பெயரைக் கொண்ட பிரதேச மக்கள் மேற்படி மனுவில் கையொப்பமிட்டு அதனை அனுப்பி வைத்துள்ளனர்.

சுன்னாகம் கொத்தியாலடி மயானத்துக்கு அருகில் பொலிஸ் நிலையம் அமைப்பதற்குக் காணி ஒதுக்கப்பட்ட போதிலும் அதைவிடுத்து மேற்படி காணியைச் சுவீகரிப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் அப்பகுதி மக்களிடையே கடும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. (க)

## தேர்தல் வேட்பாளர்களுக்கு சு.கவின் ஒழுக்கக் கோவை

கொழும்பு, ஜன. 3

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் களமிறங்கவுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளர்கள் பின்பற்றவேண்டிய ஒழுக்கநெறிகளைக் கொண்ட அறிவுறுத்தலொன்று அந்தக் கட்சியின் மத்திய நிறைவேற்றுக் குழுவால் வெளியிடப்பட்டிருப்பதாக செயலாளர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

கட்சியின் இறைமையையும், நற்பெயரையும் காப்பாற்றுவதற்காக இந்த ஒழுக்கக் கோவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும், சரியான ஒழுக்கநெறிகளைப் பின்பற்றாதவர்களால் கட்சியின் நற்பெயர் கடந்த காலங்களில் வெகுவாக சிதைக்கப்பட்டிருப்பதாலேயே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப் பதாகவும் அவர் தெரிவித்தார்.

கட்சியில் தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் ஆலோசனையின்பேரில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த ஒழுக்கநெறிகள் சரியாகப் பின்பற்றப்படவேண்டுமென வேட்பாளர்களுக்கு கண்டிப்பான நிபந்தனை விதிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (கு)

## கல்முனைக்குடியில் 6 மீனவர்கள் மாயம்

அம்பாறை, ஜன 3

அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடிக் கடற்கரையில் இருந்து மீன்பிடிப்பதற்காக இரண்டு இயந்திரப் படகில் சென்ற 6 மீனவர்கள் 8 நாள்களாகியும் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை என மீனவர்களின் உறவினர்கள் பொலிஸாரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளதாகக்கல்முனைப் பொலிஸார் தெரிவித் தனர்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர்கள் வழமை போலஆழ்கடலுக்குச்சென்று 2 அல்லது 3 தினங்களில் மீன்பிடித்துக் கொண்டு கரை திரும்புவது வழமையானது. இருந்தபோதும் கடந்த 24 ஆம் திகதி கல்முன்னைக்குடிக் கடற்கரையில் இருந்து இரண்டு இயந்திரப் படகுகளில் 6 மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ளனர் .

அவர்களுடனான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதுடன் 8 நாள்களாகியும் கரை திரும்பாததையடுத்து, அவர்களைத் தேடி மீட்டுத்தருமாறு மீனவர்களின் உற்வினர்கள் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இது தொடர்பாக பொலிஸ் உயர் அதிகாரிகள் மற்றும் கடற்படையினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் கூறினர். (கு)

## சந்திரசேகரனுக்கு உருவச்சிலை

கொழும்பு, ஜன. 3

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெ.சந்திரசேகரனுக்கு தலவாக்கலையில் உருவச்சிலை அமைக்கப்படுமென அமைச்சர் பழனி திகாம்பரம் உறுதியளித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அமரர் சந்திரசேகரனின் குடும்பத்தாருடன் கலந்துரையாடி அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

தலவாக்கலையில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற அமரர் சந்திரசேகரனின் 7ஆவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அரசியல் சூழ்நிலைகள் காரணமாக மலையக மக்கள் முன்னணியிலிருந்து விலகவேண்டிய நிர்ப்பந்தம் தமக்கு ஏற்பட்டிருந்தாலும், தான் அங்கம் வகித்த கட்சிக்கு ஒருபோதும் துரோகம் இழைக்க மாட்டேன் என்றும் திகாம்பரம் கூறினார். (கு)

# வறட்சி நிலைக்கு முகம் கொடுக்க திட்டங்கள் தயார்

### கமத்தொழில் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, ஜன. 3

இலங்கை இவ்வாண்டில் எதிர்கொள்ளவுள்ள வறட்சிக்கு முகங்கொடுக்கும் வகையிலான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாக கமத்தொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் விஜயக்கோன் தெரிவித்தார்.

நாட்டில் அரிசிக்குத் தட்டுப்பாடு நிலவாமலிருக்கும் வகையில், அந்தத் திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

இரண்டரை மாதங்களில் அறுவடையைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பீ.ஜீ.250 ரக நெல்லைப் பயிரிட்டு, விவசாயிகளிடமிருந்து ஆயிரம் புசல் நெல்லைக் கொள்வனவு செய்யவதற்காக, அவ்வகை நெல்லினங்களை, அடுத்த சிறுபோகத்தில் பயிரிடுவதற்காக விநியோகித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தற்போதைக்குக் கிடைக்கப்பெறும் மழையைக் கொண்டு மேலும் 4 இலட்சம் ஹெக்ரேயரில் நெற்பசெய்கையை மேற்கொள்ள எதிர்ப்பார்ப்பதாகத் தெரிவித்த அவர், அதன் மூலம், எதிர்வரும் ஜூலை மாதம் வரை, அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

நெற் செய்கை மாத்திரமல்ல, மரக்கறி மற்றும் பழப் பயிர்ச்செய்கையும், வறட்சியால் பாதிக்காத வகையில், விவசாய அமைச்சருடன் இணைந்து, திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பணிப்பாளர் நாயகம், மேலும் தெரிவித்தார். (கு)

## ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் பதவிக்காலம் மார்ச்சில் முடிவு

பாரிய ஊழல் மற்றும் துர்நடத்தைகள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக் குழுவின் பதவிக்காலம் இவ்வருடம் மார்ச் மாதத்துடன் முடிவடையவுள்ளது.

2015 மார்ச் 6ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவின் பதவிக்காலம் 2016 மார்ச் 6ஆம் திகதி முடிவடைந்தது.

எனினும், அதன் பதவிக் காலத்தை ஜனாதிபதி மேலும் ஒரு வருடகாலத்துக்கு நீடித்தார்.

1904/57 எனும் விசேட வர்த்தமானிப் பிரசுரம் மூலம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக் குழுவின் பதவிக்காலம் 2017 மார்ச் மாதத்துக்குப் பிறகு நீடிக்கப்படுமா என்பதைப் பற்றிய தீர்மானம் ஜனாதிபதியிடமே உள்ளதாக ஆணைக்குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## பிச்சைக்காரர்களுக்கு இடையே கத்திக்குத்து

### ஒருவர் படுகாயமுற்று வைத்தியசாலையில்

புத்தளம், ஜன. 3

புத்தளம் மீன் சந்தைக்கு அருகில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நண்பகல், இரண்டு யாசகர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், கத்திக் குத்துக்கு இலக்காகி ஒருவர் படுகாயமடைந்துள்ளார் என புத்தளம் தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் அனுர குணவர்தன தெரிவித்தார்.

இரண்டு பிச்சைக்காரர்களும் ஒரே இடத்தில் உறங்கிக் கொண்டிருந்தபோது, இருவருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றிய நிலையில், கைகலப்பாக மாறியதுடன், அதில் ஒருவர், மற்றையவரின் கழுத்து மற்றும் வயிற்றுப் பகுதிகளில் கூரிய கத்தியால் கடுமையாகக் குத்தியுள்ளார்.

கத்திக்குத்துக்கு இலக்கான பிச்சைக்காரர், படுகாயமடைந்த நிலையில், புத்தளம் தள வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இது குறித்து, உடனடியாகப் புத்தளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணைகளை நடத்தியதுடன், கத்திக்குத்தை மேற்கொண்டதாகக் கூறப்படும் பிச்சைக் காரரை கைது செய்துள்ளனர். (கு)



## 3 ஆலயங்களில் பணம், நகைகள் கொள்ளையடிப்பு

*சந்தேகநபரைத் தேடும் ஹற்றன் பொலிஸார்*

ஹற்றன், ஜன. 3

ஹற்றன் டிக்கோயாவுக்கு உட்பட்ட மூன்று ஆலயங்களில், பணம் மற்றும் தங்க ஆபரணங்களைக் கொள்ளையடித்துச் சென்றவரை கைது செய்வதற்கான நடவடிக்கையில், ஹற்றன் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

ஹற்றன் டிக்கோயா அம்மன் ஆலயம், வனராஜா மேற்பிரிவு மருதவீரன் ஆலயம், வனராஜா விநாயகர் ஆலயம் என்பவற்றிலே, இக்கொள்ளைச் சம்பவங்கள், நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றுள்ள தாகப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அம்மன் ஆலயத்தில், அம்மனுக்கு சாத்தப்பட்டிருந்த தாலிக்கொடி, 4 இலட்சம் ரூபா பணம், பிள்ளையாருக்குச் சாத்தப்பட்டிருந்த வெள்ளி ஆபரணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருதவீரன் ஆலயத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமராவின் உதவியுடன், கொள்ளையில் ஈடுபட்ட நபரை அடையாளங்கண்டுள்ள பொலிஸார், அவரைக் கைதுசெய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.


இந்தத் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர், பலதிருட்டுக்களுடன்தொடர்புபட்டுள்ளதாகவும் இவர் பொலிஸாரினால்தேடப்பட்டு வந்தவரென்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர், திருடும்போது அலைபேசியில் உரையாடிக்கொண்டே திருடும் காட்சிகள் சிசிரிவி கமராவில் பதிவாகியுள்ளதால், திருட்டுடன் பலர் தொடர்புபட்டிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (கு)

## சீனி இறக்குமதியாளர்களிடம் 2 கோடி மேலதிக வரி அறவீடு

கொழும்பு, ஜன. 3

கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு முதல் இறக்குமதி செய்யப்பட்ட சீனிக்கு விதிக்கப்பட்ட மேலதிக வரியான 6 ரூபாவைச் செலுத்தாமல் துறைமுகத்திலிருந்து ஒருசில கொள்கலன்களை விடுவித்துச் சென்ற வர்த்தகர்களிடமிருந்து குறிப்பிட்ட மேலதிக வரியாக இரண்டு கோடியே பத்து இலட்சம் ரூபாவை அறவிடச் சுங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. சீனி கிலோவொன்றுக்கு 6 ரூபா வரியை அதிகரித்து நிதியமைச்சு விடுத்த சுற்றுநிருபம் சுங்கத் திணைக்களத்துக்குக் கிடைப்பதற்கு முன் அன்றைய இரவே வெளியேற்றப்பட்ட இந்த சீனிக் கொள்கலன்கள் மீதான மேலதிக வரியை அறவிடத் தீர்மானம் எடுக்கப்பட்டி ருப்பதாகவும், சீனிக்கான வரி அதிகரிக்கப்படவிருப்பதாக முன்கூட்டியே தகவல் கிடைத்ததும் இந்த இறக்குமதியாளர்கள் அந்த வரியிலிருந்து தப்புவதற்காக கொள்கலன்களை அவசர அவசரமாக வெளியேற்றியமை உறுதியானதாகவும் சுங்கத் திணைக்களத்தின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். (கு)



# காரைநகர் இலங்கை வங்கி கிளை நவீனமயப்படுத்தப்பட்டது





**தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திர சேவை ஆரம்பம்**

காரைநகர் இலங்கைவங்கி கிளையில் தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திர சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசெம்பர் மாதம் 20 ஆம் திகதி வங்கியின் பொதுமுகாமையாளர் பி.செல்வக்குமர் தலைமையில் இடம்பெற்ற புதிய தன்னியக்க பணப்பரிமாற்ற இயந்திர சேவையை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இலங்கை வங்கியின் வடமாகாண உதவிபொது முகாமையாளர் எம்.ஜே.பிரபாகரன் கலந்துகொண்டு சேவையை ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் காரைநகர் பிரதேச செயலக கணக்காளர் திருமதி எஸ்.ராதிகாவும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. காரைநகர் பிரதேச வாழ் வாடிக்கையாளர்களின் நலன்கருதி மேற்படி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

## புதிய மால்வேர் அடங்கிய குறுந்தகவல்கள்

### அதிதிறன் பேசிகளின் தகவல் செயலியை செயலிழக்க வைக்கிறது

அதித்திறன் பேசிகளை பாவனைக் குட்படுத்தியுள்ள பாவனையாளர்களினால் பகிர்ந்து கொள்ளப்பட்டு வருகின்ற புதிய மால்வேர் அடங்கிய குறுந்தகவல்கள் அதித்திறன் பேசிகளின் தகவல் செயலியை செயலிழப்பு செய்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி அதிகளவான தரவுகளை கொண்டுள்ள இந்தக் குறுந்தகவல்கள் ஐகிளவுட் மூலம் பலருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இந்தக் குறுந்தகவலை திறக்கும் போது தகவல் செயலி முற்றிலும் செயலிழந்து போவதாகவும் வேலைகளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் கைபேசியை மீள் தயார்ப்படுத்தலுக்கு உட்படுத்தும் போதும் (ஹார்டு ரீசெட்) அவற்றில் இப் பிரச்சினையானது சரி செய்யப்படவில்லை என்பது நோக்கத்தக்கது.



இவைதவிர மால்வேர் பிரச்சினையை முதலில் கண்டறிந்து கொண்டது யூடியூபர் வின்செடிஸ் 13 என கூறப்பட்டுள்ளது.


அதித்திறன் பேசிகளின் தகவல் செயலியை செயலிழப்புச் செய்யும் இந்த மால்வேர் ஐ.ஓ.எஸ் 9 தொடக்கம் ஐ.ஓ.எஸ் 10.2.1 பீட்டா பதிப்புகள் வரை பகிர்ந்து கொள்ளப்படுகிறது. காணொலிகளில் தகவலை திறந்ததும் செயலியானது முற்றிலும் வேலை செய்யாமல் போகிறது.

எனவே இதற்குரித்தானதாக அப்பிள் சார்பில் புதிய ஓ.ரீ.எ தரவேற்றம் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நுட்பம்

## அதி நவீன தொழில்நுட்பங்களுடன் பாற் பண்ணை

### 90 கோடி ரூபாவை முதலிடும் சுவிற்சர்லாந்து முதலீட்டாளர்கள்



அதி நவீன தொழில்நுட்பங்களுடன் கூடியதான பாற் பண்ணை ஒன்றினை இலங்கையில் அமைப்பதற்கு சுவிற்சர்லாந்து நாட்டை சேர்ந்த முதலீட்டாளர்கள் முன் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 90 கோடி ரூபாவை முதலீடு செய்யவுள்ளதாகவும் அம்பேவல பிரதேசத்தில் மேற்படி பாற்பண்ணையை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 2014 ஆம் ஆண்டு இந்த முதலீடு குறித்த திட்டமிடல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்த முடியாத நிலமைகள் காணப்பட்டது. அத்துடன் அம்பேவலயில் பண்ணை நிர்மாணத்திற்கான 200 ஏக்கர் நிலம் தெரிவு செய்யப்பட்டிருந்தமையும் நோக்கத்தக்கது.

மேற்படி அதி நவீன தொழில்நுட்பங்களுடன் பாற்பண்ணை அமைக்கும் திட்டமானது உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் பிரதேச வாசிகள் நன்மையடைவதுடன் அவர்களின் வாழ்வாதார நிலைமைகள் மேம்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## வொக்ஸ்வேகன் மோட்டார் கார் தயாரிப்பு தொழிற்சாலையின் கிளை இலங்கையில்

### ஆரம்ப நிகழ்வுகள் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளது



வொக்ஸ்வேகன் மோட்டார் கார் தயாரிப்பு தொழிற்சாலையை குளியாபிட்டியவில் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வுகள் இன்றைய தினம் ஜனாதிபதி தலைமையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் அகில விராஜ்காரியவசம் உட்பட அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மன் நாட்டின் மிகச் சிறந்த மோட்டார் வாகன தயாரிப்புக்களில் ஒன்றாக கருதப்படும் வொக்ஸ்வேகன் மோட்டார் கார் தயாரிப்பு தொழிற்சாலையின் கிளையை இலங்கையில் ஆரம்பிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

மேற்படி தொழிற்சாலையின் அமைவு என்பது அப் பிரதேசத்தில் வாழ்கின்ற இளைஞர் யுவதிகளுக்கான அதிக வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்குமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வணிகம்.

## 17 இலட்சம் மெற்றிக் தொன் எரிபொருள் இறக்குமதி

### பெற்றோலிய வள கூட்டுத்தாபனம் நடவடிக்கை


17 இலட்சம் மெட்ரிக் தொன் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை இலங்கை பெற்றோலிய வள கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலநிலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் தந்துள்ள வறட்சி மற்றும் மின் உற்பத்திக்கு பயன்படுத்தப்பட்டு வருகின்ற எரிபொருள் பயனுறுதி வீதங்களையும் கருத்திற் கொண்டே மேற்படி எரிபொருள் இறக்குமதித் தீர்மானத்தை எடுத்துள்ளதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் டீ.ஜீ.ஜயசிங்க தெரிவித்தார்.



இதன்படி எதிர்வருகின்ற 4 வருடங்களுக்குத் தேவையான 17 இலட்சம் மெற்றிக் தொன் எரிபொருள் இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் எரிபொருளைக் களஞ்சியப்படுத்திக் கொள்வதற்கான வசதிகளை அதிகப்படுத்திக் கொள்ளும் நோக்கில் முத்துராஜவல, கொலன்னாவ, சப்புகஸ்கந்த பகுதிகளில் மேலதிக எண்ணெய் குதங்களை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதான தகவலும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.



இந்திய எல்லையில் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட அல்பிரட் பஸ்கால் என்ற பிரான்ஸ் பிரஜை, தனது மனைவிக்கு புது வருட பரிசளிப்பதற்காக தீக்குச்சியால் ஆன தாஜ்ம காலை உருவாக்கியுள்ளார். சிறையில் இருந்த 2 கைதிகளின் உதவியுடன் தனது மனைவிக்கு 30 ஆயிரம் தீக்குச்சிகளை வைத்து குறித்த தாஜ்மகாலை உருவாக்கினார். அவரது தாஜ்மகால் பிரான் ஸுக்கு பொதியிடப்பட்டு அனுப்பப்பட்டது. (ம-எ)

# ஓய்வு நேரங்களில் மின்னஞ்சலுக்கும் பதிலளிக்கத் தேவையில்லை

## இது பிரான்ஸில்

பரிஸ், ஜன. 3

பிரான்ஸில் அலுவலக நேரங்களை தவிர, பிற நேரங்களில் பணி யாளர்கள் தங்கள் அலுவலக மின் னஞ்சல்களுக்கு பதிலளிப்பதை தவிர்க்கும் உரிமையை வழங்கும் புதிய சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. 50 பணியா ளர் களுக்கு மேலாக இருக் கும் நிறுவ னங்கள், பணி



யாளர்களின் நன்னடத்தை களை பதிவு செய்திட வேண்டும். பணி யாளர்கள், பணி நேரங்களைத் தவிர்த்து பிற நேரங்களில் தங்கள் அலுவலக மின்னஞ்சல்களை பார்த்து அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்று அவசியமில்லை என்று சட்டம் நிறைவேற்றப்பட்டது. (ம-எ)

# ஜேர்மனி

# புதுவருட

ஜேர்மனின் பாதுகாப்பு இனிவரும் காலங்களில் மிகையாக அதி கரிக்கப்படும் என்று அந்த நாட்டின் ஜனாதிபதி ஏஞ்சலா மெர்க்கல் தெரிவித்தார்.

ஜேர்மனின் தலைநகர் பெர்லினில் கிறிஸ்மஸ் சந்தையொன்றில் மேற் கொள்ளப்பட்ட ட்ரக் தாக்குதலில் 12 பேர் உயிரிழந்தனர். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இதற்குப் பொறுப்பேற்றது. இதனால் மெர்க்கல் மீது அதிக அழுத் தங்கள் வந்து குவிந்தன.

அதிக அகதிகளை ஆதரிக்கும் கொள்கையின் மூலம் ஏஞ்சலா தவறு செய்துள்ளார். அகதிகளுடன் அகதிகளாக பகுந்த இஸ்லாமிய ஆயுததாரிகள் நாட்டின் தேசிய பாதுகாப்பை சந்தேகத்துக்கு உள்ளான ஒன்றாக மாற்றியுள்ளனர். அவர்களால் நாட்டு மக்கள் அச் சத்துடன் நடமாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சுமத்தின.



# நல்லதாக அமையும் 2017 பாப்பரசர் பிரான்சிஸ் கருத்து

வத்திக்கான், ஜன. 3

நாம் ஒவ்வொருவரும் நல்லது செய் தால் நடப்பு வருடம் நன்றாக அமை யும் என்று தெரிவித்தார் பாப்பரசர்.

வத்திக்கான் நகரில் நேற்றுமுன்தி னம் தனது புத்தாண்டுரையை பிரான்சிஸ் ஆற்றினார். அதன் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கடவுளின் கருணையால் நாம் ஒவ்வொருவரும் நல்லது செய்ய முயன்றால், 2017 ஆம் ஆண்டு நன்றாக இருக்கும். வெறுப் புணர்வையும், வன்முறையையும் ஒதுக்கித் தள்ளுங்கள். சகோதரத் துவத்தையும், இணக்கத்தையும் ஆதரியுங்கள். துரதிர்ஷ்டவசமாக, இந்த நாளில்கூட துருக்கி நாட்டில் வன்முறைச் சம்பவம் நடந்துள்ளது. துருக்கி மக்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணம் அடைய பிரார்த்திக்கிறேன். இந்த நேரத்தில், உலகத்தையே அச் சத்தின் பிடியில் வைத்திருக்கும் தீவிர வாதத்துக்கு எதிராக போராடி வருப வர்களுக்காக நான் பிரார்த்திக்கி றேன் என பாப்பரசர் பிரான்சிஸ் மேலும் தெரிவித்தார். (ம-எ)

# பக்தாத் தாக்குதல்; ஐ.எஸ்.ஐ.எஸ். பொறுப்பேற்பு

பக்தாத், ஜன. 3

ஈராக்கின் தலைநகர் பக்தாத்தில் கடந்த சனிக்கிழமை மேற்கொள் ளப்பட்ட இரட்டைத் தாக்குதலுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு பொறுப் பேற்றது.

அல்-சினாக் பகுதியில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் 28 பேர் கொல் லப்பட்டதுடன், 50 பேர் காயமடைந் தனர். ஐ.எஸ். அமைப்பு இந்தத்



தாக்குதலை நடத்தியிருக்கலாம் என்று ஆரம்பத்தில் சந்தேகம் தெரி விக்கப்பட்டிருந்தது. இந்த நிலை யில் அந்த அமைப்பே தற்போது தாக்குதலுக்கு பொறுப்பேற்றும் உள்ளது. (ம-எ)



# படகில் பற்றியெரி 23 பேர் உடல்கருக

## இந்தோனேஷியாவில் பயங்கரச் சம்ப

ஜகர்தா, ஜன. 3

இந்தோனேசியா கடல் பகுதியில் பய ணித்த படகொன்றில் தீ பற்றி யதில் 23 பேர் உடல் கருகிச் சாவடைந்தனர்.

தலைநகர் ஜகர்தாவின் வடபகுதியில் உள்ள முவாரே ஆங்கே துறை முகத்தில் இருந்து நேற்றுக் காலை கிட்டத்தட்ட 200 பயணிகளை ஏற் றியபடி ஓர் இயந்திரப் படகு ஆயிரம் தீவுகள் பகுதிக்கு சென்றது. புறப்பட்ட சிறிது நேரத்தில் அந்தப் படகின் இயந்திரப் பகுதியில் இருந்து கிளம் பிய தீப்பிழம்பு, படகு முழுவதும் வேக மாகப் பரவியது. 23 பேர் உடல் கரு கிச் சாவடைந்தனர். ஏனையவர்கள் கடலுக்குள் குதித்தனர். தகவல் அறிந்து



இத்தாலியின் நீர் நகரமான வெனிசில் இதுவரை இல்லாத அளவுக்கு நீர் வற்றியுள்ளது. கிட்டத்தட்ட 2 அடி அளவுக்கு நீர் மட்டம் குறைவடைந்துள்ளது. இதனால் படகுகள் தரை தட்டியுள்ளன. சில பகுதிகளில் நிலப்பரப்புகளும் தென்படுகின்றன. (ம-எ)

# நான்காயிரம் கி.மீ. பாயவ

புதுடெல்லி, ஜன. 3

4 ஆயிரம் கிலோ மீற்றர் தூரத் துக்கு பாய்ந்து சென்று இலக் கைத் துல்லியமாகத் தாக்க வல்ல நவீன அக்னி 4 ரக ஏவு கணையை நேற்று வெற்றி கரமாகச் சோதித்தது இந்தியா.

ஒடிசாவிலுள்ள அப்துல் கலாம் தீவில் நேற்றுப் பகல் 12 மணியளவில் ஏவுகணை சோதிக்கப்பட்டது.

குறித்த ஏவுகணை 17 மீற்றர் நீளம் கொண்டது. 1.5. தொன் எடையை சுமந்து செல்லும் வல்லமை
றது.

நிர்ணயிக்க
இலக்கை
கரமாகத்
அழித்தது
இந்தியப்

# ன் பாதுகாப்பு அதிகரிக்கப்படும்: உரையில் ஏஞ்சலா மெர்கெல்



அகதிகளை ஆதரிக்கும் கொள்கைக்கு எதிராக அவ்வப்பொழுது ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. ஜேர்மனின் ஜனாதிபதித் தேர்தல் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. ஏஞ்சலாவும் போட்டியிடுகிறார். அகதிகளை ஆதரித்த விவகாரமும் அவர்களின் மூலம் ஜேர்மனின் பாதுகாப்பு கேள்விக்குறி ஆகியுள்ளமையும் ஏஞ்சலா மெர்க்கலுக்கு எதிரான துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தப்படும் நிலையில் நாட்டின் பாதுகாப்புத் தொடர்பில் ஏஞ்சலா கருத்துத் தெரிவித்தார்.

ஜேர்மனின் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பேர்லின் தாக்குதல் போன்ற பிறிதொரு தாக்குதல் நடத்தப்பட இடம்கொடுக்கக் கூடாது.

இந்த வருடத்தில் இஸ்லாமியப் பயங்கரவாதத்தை மிகப் பெரிய அளவில் எதிர்கொள்ளும் நாடுகளில் ஜேர்மனும் ஒன்றாயுள்ளது. நாட்டு மக்கள் அனைவரும் ஆயுத கலாசாரத்துக்கு எதிராக எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று மெர்க்கல் மேலும் தெரிவித்தார். (ம-எ)



# நெடுந்தூர ஏவுகணைகள் மிக விரைவில் அறிமுகம்

## புதுவருட உரையில் கிம் கருத்து

நெருந்தூர ஏவுகணையொன்றின் கட்டுமானப் பணிகள் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளன என்றும் மிக விரைவில் அவை அறிமுகமாகும் என்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் தனது புதுவருட உரையில் தெரிவித்தார்.

பன்னாட்டு சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது பல்வேறுபட்ட அணுவாயுத சோதனைகளை நடத்தி வருகிறது. இதனால் அந்த நாட்டின் மீது ஐக்கிய நாடுகள் சபை பல பொருளாதாரத் தடைகளை விதித்துள்ளது. வடகொரியாவின் முக்கிய ஆதரமான நிலக்கரி விற்பனையை முடக்கும் வகையில் எந்தவொரு நாடும் வடகொரியாவிடமிருந்து நிலக்கரியை இறக்குமதி செய்யக்கூடாது என்று அண்மையில் தடையுத்தரவு பிறப்பித்தது. இதன்மூலம் வடகொரியா தனது முக்கிய வருவாயை இழந்து அணுவாயுத சோதனையைக் கைவிடும் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் நோக்கம். அமெரிக்கா, தென்கொரியா, ஜப்பான் போன்ற நாடுகள் தனித்தனியாக வடகொரியாவுக்கு சில தடைகளை விதித்திருந்தன. ஆனால் தனக்கெதிரான தடைகளைக்கண்டு வடகொரியா மிரண்டுவிடவில்லை. தனது வலிமையைப் பறைசாற்றும் வகையில் மிகப்பெரிய இராணுவ தளபாட அணிவகுப்பை ஐ.நா. பொருளாதாரத் தடையை விதித்த சில தினங்களில் நடத்தியது.

அணி வகுப்பைத் தொடர்ந்து "ஐ.நா. சபை யின் தடை சிறுபிள்ளைத் தனமானது" என்று வடகொரிய ஜனாதிபதி கிம் யோங் உன் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் தற்பொழுது புதிய ஏவுகணையொன்றின் கட்டுமானம் தொடர்பில் அவர் கருத்துத் அறிவித்தார்.

இருப்பினும் புதிதாக அறிமுகம் செய்யவுள்ள ஏவுகணையின் சிறப்பம்சங்கள் தொடர்பில் எந்தத் தகவலும் வெளியிடவில்லை. ஆனால் வடகொரியா வைத்திருக்கும் ஏவுகணைகள் பசிபிக்பெருங்கடலில்உள்ள குவாம் தீவில் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்க கடற்படைத் தளத்தைத் தாக்கி அழிக்கும் ஆற்றல் படைத்தவை என்பது குறிப்பிடத்தக்கது. (ம-எ)



# புத்தாண்டில் வெறியாட்டம் 11 பேர் சுட்டுக் கொலை



ரியோடிஜெனிரோ, ஜன. 3

பிரேசில் நாட்டில் புத்தாண்டு கொண்டாட்டத்தின்போது முன்னாள் மனைவி உள்பட 11 பேரை சுட்டுக் கொன்றவர் இறுதியாக தன்னையும் சுட்டு உயிரிழுந்தார்.

சாவ் பாலோ மாநிலத்தின் காம்பினாஸ்நகரில் உள்ள ஒரு வீட்டில் நேற்றுமுன்தினம் மது விருந்துடன் புத்தாண்டு விழா கொண்டாடப்பட்டது. அப்போது, குறித்த வீட்டுக்குள் நுழைந்த நபர் அங்கிருந்த தனது முன்னாள் மனைவி, மகன் வேறு ஒன்பது பேர் என மொத்தம் 11 பேரை சுட்டுக் கொன்று இறுதியாகத் தன்னைத் தானே சுட்டும் உயிரிழந்தார் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. (ம-எ)

# ந்தது தீ கிச் சாவு

## வம்

விரைந்து வந்த கடலோரக் காவல் படையினர் கடலில் நீந்தியபடி உயிருக்குப் போராடிய நூற்றுக்கும் அதிகமானவர்களை பத்திரமாக மீட்டனர். 17 பேரைக் காணவில்லை என்று அறிவிக்கப்பட்டது. இதனால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)

# பாதுகாவலரைக் கொன்று கைதிகள் தப்பியோட்டம்

மனானா, ஜன. 3

பக்ரைன் நாட்டுச் சிறைச்சாலையில் பாதுகாவலரைச் சுட்டுக் கொன்று கைதிகள் தப்பித்தமை பர பரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மனானா என்ற பகுதியில் அமைந்துள்ள யூத இனத்தவரின் சிறைச்சாலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. எத்தனை கைதிகள் தப்பித்தனர் என்பது குறித்து பொலிஸார் தகவல் தெரிவிக்கவில்லை. ஆயுதக் குழுவினரால் கைதிகள் தப்பிக்கச் செய்யப்பட்டிருக்கலாம் என சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-எ)



# இஸ்தான்புல் தாக்குதல்தாரி தீவிரமாகத் தேடப்படுகிறார்

## முன்பின் முரணான தகவல்கள்



அங்காரா, ஜன. 3

துருக்கியின் இஸ்தான்புல் நகரத் தாக்குதலில் ஈடுபட்ட ஆயுததாரியை பொலிஸார் தேடி வருகின்றனர் என்று நேற்றுத் தெரிவிக்கப்பட்டது. குறித்த ஆயுததாரி சுட்டுக் கொல்லப்பட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலை யில் முரணான தகவ லாக இந்த அறிவிப்பு வெளியானது.

புது வருடம் பிறந்து சில மணிநேரத்தில் இஸ்தான்புலில் இருந்த களியாட்ட விடுதிக்குள் சென்ற ஆயுததாரி சரமாரியான தாக்குதலை நடத்தினார். கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் 39 பேர் கொல்லப்பட்டதுடன், 69 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

குறித்த தாக்குதல் நடத்திய ஆயுதாரி கொல்லப்பட்டார் என்று ஆரம்பத்தில் செய்திகள் வெ... யாகின. ஆனால் அ... தப்பிச் சென்றுள்... என்றும் பொலிஸ... அவரைத் தேடி வருகி... றனர் என்றும் பன்னா... ஊடகங்கள் செய்தி... யிட்டன. நேற்றுமு... திணம் வரை இந்தத்... குதலுக்கு எந்த அ... பும் பொறுப்புக் ... வில்லை.

இப்படியிருக்க இத... ஐ.எஸ் நேற்றுப் பொ... பேற்றது. (ம...

# வல்ல அக்னி 4 வெற்றிகரச் சோதனை

பெற்

ப்பட்ட வெற்றி தாக்கி என்று பாது



காப்புத்துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்தது. சில தினங்களுக்கு முன்னர் அக்னி 5 ரக ஏவுகணையை இந்தியா சோதித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# மணல் கொள்ளை மீதும் அரசியல் கவனம் தேவை

மண் மீட்புப் போரை நடத்தியவர்கள் தமிழர்கள். ஆயுத ரீதியில் நடத்தப்பட்ட அந்தப் போராட்டம், தோல்வியில் முடிந்தபோது அரசியல், பொருளாதார ரீதியில் தமிழர்களிடம் இருந்த கட்டுறுதியும் குலைந்தது. போருக்குப் பின்னரான சமூகங்களில் எல்லா இடங்களிலும் இப்படியெல்லாம் நடந்திருக்கிறதுதான் என்று நம்மை நாமே ஆற்றுப்படுத்திக்கொண்டோம். அவற்றைக் கட்டுப்படுத்தி சமூகத்தை நேர்வழியில் கொண்டு நடத்தத் தவறியிருக்கிறோம் என்பதை ஓர் இனமாக ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும்.

அத்தகைய பாராதூரமான விடயங்களில் ஒன்று ஆங்காங்கே நடந்துவரும் மணல் கடத்தல்.

கட்டுமானப் பணிகளுக்கான மணலைப் பெறுவது வடக்கில் குதிரைக் கொம்பாகியிருக்கிறது. அதிலும் 30 வருட கால தனிநபர் கட்டுமான அபிவிருத்தியைச் சில வருடங்களில் எட்டிப்பிடிக்கும் வேகத்துக்கு ஈடுகொடுக்க முடியாமல் – மணலைப் பெற முடியாமல் – திண்டாட வேண்டியிருக்கிறது. யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமின்றி, வன்னி மாவட்டங்களிலும் இதுவேதான் நிலமை. வீடுகளுக்கான உதவித் திட்டங்கள் வழங்கப்படும் வேகத்திற்கு மணலைப் பெறுவதற்கான நடவடிக்கைகள், ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவில்லை.

இது மணலுக்கான கேள்வியை அளவுக்கதிகமாக ஏற்றியிருக்கிறது. இந்த இக்கட்டைப் பயன்படுத்திக்கொள்ளும் கொள்ளையர்கள் மணல் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். ஆங்காங்கே கரையோரமுள்ள காணிகளிலும் தென்னந்தோட்டங்களிலும் வெகு வேகமாக மணல்கொள்ளை நடக்கிறது.

மைத்திரி – ரணில் அரசு பதவிக்கு வருவதற்கு முன்னர், மகிந்த ராஜபக்ச ஆட்சியில் அமைச்சராக இருந்தவரான ஈபிடிபி டக்ளஸ் தேவானந்தாவின் மகேஸ்வரி நிதியம் மணல்காட்டில் இருந்து மணல் வியாபாரத்தில் ஈடுபட்டது. இது குறித்து நீதிமன்றங்களில் வழக்குகள் போடப்பட்டதைத் தொடர்ந்தும், ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்தும், வடமராட்சி கிழக்கு மக்களின் எதிர்ப்புகளைத் தொடர்ந்தும் அந்தக் கொள்ளை நிறுத்தப்பட்டது.

ஆனால், அதன் பின்னர் கட்டுமானத் தேவைக்கான மணலைப் பெறுவதற்கான ஒழுங்குகளோ, வழிமுறைகளோ அரச அதிகாரிகளாலோ, அரசியல் தலைவர்களாலோ ஏற்படுத்தப்படவில்லை. மணல் விலை எகிறியுள்ளது. ஒரு ட்ராக்டர் மணல் 9,000 ரூபாவிற்கு விற்பனையாகின்றது. இதனால் எல்லா இடங்களிலும் மணல் கொள்ளை இடம்பெறுகிறது.

கரையோரங்களில் வெண் மணல் கிடைக்கக்கூடிய இடங்களில் மணல்கொள்ளையர்கள் பெரும் குழிகளை உருவாக்குகிறார்கள். தென்னந்தோட்டங்கள், சுடுகாடுகள் என்று எவற்றையும் இவர்கள் மிச்சம் விட்டுவைப்பதில்லை. எலும்புகள் வெளிக்கிளம்பினால்கூட அவற்றைத் தூக்கித் தூர வீசிவிட்டு மணல் கடத்துகிறார்கள்.

பொலிஸார் இந்தக் கொள்ளையைத் தடுக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்கிற பெரும் குற்றச்சாட்டு மக்கள் மத்தியில் உண்டு. ஆனால், பொலிஸ் நிலைய வாசலில் தமது உளவாளிகளை நிறுத்தி பொலிஸார் சுற்றுக் காவலுக்குப் புறப்பட்டதுமே கொள்ளை நடக்கும் இடத்துக்குத் தகவல் கொடுத்துத் தப்பியோடும் தேர்ச்சியான வலைப்பின்னலைக் கொள்ளையர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது அதிர்ச்சியளிக்கும் உண்மை.

சில பல சமயங்களில் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டால், லஞ்சம் கொடுத்தோ அல்லது நீதிமன்றத்தில் தண்டம் செலுத்தியோ வெளியே வந்து மீண்டும் மணல் கொள்ளையிடுகிறார்கள்.

பொருத்து வீடுகள் வேண்டாம் என்று தீவிரமாக எதிர்க்கும் அரசியல் கட்சிகளும், அரசியல்வாதிகளும் இந்த மணல் கொள்ளை குறித்தும், கட்டுமானத் தேவைகளுக்கான மணலைப் பெறுவதற்கான வழி குறித்தும் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

கரையோரங்களில் தற்போது கடல் மட்டத்துக்கும் கீழே கொள்ளையர்கள் மணலைக் கொள்ளையடித்து வருவதால், எதிர்காலத்தில் அந்தப் பகுதிக்குள் கடல் நீர் உட்புகும் ஆபத்துக்க்ள் அதிகம் உள்ளன என்பதையும் மறுக்க முடியாது. ஆனால் அரசியல்வாதிகள் இதுபற்றி அக்கறைப்படவில்லை. மாகாண, மத்திய சுற்றுச் சூழல் அமைச்சுக்களும் இது விடயத்தில் நவடிக்கை எதுவும் எடுப்பதாக இல்லை. சுவர் இன்றி சித்திரம் வரைய முடியாது என்பதைப்போல, மண்ணைக் கடலுக்குக் காவு கொடுத்துவிட்டு மண்ணை மீட்போம் என்று முழக்கமிடுவதில் அர்த்தமில்லை. எனவே மணல்கொள்ளை விடயத்தில் அரசியல்வாதிகள் உடனடியாகக் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுப்பது அவசியம்.




# மயிலிட்டிக்கு அப்பாலும் படையினரின் இலக்கு நீளுமா?



சேரலாதன்

வலிகாமம் வடக்கிலுள்ள மயிலிட்டிப்பகுதியை, எந்தச் சூழ்நிலையிலும் அரசு விட்டுக் கொடுக்கக் கூடாதென ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் படை அதிகாரிகளைக் கொண்ட தேசிய போர் வீரர்கள் முன்னணி என்ற பெயரிலான அமைப்பினரே, ஜனாதிபதியை நேரில் சந்தித்து இந்தக் கோரிக்கையை அழுத்திக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் படையினர் மூலமாக அரசுக்கும், ஜனாதிபதிக்கும் அழுத்தங்களைப் பிரயோக்கிக்கும் வேலைகளை மகிந்த தலைமையிலான கூட்டு எதிரணியினர் மேற்கொள்கின்றமை இதன் மூலமாகத் தெளிவாகத் தெரிகின்றது.

### போர் வெற்றியைக் காட்டி சிங்கள மக்களைக் கவரமுயலும் மகிந்த

முன்னாள் ஜனாதிபதி மகிந்தவும், அவரைச் சார்ந்தவர்களும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் பெற்ற வெற்றியை முன்னிலைப்படுத்தி மக்களின் ஆதரவைத் திரட்டுவதில் முனைப்புடன் செயற்படுகின்றனர். தம்மையொரு போர் வெற்றிவீரராக மக்கள் எப்போதும் மதிக்கவேண்டுமென்பதில் மகிந்த குறியாக உள்ளார்.

> ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை அரசு நேர்மையாக நிறைவேற்றுமாயின், அதில் படையினரே பாதிப்புக்களை அதிகளவில் எதிர்கொள்வர். இது தொடர்பான பரப்புரைகள் தென் பகுதியில் தீவிரமாக இடம் பெற்று வருகின்றன. படையினரை அரசுக்கு எதிராகத் திருப்பி விடுவதே இதன் பிரதான நோக்கமாகும்.

பெரும்பான்மையின மக்கள் போரையும் அதனால் ஏற்பட்ட இழப்புகளையும் ஒருபோதுமே மறக்கமாட்டார்கள். இதை மகிந்த நன்கறிவார். மேலும் போரின்போது படைவீரர்கள் எதிர்கொண்ட இழப்புக்கள் அளவிட முடியாதவை. படையினரில் பல்லாயிரக்கணக்கானவர்கள் தமது உயிர்களை இழந்துள்ளனர்.

ஏராளமானவர்கள் ஊனமடைந்துள்ளனர். போரினால் ஏற்பட்ட வடுக்களை முன்னாள் படைவீரர்கள் மட்டுமல்ல, தற்போது சேவையிலுள்ள, போரில் ஈடுபட்ட படைவீரர்களும் மறக்கவில்லை. இன்னுமொரு போருக்கு இவர்கள் தயாராக இல்லை. ஏனென்றால் போரின் வலிகளை அனுபவித்தவர்கள் இவர்கள். இவர்களின் உணர்வுகளை அரசுக்கு எதிராகத் திருப்பிவிடுவதில் கூட்டு எதிரணியினருக்கு ஓரளவு வெற்றி கிடைத்துள்ளது என்றே கூறவேண்டும்.

ஏற்கனவே ஊனமுற்ற படையினர் கொழும்பில் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் பின்னணியில் கூட்டு எதிரணியினர் இருந்

> மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது அவரது பாவனைக்கெனக் கட்டப்பட்ட சொகுசு மாளிகையும் வலி வடக்கில்தான், அமைந்துள்ளது. இதைவிட மயிலிட்டியில் ஆயுதக் களஞ்சியம் உட்பட படையினருக்குத் தேவையான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் அமைந்திருப்பதால், எக்காரணம் கொண்டும் அப்பகுதியை விடுவிக்கக் கூடாதெனப் படையினர் வற்புறுத்திக் கூறுகின்றனர். இனிமேல் ஜனாதிபதியின் முடிவைப் பொறுத்தே மயிலிட்டி மக்களின் தலைவிதி தீர்மானிக்கப்படும்.

எல்லைமீறிக் காணப்படுகின்றது. அரசு மீள்குடியமர்வில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்பட்டால், படையினர் அதை அனுமதிக்க மாட்டார்களென்பது தெளிவாகத் தெரிகின்றது. மேலும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மகிந்தவின் தோல்விக்குத் தமிழர்களே காரணமென்ற காழ்ப்புணர்வு மகிந்த தரப்பிலிருந்து இன்னமும் மறையவில்லை. இதனால் தமிழர்களுக்கு நன்மை தருகின்ற எந்தவொரு விடயத்தையும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். இதற்குப் படையினரைப் பயன்படுத்துவதற்கும் அவர்கள் தயங்க மாட்டார்கள்.

வலிகாமம் வடக்குப் பிரதேசம், நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து படையினரின் நடமாட்டம் மிகுந்த பகுதியாகக் காணப்படுகின்றது. ஆரம்பத்தில கள்ளக் கடத்தலையும், சட்டவிரோதக் குடியேற்றங்களையும் கட்டுப்படுத்துவதற்காகக் கடற்கரையோரங்களில் நிறுத்தப்பட்ட படையினர், பின்னர் முகாம்களை அமைத்துச் செயற்பட ஆரம்பித்தனர். போர் தொடங்கிய பின்னர் இந்தப் பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமாக மாற்றப்பட்டது. 1990களில் அங்கு ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த மக்கள் இடம் பெயர்ந்து வேறு இடங்களுக்குச் செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்த அவர்களில் ஒரு தொகுதியினர் போர் ஓய்ந்த பின்னர் பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியில் தமது சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டனர். ஆனால் மயிலிட்டி உள்ளிட்ட பல பிரதேசங்களில் மக்கள் மீள்குடியமர்த் தப்படவில்லை.

வலி. வடக்குப் பகுதியில் படையினர் உல்லாச விடுதிகளை நடத்துவதும், விவசாயம் மற்றும் கால்நடைவளர்ப்பில் ஈடுபடுவதும் புதிய செய்தியல்ல. இதைவிட இராணுவக் குடியிருப்புக்களும் அங்கு அமைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மகிந்த ஜனாதிபதியாக இருந்தபோது அவரது பாவனைக்கெனக் கட்டப்பட்ட சொகுசு மாளிகையும், வலி வடக்கில்தான் அமைந்துள்ளது. இதைவிட மயிலிட்டியில் ஆயுதக் களஞ்சியம் உட்பட படையினருக்குத் தேவையான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்கள் அமைந்திருப்பதால், எக் காரணம் கொண்டும் அப்பகுதியை விடுவிக்கக் கூடாதெனப் படையினர் வற்புறுத்திக் கூறுகின்றனர் இனிமேல் ஜனாதிபதியின் முடிவைப்பொறுத்தே மயிலிட்டி மக்களின் தலைவிதி தீர்மானிக்கப்படும்.

### எதிலும் தயக்கம் காட்டும்போக்கில் ஜனாதிபதி

நல்லதோ அல்லதுகெட்டதோ மகிந்த போன்று துணிச்சலான நடவடிக்கைகளை எடுப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தயங்குவது தெரிகின்றது. நாட்டின் பிரதான இரண்டு கட்சிகளும் இணைந்து ஆட்சியமைத்துள்ளதால் அவரால் தன்னிச்சையான முடிவுகளை எடுக்க முடியவில்லை. இதைவிட அவர் சார்ந்த சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள்ளேயே எதிர்ப்புக்களை எதிர்கொள்ளவேண்டிய நிலையில் அவர் காணப்படுகின் றார். மேலும் போரைக் காரணம் காட்டிக் காட்டியே, படையினர் நாட்டு நிர்வாகத்தில் மூக்கை நுழைத்து வந்தனர். இன்றும்கூட அவர்கள் செல்வாக்குச் செலுத்துகின்ற அளவு பலம்மிக்கவர்களாகவே உள்ளனர். மகிந்த தரப்பினரின் ஆசீர்வாதம் இவர்களுக்கு மேலதிக பலத்தைக் கொடுத்துள்ளது.

ஜனாதிபதி தமது பதவியை ஏற்று இரண்டு ஆண்டுகள் நிறைவுபெறப் போகின்றன. இந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் அமைதி ஏற்பட்டுள்ளதாக அரச தரப்பில் கூறப்பட்டதைக் கவனத்தில்கொள்ள வேண்டும்.



ஐ.நா.மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மா னத்தை அரசு நேர்மையாக நிறைவேற்றுமாயின், அதில் படையினரே பாதிப்புக்களை அதிகளவில் எதிர்கொள்வர். இது தொடர்பான பரப்புரைகள் தென்பகுதியில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. படையினரை அரசுக்கு எதிராகத் திருப்பிவிடுவதே இதன் பிரதான நோக்கமாகும். இதனால் அரசு இரண்டும் கெட்டான் நிலையில் விழி பிதுங்கிக் காணப்படுகின்றது. போர்க்குற்ற விசாரணைகள் நேர்மையாக இடம் பெற்றால், படையினரின் பலத்த எதிர்ப்பை எதிர்கொள்ள வேண்டியதொரு நிலை அரசுக்கு ஏற்பட்டு விடும். நீதியான விசாரணைகள் இடம்பெறாது விட்டால், சர்வதேசத்தின் நம்பகத் தன்மையை இழக்க வேண்டியதொரு நிலை ஏற்பட்டுவிடும். இதன் காரணமாக அரசு குழம்பிய நிலையில் காணப்படுகின்றது.

### வலி.வடக்கில் மீள்குடியேற்றத்துக்குப் படையினர் தரப்பு எதிர்ப்பு

இதேவேளை, வலிகாமம் வடக்கில் மக்கள் மீள்குடியமர்த்தப்படாத இடங்களை விடுவிப்பதிலும் கணிசமான எதிர்ப்புக்களை அரசு எதிர்கொண்டு வருகின்றது. படையினர் மற்றும் கூட்டு எதிரணியைச் சேர்ந்த அரசியல்வாதிகள் இதில் கண்ணும் கருத்துமாக இருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். தற்போது படையினர் இந்த விடயத்தில் ஜனாதிபதிக்கு மிகக் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகிக்கும் அளவுக்கு நிலைமைதைத் தவிர பிரச்சினைகளுக்கு முழுதாகத் தீர்வுகாண முடியவில்லை. ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகள் கூட நிறைவேற்றப்படாத நிலையில், தமிழர்கள் ஏமாற்றமடைந்து காணப்படுகின்றனர். இதனால் அவர்களின் பிரதிநிதிகளாகச் செயற்படுகின்ற தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பினர் சங்கடங்களுக்கு ஆளாகி வருகின்றனர். இதன் காரணமாக அவர்கள் அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்குத் தயாராகி விட்டமை தெளிவாகத் தெரிகின்றது.

கூட்டமைப்பின் வசமுள்ள வடக்கு மாகாணசபையின் செயற்பாடுகள் மக்களைச்சலிப்படையச்செய்துவிட்டன. இது கூட்டமைப்பினருக்குப் பெரும் பின்னடைவையும் ஏற்படுத்தியுள்ளது. தற்போது படையினர் நாட்டுப் பிரச்சினையில் தலையிட ஆரம்பித்து விட்டமை தெரிய வருவது மட்டுமல்லாது, எதிர்காலத்தில் அவர்களின் தலையீடுகள் எவ்வாறு அமையப்போகின்றன என்ற கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாட்டைப் பொறுத்தவரையில் படையினரின் எண்ணிக்கை மிகப் பெரிதென்றே கூறமுடியும். போர் இடம் பெற்றபோது, இந்த எண்ணிக்கை தேவையாக இருந்திருக்கலாம். ஆனால் போர் ஓய்ந்த நிலையில், இதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. நாட்டின் குடிசார் பிரச்சினைகளில் படையினர் மூக்கை நுழைப்பது ஆரோக்கியமான தொன்றல்ல. தற்போது மயிலிட்டியில் ஆரம்பித்து, ஏனைய விடயங்களிலும் அவர்கள் அழுத்தங்களைப் பிரயோகிக்க முடியும். இது நாட்டின் ஜனநாயகத்துக்கு உகந்ததாகத் தெரியவில்லை.



# வாசகர் திருமுகம்

## மன அழுத்தம் தரும் பாடசாலை ஆரம்பிக்கும் நேரமாற்றம்

இனிவரும் நாள்களில் வடமாகாண பாடசாலைகள் காலை 7.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட இருப்பது கல்வித்துறைசார் தரப்பினருக்குப் பெரிய சுமையையே ஏற்படுத்தும். இதனால் நிர்வாகப் பிரச்சினைகளே அதிகரிக்கும்.

தூரப்பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்கள் இற்றைவரை காலையில் இயந்திர கதியில்தான் பாடசாலைகளுக்குச் சென்று வந்தனர். இப்போதுள்ளதைவிட அரை மணிநேரம் முன்னதாகப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளமை இவர்களுக்கு மென்மேலும் சிரமத்தையே ஏற்படுத்தவுள்ளது. இதனால் மாணவர்கள் ஒருவித மன அழுத்தத்துடனும், பதற்றத்துடனும் இயங்கும் நிலை ஏற்பட வாய்ப்புண்டு. இது விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் அக்கறை காட்டி உரிய முடிவை மேற்கொள்வது சகல தரப்பினருக்கும் பயன்தரும்.

*மக்கள் நண்பன்*
*மாதகல் வடக்கு*


## பாதீனியத்தை அழிக்க முன்வருவார்களா?

பாதீனியம் வடபகுதியில் வெகுவேகமாகப் பரம்பலாகும் நிலையில், அவற்றை அழிக்க அரச திணைக்களங்கள் பலவித பரப்புரைகளை மேற்கொண்டும், எம்மவர்கள் இது குறித்து அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. பாதீனியத்தை அந்தந்தக் காணி உரிமையாளர்கள் அக்கறை எடுத்தால் அழித்து விடலாமல்லவா? பிரதேசசபைகள் இதில் கவனம் எடுத்துச் செயற்படுவது காலத்தின் கட்டாயமாகும்.

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து சித்தங்கேணி செல்லும் பெருவீதியருகில், ஸ்ரீமுருகன் புத்தகசாலை அருகில் ஒருகட்டடப் பொருள் விற்பனை நிறுவனக் காணியில் பாதீனியம் பெருகி, முற்றி முறுகி விதைகளுடன் இருப்பதை எவருமே கண்டு கொள்ளவில்லையா? இந்த நிறுவனம், பொருள்கள் விற்பனை மூலம் சகல இடங்களுக்கும் பாதீனிய விதைகளை (கல், மண்ணுடன்) பரவச் செய்வதை நாம் அறியாதிருப்பது எமக்குப் பேராபத்தை விளைவிக்கும் செயலாகும். இது பண்டத்தரிப்பு பட்டினசபையின் கவனத்துக்கு.

*வழிப்போக்கன்*
*பண்டத்தரிப்பு*

# புத்தாண்டுப் பரிசு



புத்தாண்டுக்கு முந்தைய நாள் இரவு, சம்பளம் வாங்கிய கையோடு வீட்டுக்குள் வந்தார் அப்பா. அவரது அன்பு மகள் ஜெனி தூங்காமல் அவருக்காகக் காத்திருந்தாள். இருவரும் உணவு உண்டபிறகு தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்தனர்.

அந்நேரம், அப்பா... அப்பா... இந்தப் புது வருடத்துக்கு எனக்கு ஏதும் பரிசு இல்லையா?" என்று கேட்டாள் ஜெனி.

ம்ம்...ம்... கண்டிப்பா உண்டுடா செல்லம், உனக்கு என்ன வேணும் சொல்லு?" கேட்டார் அப்பா.

அப்பாவின் கைகளைப் பிடித்தவாறே, எனக்குப் புதுசப்பாத்து வாங்கித் தாங்கப்பா, அதுவும் பாட்டா சப்பாத்து வேணும்..." என்றாள் ஜெனி.

நாளைக்கு வாங்கித் தர்றேன். இப்ப போய் தூங்கும்மா..." என்றார் அப்பா.

ஜெனி கேட்டபடியே, புத்தாண்டு அன்று காலை புது சப்பாத்து வாங்கிக் கொடுத்தார் அப்பா. மிகுந்த மகிழ்ச்சியோடு, புத்தாண்டுப் பரிசைப் பெற்றுக் கொண்டாள் ஜெனி.

சிறிது நேரம் கழித்து, அந்தப் புதுச் சப்பாத்தைப் பரிசுப் பொருளாக வண்ணத்தாளை வைத்துக் கட்டிக் கொண்டிருந்தாள் ஜெனி. இதைக் கவனித்த அப்பா, யாருக்கு இந்தப்பரிசைக் கொடுக்கப் போற ஜெனி?" என்று கேட்டார்.

அது வந்துப்பா.... அடுத்த தெருவுல இருக்கிற ராணிக்குத் தரப் போறேன். பாவம்ப்பா அந்தப் பொண்ணு! அவகிட்ட ஒரே ஒரு சப்பாத்துத்தான் இருக்கு. அதுவும் கிழிஞ்சிருக்குப்பா... தன்னோட கிழிஞ்ச சப்பாத்தை யாராவது பார்த்துவிடுவாங்கன்னு, ராணி மறைச்சு மறைச்சு கஷ்டப்படுறதைப் பல நேரம் கவனிச்சிருக்கேன். அதனாலதான் புத்தாண்டுப் பரிசா புதுச்சப்பாத்துக் கொடுக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்று தயக்கத்தோடு சொன்னாள் ஜெனி.

'ரொம்ப நல்ல காரியம் ஜெனி. கண்டிப்பாக செய். ஆனா, என்கிட்டே பரிசு உனக்குன்னு ஏன் பொய் சொல்லிக் கேட்டே?" என்று அப்பா செல்லக் கோபத்துடன் கோட்டார்.

அப்பா, ஒருவேளை நான் சொல்லியிருந்தா, நீங்க அடுத்த பொண்ணுக்குத்தானே என்று மலிவான விலையில் வாங்கி வரக்கூடும். அதனாலதான் எனக்கு வேணும்னு பொய் சொன்னேன்..." என்று தைரியமாகச் சொன்னாள் ஜெனி. என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்துப் போனார் அப்பா!

புத்தாண்டுக்காகத் தயார் செய்திருந்த உணவுப்பண்டங்களை ஒரு கை பார்த்தபின், தன்னுடைய புத்தாண்டுப் பரிசை ராணியிடம் கொடுப்பதற்காக கிளம்பிச் சென்றாள் ஜெனி. ஆனால் போன சில நிமிடங்களிலேயே திரும்பி வந்தாள்.

இதைக் கவனித்த அப்பா, என்ன ஜெனி, ராணி வீட்டில இல்லையா? அதுக்குள்ளேயே வந்திட்டியே?" என்றார் அப்பா.

நான் ராணிகிட்டே பரிசு கொடுக்கலைப்பா. அவங்க வீட்டுக் கதவு கிட்ட வெச்சிட்டு ஓடி வந்துட்டேன்..." என்றாள் ஜெனி.

ஏன், ராணி கூட சண்டையா? இல்லை கொடுத்தா வாங்க மாட்டாளா?" என்று அப்பா கேட்க,

நான் ஒருவேளை அந்தப் பரிசைக் கொடுத்தா ராணி வாங்கிக் கொள்வாள். ஆனால் அதுக்குப்பிறகு என்னைப் பார்க்கும்போதெல்லாம் நன்றியுணர்ச்சியோடு பார்ப்பாள். இயல்பாகப் பழகமாட்டாள், ஓர் உதவியாளனாகத்தான் என்னைப் பார்ப்பாள். கடவுள் உண்டியலில் போடும் காசுக்கு விளம்பரம் தேவையா?" என்றாள் பிஞ்சுக் குரலில் ஜெனி.

பிறருக்கு உதவ வேண்டுமென்று எண்ணும் தனது பதின்மூன்று வயது மகளைப் பார்த்து நெகிழ்ந்து போனார் அப்பா!

## வரலாற்றில் இன்றைய தினம்

1993 - பூநகரிப் பாதை திறப்பு ஜெனிவாவில் தீவிர ஆலோசனை. ஐ.நா அதிகாரிகள், தூதரகத்தின் அதிகாரிகள் துரித முயற்சி.
- இரண்டு முஸ்லிம் ஊர்காவற் படையினர் பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகியமையைக் கண்டித்து முஸ்லிம்கள் ஏறாவூர் பொலிஸ் நிலையத்தை முற்றுகை.

1994 - எம்பிலிப்பிட்டியவில் கைதாகி காணாமற் போன 32 மாணவரில் பலரின் எலும்புக் கூடுகள் இராணுவக் காவலரண் பகுதியில் மீட்பு. பொலிஸ் - பத்திரிகையாளர் முன்பாகத் தோண்டியெடுப்பு.
- பேச்சு வார்த்தைக்குள் திரை மறைவு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக லங்கா தீப தெரிவிப்பு.

1995 - அரச பிரதிநிதிகளுடன் வந்த ஹெலி சென்ஜோன்ஸ் மைதானத்தில் வந்திறங்கியது.
- அரசு புலிகள் பேச்சு மண்டபத்தில் தலைவரின் படம், தமிழீழ தேசியக் கொடி.

1997 - நிலக்கரி ஊழல் மற்றும் வருமானத்துக்கு அதிகமாக சொத்துச் சேர்த்த வழக்கில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு பிணை அனுமதி

ஓய்வு எடுங்கள்

'திடும்' எனப் பொங்கிச் செயலாற்றும் கடல் நடுவேதான் அமைதியாகத் தீவுகளும் உள்ளன. மனிதனும் இதுபோல், வாழ்க்கைப் போர்க்களமாக இருந்தாலும் வார ஓய்வு நாள்களில் முழு ஓய்வுடன் அமைதியாக இருக்கக் கற்றுக் கொள்ளவேண்டும். ஓய்வு நாளை முழு அமைதியுடன் கழிக்கும்போது கிடைக்கும் சக்தி வாழ்க்கைப் பிரச்சினைகளை சமாளிக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கும்.



## குவா குவா வாத்து



குவா குவா வாத்து
குள்ளமான வாத்து
ஆகா என்ன அழகு

அசைந்த நடை அழகு!
குவா குவா வாத்து
கூடிச் செல்லும் வாத்து

யாவரையும் ஈர்க்கும்
அழகு நிறைந்த வாத்து!
கரையில் வந்து நிற்கும்

குவா குவான்னு கத்தும்
இரையாய் நத்தை தின்னும்
இன்னும் பலவும் தேடும்!

தூவல் வாலை ஆட்டும்
தலையைத் தலையை நீட்டும்
ஆவலாய் நீரில் நீந்தும்

ஆர்வமாய்ப் பார்த்து
மகிழ்வோம்!

## மனஉரம் வேண்டும்

கோழையான எந்த ஒரு மனிதனும் போர்க்களத்தில் எல்லோருடனும் சேர்ந்து எளிதாக வென்று விடுவான். அவனைத் தனியாகப் போரிடச் சொன்னால் கண்டிப்பாகத் தோற்றுவிடுவான். ஒவ்வொரு தனிமனிதனும் குறிக்கோளை அடைவதற்காக துணிச்சலுடன் வாழ்க்கையைச் சந்தித்து வெல்வது தான் உண்மையாக வாழ்ந்த வாழ்க்கையாகும்.


- ஜார்ஜ் எலியட்

## வர்ணம் தீட்டுவோம் வாங்க....



## ஒலி மரபு

- ஆடு கத்தும்
- குதிரை கனைக்கும்
- நரி ஊளையிடும்
- புலி உறுமும்
- சிங்கம் கர்ச்சிக்கும்
- பூனை சீறும்
- யானை பிளிறும்
- எலி கீச்சிடும்
- ஆந்தை அலறும்
- காகம் கரையும்
- கிளி பேசும்
- குயில் கூவும்
- கோழி கொக்கரிக்கும்
- சேவல் கூவும்
- புறா குறுகுறுக்கும்



# ஆங்கில புத்தாண்டு பலன் 2017



## கடகம்

உங்கள் ராசிக்கு 7ஆவது ராசியில் இந்த 2017ஆம் வருடம் பிறப்பதால் உங்களுடைய திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிட்டும். அழகு, ஆரோக்கியம் கூடும். பாதியிலேயே நின்ற பல வேலைகள் இனி முழுமையாக முடியும். கைமாற்றாகவும், கடனாகவும் வாங்கியிருந்த பணத்தை ஒருவழியாக தந்து முடிப்பீர்கள். தடைப்பட்டிருந்த திருமணப் பேச்சு வார்த்தை சுமுகமாக முடியும். உங்கள் ராசியை சந்திரன் பார்த்துக் கொண்டிருக்கும் போது இந்த ஆண்டு பிறப்பதால் மனஇறுக்கம் குறையும். திட்டமிட்டு செயற்படுவீர்கள். வேலையில்லாதவர்களுக்கு நல்ல நிறுவனத்தில் வேலை கிடைக்கும். பழைய சிக்கல்களுக்கு தீர்வு கிடைக்கும். எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்து வைக்க முடியாத படி அடுத்தடுத்து செலவுகள் வந்தது. இனி அந்த அவல நிலை மாறும். கணவன்-மனைவிக்குள் சந்தேகத்தால் வீண் சச்சரவுகளும், உறவினர்களால் தொல்லைகளும் வந்தது. இனி அன்னியோன்னியம் அதிகரிக்கும். உங்களின் தனாதிபதி சூரியன் உங்கள் ராசிக்கு 6ஆம் வீட்டில் வலுவாக அமர்ந்திருக்கும் நேரத்தில் இந்தப் புத்தாண்டு பிறப்பதால் எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். கம்பீரமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள்.

வருடப் பிறப்பு முதல் ஜனவரி 16ஆம் திகதி வரை மற்றும் உங்களின் யோகாதிபதி செவ்வாய் 8இல் மறைந்திருப்பதால் ஆரோக்கிய குறைவு, சிறுசிறு விபத்துக்கள், சொத்துப் பிரச்சினைகள், பொருள் இழப்புக்கள், பணப்பற்றாக்குறை, உடன்பிறந்தவர்களுடன் மனக்கசப்புகள் வந்து நீங்கும். ஏப்ரல் 1ஆம் திகதி முதல் மே 26ஆம் திகதி வரை உங்களின் யோகாதிபதியான செவ்வாயை சனி பார்ப்பதால் பெற்றோருக்கு மருத்துவச் செலவுகள், மன இறுக்கம், ஏமாற்றங்கள், மறைமுக நெருக்கடிகள் வந்துச் செல்லும். ஜூலை 27ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 2இல் ராகுவும், 8ஆம் வீட்டில் கேதுவும் நிற்பதால் படபடப்பு, எதிலும் பிடிப்பற்றப் போக்கு, பிறர்மீது நம்பிக்கையின்மை, வீண்விரயம் வந்து செல்லும். நீங்கள் சிலருக்கு நல்லது சொல்லப் போய் பொல்லாப்பாக முடிய வாய்ப்பிருக்கிறது. வாகனத்தில் கவனம் தேவை. பணப்பற்றாக் குறையால் வெளியில் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை உருவாகும். வழக்கில் தீர்ப்பு தள்ளிப்போகும். கண்ணில் சின்னதாக தூசு விழுந்தாலும் அலட்சியமாக இருந்து விடாதீர்கள். மருத்துவரை கலந்தாலோசிப்பது நல்லது. மற்றவர்களைத் தாக்கிபேச வேண்டாம். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார், கெட்டவர்கள் யார் என்பதைப் புரிந்துக் கொள்வதில் தடுமாற்றம் வரும். ஜூலை 27ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை உங்கள் ராசிக்குள் ராகுவும், 7இல் கேதுவும் தொடர்வதால் எதிலும் ஒருவித பயம், ஒற்றை தலைவலி, செரிமானக் கோளாறு, சிறுநீர் பாதையில் ஒவ்வாமை, வலிப்பு வந்துச் செல்லும். முன்கோபத்தை தவிர்க்கப் பாருங்கள்.

புத்தாண்டின் தொடக்கம் முதல் செப்ரெம்பர் முதலாம் திகதி வரை உங்களின் அதிபதியான குரு உங்கள் ராசிக்கு 3ஆம் வீட்டில் நிற்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். ஒரே நேரத்தில் இரண்டு, மூன்று வேலைகளைப் பார்க்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகும். அவ்வப்போது பலவீனமாக உணருவீர்கள். சிலர் தங்களது காரியம் ஆகும் வரை உங்களைப் பயன்படுத்திக் கொண்டு வேலை முடிந்தப் பிறகு கருவேப்பில்லையாய் தூக்கி எறிவதை நினைத்து வருத்தப் படுவீர்கள். தாழ்வு மனப்பான்மை தலைத்தூக்கும். கூடாப் பழக்க வழக்கமுள்ளவர்களின் நட்பைத் தவிர்ப்பது நல்லது. இளைய சகோதர வகையில் பிணக்குகள் வரும். விமர்சனங்கள் கண்டு அஞ்ச வேண்டாம். ஆனால் செப்ரெம்பர் 02ஆம் திகதி முதல் வருடம் முடியும் வரை குரு உங்கள் ராசிக்கு 4ஆம் வீட்டிலேயே அமர்வதால் இழுபறியாக இருந்த காரியங்கள் எல்லாம் முடிவடையும். என்றாலும் தாயார் கோபத்தில் ஏதேனும் பேசினாலும் அதைப் பெரிதுப்படுத்தி கொண்டிருக்காதீர்கள். டிசெம்பர் 14ஆம் திகதி வரை சனி 5இல் நிற்பதால் தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் தடுமாறுவீர்கள். மகளின் திருமண விடயத்தில் அவசரம் வேண்டாம். உறவினர்கள் மத்தியில் உங்களைப் பற்றி வதந்திகள் அதிகமாகும். பால்ய நண்பர்களுடன் மனத் தாங்கல் வரும். சிலர் உத்யோகம், உயர்கல்வியின் பொருட்டு பிள்ளைகளை பிரிய வேண்டிய சூழ்நிலை உருவாகும். ஆனால் 15.12.2017 முதல் 6ஆம் வீட்டில் சனிபகவான் அமர்வதால் எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளின் பொறுப்பற்ற போக்கு மாறும். அதிக வட்டிக் கடனில் ஒரு பகுதியை பைசல் செய்ய உதவிகள் கிடைக்கும். மனைவியின் ஆரோக்கியம் சீராகும். அவருடனான மோதல்கள் விலகும். வியாபாரத்தில் ஆழம் தெரியாமல் காலை விடாதீர்கள். புது முதலீடுகளை தவிர்க்கவும். தொடர்ந்து லாபம் பெற முடியவில்லையே என்ற ஒரு கவலைகளும் இருக்கும். ஒரு வாரம் நன்றாக இருந்தால் மறுவாரம் வருமானம் இல்லாமல் போகிறதே என்று நினைத்து கலங்குவீர்கள். வியாபாரத்தை நம்பி ஒரு லோன் வாங்கலாம் என்று நினைத்தால் கூட முடியாமல் போகிறதே நிலையற்ற வருமானமாகி விட்டது என்றெல்லாம் ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும்.

சில நேரங்களில் அதிகாரிகள் கூடுதலாக உங்களுக்கு வேலைகளைத் தருவார்கள். சலித்துக் கொள்ளாமல் அந்த வேலைகளை முடித்துக் கொடுப்பது நல்லது. உங்கள் உழைப்புக்கு அங்கீகாரம் இல்லாமல் போகும். சிலர் உங்கள் மீது அவ தூறு வழக்குகள் தொடர்வார்கள். சக ஊழியர்களால் மனஉளைச்சல் ஏற்படும். விரும்பத்தகாத இடமாற்றம் வரக்கூடும். முக்கிய கோப்புகளை கவனமாகக் கையாளுங்கள்.

பெண்கள் சமயோஜித புத்தியுடன் நடந்துக் கொள்ளுங்கள். காதல் விவகாரத்தை தள்ளி வைத்து விட்டு உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தப்பாருங்கள். பெற்றோரின் ஆலோசனைக்கு செவி சாயுங்கள். போட்டித் தேர்வுகளில் போராடி வெற்றி பெறுவீர்கள். திருமணம் சற்று தாமதமாகி முடியும். மாணவர்களுக்கு மந்தம், மறதி வந்து நீங்கும். மொழிப் பாடங்களில் கூடுதல் கவனம் செலுத்தப் பாருங்கள். விரும்பிய பாடப்பிரிவில் கூடுதல் செலவு செய்தும், சிலரின் பரிந்துரையின் பேரிலும் சேர வேண்டிய சூழ்நிலை உருவாகும். கூடாப்பழக்கமுள்ளவர்களின் நட்பை தவிர்க்கப்பாருங்கள். விளையாடும்போது சிறுசிறு காயங்கள் ஏற்படக் கூடும்.

இந்த 2017ஆம் ஆண்டு அவ்வப்போது உங்களை மட்டம் தட்டப்பார்த்தாலும் விடா முயற்சியாலும், கடின உழைப்பாலும் கரைத்தேற்றும்.

**நாளை**
**மார்கழி-20**
புதன்கிழமை -04.01.2017
திதி: ஷஷ்டி பி.ப.12.54
நட்சத்திரம்: பூரட்டாதி பி.ப.03.21
ராகுகாலம்:12.31-02.01 வரை
சுபநேரம்:05.01-06.31 வரை

# என்று தணியும் இந்த ஆயுதக் கலாசாரம்?

உலகத்தில் என்றுமில்லாத அளவுக்கு தற்போது ஆயுதக்குழுக்களின் அட்டகாசங்கள் தலை தூக்கியுள்ளன. இவர்கள் ஏதோ கையில் கிடைக்கும் ஆயுதங்களைக் கொண்டு, உள்ளூர் ரௌடித்தனம் செய்பவர்கள் அல்ல. மாறாக நாட்டின் இராணுவத்துக்கு எதிராகச் சவால் விட்டு, தமது உரிமைகளை வென்றெடுக்கும் முனைப்புடன், மிகப் பெரிய குழுவாகச் செயற்பட்டு வருகின்றனர்.

நாடுகளுக்கிடையிலான போர் இடம்பெற்ற காலம் முடிந்து, நாட்டுக்குள்ளேயே போர் இடம்பெறும் நிலை அதிகரித்துள்ளது. உள்நாட்டுப்போர் என்னும்போது, இனரீதியான அடக்குமுறைகளுக்கு எதிரான போராகவே அமைந்துள்ளது. ஆனால் சில ஆயுதக் குழுவினர் மதரீதியான புரட்சிகளை ஏற்படுத்தி வருகின்றனர். உலக அளவில் தமது மார்க்கத்தைப் பரப்பவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்படுகின்றனர். இவற்றின் முயற்சிகள் மற்றும் செயற்பாடுகளின் அடிப்படையில், ஐ.நா. குறித்த அமைப்புக்களை போராளி அமைப்பு அல்லது தீவிரவாத அமைப்பு எனப் பிரகடனப்படுத்தும்.

உலக அளவில் தற்போது மன்னர் ஆட்சி நடைபெறும் நாடுகள் மிகச் சிலவாகும். ஏனைய நாடுகள் அனைத்திலும் ஜனநாயக முறைமையில் தலைவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். மக்களால் தெரிவு செய்யப்படும் தலைவர்கள், ஆட்சியைப் பிடித்த பின்னர், மக்களின் தேவைகளைச் சந்திப்பதில்லை என்பதுதான் விநோதம். அடக்குமுறை, ஒடுக்குமுறைகளுக்கு முகம் கொடுக்கும் ஒரு சாரார் ஒரு கட்டத்தில் கிளர்ந்தெழுந்து போராடும் நிலை உருவாகின்றது.

இதற்குக் காரணம் ஆட்சியில் இருப்பவர்களா, அல்லது தவறானவர்களை ஆட்சியில் அமர்த்திய மக்களா? இன்று வரை உலகை அச்சுறுத்தும் விதத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு இயங்கி வருகின்றது. ஈராக் மற்றும் சிரியாவை இணைத்து 'இஸ்லாமிய நாடு' என தனி நாடாகப் பிரகடனப் படுத்தி தனது ஆட்சியை நடத்தி வருகின்றது. அமெரிக்கா, ரஷ்யா உட்பட ஏனைய உலக நாடுகள் இணைந்து தாக்குதல் நடத்தியபோதிலும், இதை முற்றாக அழிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இன்னமும் இராணுவத் தரப்பினர் காலக் கெடுக்களையே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.




உலகுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் இயங்கும் ஓர் அமைப்பை அழிக்க முடியாத அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. இராணுவத்தினருடன் ஒப்பிடுகையில், ஆயுதக்குழுவினரிடம் உள்ள ஆயுதங்களின் திறன் மிகக் குறைந்தவை ஆகும். ஆனால் மிகக் குறுகிய வளத்துடன் இராணுவத்துக்கு எதிராகப் போர் செய்வது தான் வியப்புக்குரியது.

திறமைசாலிகளுக்கான அங்கீகாரம் கிடைக்காதபோது, அங்கீகாரம் கிடைக்கும் இடத்தில் தம்மை வெளிக்கொணர தற்கால இளைய தலைமுறை தயாராக இருப்பது இவ்வாறாக ஆயதக்குழுக்களின் பரம்பலுக்கு காரணமாக அமைந்துள்ளது. ஆக ஜனநாயகம் என்ற வரைவிலக்கணம் சிறப்பாக உள்ளபோதிலும், ஜனநாயக ரீதியில் ஆட்சி அமைப்புக்கள் இயங்கவில்லை என்பது கவலைக்குரியது. தற்போதைய இளைய சமூகம் இவற்றை நன்கு அவதானிக்கும் ஆற்றலுடன் இருப்பது ஒரு வகையில் நன்மை என்றாலும், இன்னொரு வகையில் தீமையானதாகும்.

# ஒன்று கூடல்களே, உறவுக்கும் வளர்ச்சிக்குமான படிக்கற்கள்

அன்ரனி பீற்றர்

கல்வி, செல்வம், வீரம், உலகம் என்னும் போது அவை பலவின் பாற்பட்டவை என்பதே அர்த்தமாகும். ஒன்றின் சிறப்பு அல்லது பயன்பாடு; பலவற்றின் பங்களிப்பிலும், பலவற்றின் ஆய்வுகளின் அடிப்படையிலும் வலுப் பெறுகின்றது, அல்லது தீர்மானிக்கப்படு கின்றது என்பது அறிவியலாளர்களின் கருத்தாகவும் இருக்கின்றது.

உலகில் உள்ள எவற்றை எடுத்துக் கொண்டாலும் அவை எல்லாம் ஒன்று சேர்ந்தே வாழும், இயங்கும் தன்மை உள்ளனவாக இருக்கின்றன. தனிமைப்படும்போது அவற்றுக்கு மற்றவைகளினால் அழிவு நிலையே ஏற்படுகின்றன. உயிர்வாழ்பவை அனைத்துக்கும் இது பொருந்தும். ஒன்று கூடல்களே உறவையும் வளர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. மனிதனை மையமாக வைத்தே நன்மையானவை-தீமையானவை என்பன பகுத்தாயப்படுகின்றன. சிலவற்றின் வளர்ச்சிப் பெருக்கமானது மனிதனுக்கு தீமையானவைகளாகவும். பலவற்றின் வளர்ச்சிப் பெருக்கமானது நன்மை பயப்பதாயும் அமைந்து காணப்படுகின்றன. விவிலிய நூலின் கருத்துப்படி படைக்கப்பட்டவை அனைத்தையும் மனிதனே ஆண்டு அனுபவிக்கக் கடவன் என்பதாகும்.

மனித வாழ்வானது ஆரம்பத்திலிருந்து குழும முறைமைப்படியே வளர்ச்சி பெற்று வந்துள்ளதை வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள். மனிதன் மிருகங்களின் ஆபத்துக்களிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கும், தமக்குத் தேவையான உணவு உட்பட ஏனைய தேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும், ஒன்று கூடி வாழ வேண்டிய சூழ்நிலைகள் ஏற்பட்டன.

மனிதர்கள் சமூக வாழ்க்கைக்கு உட்பட்ட காலங்களில் ஒன்றுபட்டுச் செயற்படும் நிலை மிகவும் இறுக்கமானதாக இருந்தது. கல்வி-அறிவியல்-தொழில்நுட்ப, புரட்சிகளினால் மனிதர்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டது. போட்டி மனப்பான்மைகள் தனிமனிதர்களிடமும் குழுக்கள் சமூகங்கள் நாடுகள், தேசங்கள் என உலகெங்கும் அறி வார்ந்த கண்டுபிடிப்புக்கள் விற்பனை வர்த்தகம் என்பவற்றால் மனித வாழ்விலே பல விதமான மாற்றங்கள் ஏற்படக் காரணமாகின.

### குழும வாழ்வு

ஆரம்பகாலங்களில் ஒவ்வொரு கிராமங்களிலும் மனித உறவுகளைப்பேணும் வகையில் குழும வாழ்வு ஒன்றுகூடல்கள் உறவுப்பாலமாகவும், வளர்ச்சி நோக்கிலும் ஏற்பட்டிருந்தன. கிராமத்தின் அத்தனை அசைவுகளும் ஒன்றுகூடல் முறையிலே நடைபெற்றுவந்தன. கிராமத் தலைமையிலிருந்து அத்தனை பேரும். ஏதோவொரு வகையில் உறவுக்காரர்களாகவே இருந்தார்கள். உறவு நிலைப்பட்ட வாழ்க்கையிலே திருமணங்களும் ஏனைய கொண்டாட்டங்களும் ஒன்றுபட்டு ஒன்று கூடலின் அடிப்படையிலே நிறைவேறின. காலக்கிரமத்தில் ஏனைய குழுமங்களுடன் திருமணங்கள் கொடுக்கல்- வாங்கல்கள் பண்பாடு, கலை, கலாசாரங்கள், வர்த்தகங்கள் பரிமாறப்பட்டமையால் போட்டி நிலைகளும் உருவாகி மனித வாழ்க்கை முறையிலே பல மாற்றங்கள் ஏற்படலாயின. இன்றைய காலத்திலிருந்து சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன்னதாக மனித உறவுகளும் வளர்ச்சிகளும் ஒன்றுகூடல் அடிப்படையில் கட்டி எழுப்பப்பட்டவையாக விளங்கியதை மூத்த பரம்பரையினர் கூறுவர். பலர் அந்த உறவுகளுக்குள் வாழ்ந்து இன்று நவீன வாழ்வியல் மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமலும் பழையவற்றை விட முடியாமலும் புதியவற்றுக்குள் புகமுடியாமலும் வாழும் நிலைகளைக் காண்கிறோம். சங்கங்கள், கழகங்கள், மன்றங்கள் ஒன்றுகூடி சமூகவிழிப்புணர்வைஏற்படுத்தி வளர்ந்தன. பண்பாட்டு விழுமியங்களுக்குள்ளும் கலை, கலாசாரப் பண்பாட்டுக்குள்ளும் கட்டப்பட்ட, முன்னைய வாழ்வியல் முறையானது, ஒற்றுமையை உறவை பின்னிப் பிணைந்த வாழ்க்கை முறையாக வலுப்பெற்றிருந்தது. தேடிச் சென்று உறவுகளோடு சொந்தம் கொண்டாடவும், குடும்பங்களின் மகிழ்வான, துக்கமான நிகழ்வுகளையெல்லாம் ஒன்று கூடி, தம்முடைய பங்களிப்பை நல்கி, சேர்ந்து செயற்பட்டும் வாழ்வியலை, தொழில் விருத்திகளில் ஒருவருக்கு மற்றவர் உதவியாக, கைகோத்து நின்று, செயற்பட்ட நிலைகளால் சமய, இனத்துவ, வாழ்வு மேலோங்கி, சுதந்திரப்பற்றுள்ள கலை, கலாசாரப் பண்பாட்டு விழுமியங்களும் பேணிக்காக்கப்பட்டன. இன்று அப்படியான ஓர் ஆரோக்கியமான ஒன்று கூடல்களின் தேவை உணரப்பட வேண்டும்.

### பொருத்தமான பழமொழிகள்

கேளாத கடனும்,போகாத உறவும் கிடைக்காது. (இல்லாமற் போய்விடும்)என்று முன்னோர்கள் சொல்வார்கள். "குனியாத வீடும், குறையாத சோறும்" என்று இன்னுமொரு பழமொழியும் கூறுவார்கள். இரந்து கேட்க வேண்டிய நிலை இல்லாமல் இருந்தது. இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி செய்து, மற்றவர்களையும் கை தூக்கிவிடும் மனிதத்துவ வாழ்வியல்முறைகளைப் பேணிவந்தார்கள். உறவுகளின் மகிழ்வான, தூக்கமான நிகழ்வுகளுக்குசென்று தமது ஒத்துழைப்பையும் வழங்கி, உறவுகளை நிலைப்படுத்திக் கொண்டார்கள். பகைமைகள் இருந்தபோதும் அவைகள் உயிர்களை அழிக்கும்அளவுக்குகொடூரமாக இருக்கவில்லை. மூத்தோர்களால் தீர்த்து வைக்கப்பட்டன.



இன்று கல்வி அறிவின் அதீத வளர்ச்சியும் நுகர்வு நிலைப்பொருளாதாரமும்-போட்டி, பொறாமைகளைச், சுயநலத்தை தன்னையும் தான் சார்ந்த குடும்ப வாழ்வின் முன்னேற்றத்தையும் கொண்ட குறுகிய வட்டத்துக் குள்ளே நிற்கின்றன. இனத்துவ, சாதிய, பிரிவினைகளும் ,வாய்பேசாத , உணர்வில்லாத பணமே உறவுகளையும், சொந்தபந்தங்களையும் இனம் காட்டுகின்ற ஒன்றாக மனிதனை ஆளுகின்ற நிலையினால், குழுமங்களுக்குள், கிராமங்களுக்குள் சமூகத்தில், பிரதேசங்களுக்குள் ஒற்றுமையில்லாத நிலைகள் மேலோங்கி நிற்கின்றன. எமக்குள் பிரிவினைகள் எம்மைப் பலமிழக்கச் செய்யும். ஒன்றுபட்ட நிலையும் புரிதல்களுமே ஒற்றுமையை வலுப்படுத்தும். இது உறவுகளுக்கும் கலை, கலாசாரப் பண்பாட்டு, தொழில் துணைகளின் வளர்ச்சிக்கும் இட்டுச் செல்லும் என்பதாகும்.

நம்முடைய சமய, சமூக, கல்வி, கலை, கலாசாரப் பண்பாடு தொழில் துறைகளில், இனத்துவ ஒற்றுமைக்குப் பங்கம் ஏற்படுத்தாத வகையில் ஒன்றுபட்டு-ஒத்துழைத்து, பிரச்சினைகளைக் கலந்து பேசி பொது நலனைக் கருத்திற் கொண்டு செயற்பட வேண்டிய காலப்பகுதியிலே வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். எம்முடையை ஒவ்வொரு செயற்பாடும், மனித நேயத்துடன் கூடிய இனத்துவ முன்னேற்றத்துக்கானதாக அமையும்போது மாத்திரமே எம்மினத்தின் அடையாளங்கள் வலிமை பெற்று வளர்ச்சியடையும். இல்லையேல் விரைந்து செயற்படுக் கொண்டிருக்கும் வில்லங்க மாற்றங்களுக்குள் எம்மைத் தொலைத்தவர்களாகவே அடிமைப்பட நேரிடும். தொலை நோக்கும், சுயநலம் சாராத ஒற்றுமையுள்ள செயற்பாடுகளும் பங்களிப்புமே எமக்கு வளர்ச்சிப் படிகளாக அமையும் என்பது தெளி வான உண்மையாகும்.

*- கட்டுரையாளர்:*
*(ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர்)*

> இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி செய்து மற்றவர்களையும் கை தூக்கிவிடும் மனிதத்துவ வாழ்வியல் முறைகளைப் பேணிவந்தார்கள். உறவுகளின் மகிழ்வான, தூக்கமான நிகழ்வுகளுக்கு சென்று தமது ஒத்துழைப்பையும் வழங்கி, உறவுகளை நிலைப்படுத்திக் கொண்டார்கள். பகைமைகள் இருந்த போதும் அவைகள் உயிர்களை அழிக்கும் அளவுக்கு கொடூரமாக இருக்கவில்லை. மூத்தோர்களால் தீர்த்து வைக்கப்பட்டன.















அண்ணே! ஒரு
விளம்பரம்
கா..கா..

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | 2 | | 5 | | 6 | 7 |
| 7 | | | 1 | | | 5 | | |
| 8 | | | | | | 4 | | |
| | | 3 | 7 | | | | 2 | |
| 1 | | | | | | | | 5 |
| | 7 | | | | 2 | 3 | | |
| | | 9 | | | | | | 6 |
| | | 7 | | | 8 | | | |
| 2 | 8 | | 5 | | 1 | | | 9 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 6 | 8 | 5 | 3 | 2 | 1 | 4 |
| 5 | 2 | 4 | 9 | 6 | 1 | 3 | 8 | 7 |
| 1 | 3 | 8 | 2 | 7 | 4 | 5 | 6 | 9 |
| 2 | 1 | 9 | 6 | 8 | 7 | 4 | 3 | 5 |
| 8 | 4 | 5 | 3 | 2 | 9 | 1 | 7 | 6 |
| 6 | 7 | 3 | 4 | 1 | 5 | 9 | 2 | 8 |
| 3 | 5 | 2 | 7 | 4 | 8 | 6 | 9 | 1 |
| 4 | 6 | 7 | 1 | 9 | 2 | 8 | 5 | 3 |
| 9 | 8 | 1 | 5 | 3 | 6 | 7 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக் அளவில் பிரபல்யமானது.

# ஒன்றாக புதைக்கப்படவுள்ள இரண்டு கொலிவூட் நடிகைகள்

ஸ்டார் வோர்ஸ் படங்களில் பிரின்சஸ் லீயாவாக நடித்து புகழ் பெற்றவர் கேரீ பிர். இவர் இறந்து 24 மணி நேரத்துக்குள் அவரின் தாயார் டெபி ரெனால்ட்ஸ் உயிரிழந்தது கொலிவூட்டில் பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கேரி ஃபிர் (வயது- 60) அண்மையில் மாரடைப்பால் இறந்தார். இந்தச் செய்தியை இவருடைய அம்மா டெபி ரெனால்ட்ஸ் கேட்டுள்ளார். அதிர்ச்சியில் உறைந்து சில மணி நேரங்களிலேயே அவரும் இறந்து விட்டாராம். இவருக்கு (வயது-84).

டெபி ரெனால்ட்ஸும் 1950, 60களில் பிரபலமான நடிகையாக இருந்தவர். இந்த நிலையில் அவர்கள் இருவரின் இறுதி ஊர்வலத்தை ஒரே நாளில் நடத்தவுள்ளதாக கேரீ பிரின் சகோதரர் தெரிவித்தார். இருவரும் ஒரே இடத்தில் அருகருகே புதைக்கப் படவுள்ளதால், இருவரும் என்றும் சேர்ந்தே இருப்பார்கள் என அவர் சோகத்துடன் கூறினார் என சினிமா வட்டாரச் செய்திகள் தெரிவித்தன.





**மேடம்:** நண்பரின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். சுபவிடயம் குறித்த பேச்சில் முன்னேற்றம் ஏற்படும். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**இடபம்:** கடந்த கால உழைப்புக்கான பலன் கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் பண வரவும் நன்மையும் அதிகரிக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கப் பெறுவர். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மிதுனம்:** சிறு செயல் கூட கடினமாக தோன்றலாம். தொழில் வியாபாரத்தில் மிதமான ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கடகம்:** மனதில் குழப்பம் உருவாகி விலகும். தொழில் வியாபாரத்தில் நிலுவைப் பணிகளை நிறைவேற்றுவது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். ... பெண்கள் ... நலனுக்காக பாடுபடுவர்.

**சிங்கம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். திட்டமிட்டபடி பணிகளை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த மந்தகதி விலகும். பணியாளர் கள் பணிவிடயமாக வெளியூர் செல்ல நேரிடலாம்.

**கன்னி:** நல்லவர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள் பணிச் சுமையை ...

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சேமிக்கும் விதத்தில் வருமானம் வரும். உடல் ஆரோக்கியம் பெறும். பணியாளர்கள் விரும்பிய பணிமாற்றம் கிடைக்கப் பெறுவர்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் ஆதரவைப் பெற்று மகிழ்வர். உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் சுமாரான லாபம் கிடைக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வாங்க வேண்டாம்.

**தனுசு:** எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும். நண்பர்களிடம் சந்தோசத்தை பகிர்ந்து கொள்வீர்கள். தொழில் வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.

**மகரம்:** பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. தொழில் வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் பாதுகாப்பு குறைந்த இடங்களில் செல்லக் ...

**கும்பம்:** கொடுத்த வாக்குறுதியை ...

**மீனம்:** ... விரைந்து முடிப்பர். புத்திரரின் நற்செயல் மனதை மகிழ்விக்கும்.

## வட நாட்டு ஆடைகள்






வட நாட்டு ஆடைகள் அறிமுகமாகியுள்ளன. ரொப் போன்ற அமைப்பில் மேற் சட்டையும், கீழ்பகுதி வீதியான பாவாடையும் அறிமுகமாகியுள்ளன. ஒரு பக்கத்தில் வெட்டுடன், நூல் வேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இவை 3 ஆயிரத்து 500 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகின்றன.

## தலை முடியலங்காரம்




1 தலை முடியை நன்றாக வாரிக் கொள்ளவும்.
2, 3, 4, 5 இரு பக்கங்களில் இருந்து தலை முடியை எடுத்து சுற்றி, படத்தில் காட்டியவாறு பாண்ட் இட்டுக் கொள்ளவும். இவ்வாறு தலை முடியின் அடிவரை செய்யவும்.
6, 7 பின்னர் இறுக்கமான தலை முடியை தளர்த்தி, அலங்காரமாக்கிக் கொள்ளவும்.
8, பான்டை மறைக்க பூக்கள், அலங்காரப் பொருள்களை வைத்து அலங்கரிக்கவும்.

## பெண்களுக்கு அழகு தரும் ஆடைகள்



பெண்கள் அணியும் ஆடைகள் அவர்களுக்கு அழகையும், தன்னம்பிக்கையையும் தரவேண்டும். ஆனால் பெண்களில் ஒருபகுதியினர் தங்கள் உடைகளில் திருப்தியடைவதில்லை. அதற்கு காரணம் அவர்களது உடல் அமைப்பு. ஒல்லியாகவோ அல்லது குண்டாகவோ இருக்கும் பெண்கள் தங்கள் உடல் அமைப்புக்கு ஏற்ற உடை எது? என்று தெரியாமல் தவித்துப்போகிறார்கள். அதிக நிறத்துடன் காட்சியளிப்பவர்களும், சுமாரான நிறத்தில் தோன்றுகிறவர்களும், தங்களுக்கு எந்த நிறத்திலான உடை பொருத்தமாக இருக்கும்? என்று குழம்புகிறார்கள். அவர்கள் குழப்பம் நீங்கி, அழகான உடைகளை தேர்ந்தெடுக்க தேவையான ஆலோசனைகள்:

சில பெண்களின் ஒட்டுமொத்த உடல்வாகு ஒல்லியாகத் தோன்றும். ஆனால் கால்கள் மற்றும் சற்று தடித்த நிலையில் அமைந்திருக்கும். அப்படிப்பட்டவர்கள் லெகின்ஸ் அணிய விரும்பலாம். அவர்கள் அடர்ந்த நிறத்திலான லெகின்ஸை தேர்ந்தெடுக்கவேண்டும். சற்று குண்டான கால்களை இது ஓரளவு ஒல்லியாக காட்டும். இவர்கள் பொதுவாகவே உடலை இறுக்கிப்பிடிக்கும் உடைகளை தவிர்ப்பது நல்லது.

சற்று கெட்டியான தரத்தில் தயார் செய்யப்பட்ட லெகின்ஸ்களை அவர்கள் தேர்ந்தெடுத்து அணியவேண்டும். மண்ணிறம், அடர் பச்சை, கறுப்பு, கடும் நீலம், கத்திரிப் பூ.. போன்ற நிறங்கள் அவர்களுக்கு பொருத்தமானது. இளம் நிறத்திலான குர்தியை இதற்கு மேலாடையாக அணியலாம்.

புடைவையில், செதுக்கிய சிற்பம் போன்ற உடல் அமைப்புடன் தோன்ற எல்லா பெண்களும் விரும்புகிறார்கள். அவர்களது ஆசை நிறைவேற வாய்ப்பிருக்கிறது. மெல்லிய உடல் தோற்றம் கொண்டவர்கள் ஜூட் சில்க், டஸ்ஸர், ஸ்டிர் கொட்டன் போன்ற தரத்தில் புடைவைகளை உடுத்தலாம். ஒல்லியாக, உயரமாக தோன்றுகிறவர்கள் சற்று கெட்டியான புடைவையை பயன்படுத்தலாம். இவர்களுக்கு இளம் நிறங்கள், போல்ட் பிரிண்டுகள், அகலமான போடர் கொண்ட புடைவைகள் பொருத்தமாக இருக்கும்.

குள்ளமான, தடிமனான உடல்வாகு கொண்டவர்களுக்கு சாப்ட் சில்க், மட்கா, மால்குடி வகைகள் ஏற்றது. அவர்கள் சரும நிறத்துக்கு ஏற்ற அடர்நிறங்களை தேர்ந்தெடுக்கவேண்டும். இதனை நன்றாக சீர் செய்து உடுத்தினால், உடலுக்கு பொருத்தமாகவும், சற்று உயரம் கூடுதலாகவும் தெரியும்.

பெரிய பதவிகளில் இருப்பவர்களின் உடை அலங்காரம், முக ஒப்பனை போன்ற அனைத்துமே யதார்த்தமாக, மிதமானதாக அமைந்திருக்க வேண்டும். ஆபரணம் அணிவதிலும் அவர்கள் கவனம் செலுத்தவேண்டும். சற்று கனமான ஒரே ஒரு ஆபரணம் அணிந்தால் போதுமானது. உடைகளை பொறுத்தவரையில் புடைவையும், குர்த்தியும் அழகான தோற்றத்தைக் கொடுக்கும். லினன் பேண்ட், சிறப்பான தோற்றத்தை வழங்கும். எந்த உடையாக இருந் தாலும் பெரிய கொலர், முக்கால் அளவு அல்லது முழுக்கை பொருந்தும்.

## பகோடா குழம்பு

### தேவையான பொருள்கள்

பகோடா - ஒரு கப்
வெங்காயம் - ஒன்று
தக்காளி- ஒன்று
புளி -நெல்லிக்காய் அளவு
மிளகாய்த்தூள்-காரத்துக்கேற்ப
மஞ்சள்தூள்-கால் தேக்கரண்டி
கறிவேப்பிலை-சிறிதளவு
சீரகம், கடுகு, உளுத்தம்பருப்பு - தலா ஒரு தேக்கரண்டி
காய்ந்த மிளகாய்-2
எண்ணெய், உப்பு- தேவையான அளவு

### செய்முறை

வெங்காயம், தக்காளியைப் பொடியாக நறுக்கவும். சட்டியில் எண்ணெய் விட்டு, காய்ந்ததும் கடுகு, உளுத்தம்பருப்பு, காய்ந்த மிளகாய், சீரகம் போட்டு தாளித்து நறுக்கிய வெங்காயம், கறிவேப்பிலை, தக்காளி சேர்த்து நன்றாக வதக்கவும்.

இதில் புளியைக் கரைத்து ஊற்றி மஞ்சள்தூள், மிளகாய்த்தூள், உப்பு போட்டு தேவையான அளவு தண்ணீர் விட்டு கொதிக்கவிடவும். குழம்பு கெட்டியாக இருக்கக்கூடாது. பச்சை வாசனை போனதும் பகோடாவை குழம்பில் போட்டு, சிறிது நேரம் கொதிக்க வைத்து, கொத்தமல்லி சேர்த்து இறக்கவும். பகோடா குழம்பு தயார்.




# பிரேசில் சிறையில் கலவரம்; 60 கைதிகள் உயிரிழப்பு

மனோவ்ஸ், ஜன. 3

பிரேசில் சிறையில் கைதிகளிடையே ஏற்பட்ட கலவரத்தில் 60க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

பிரேசில் நாட்டில் அமேசன் காட்டுப் பகுதியை ஒட்டிய மனோவ்ஸ் சிறை உள்ளது. அங்கு, போதைப் பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களில் தொடர்புடைய கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். அவர்களுள் இரு கும்பல்களுக்கு இடையே



நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட அதிகார மோதல் பெரும் கலவரமாக மாறியது. அந்தக் கலவரம் நேற்றுக் காலை 7 மணி வரை நீடித்தது.

சிறை அதிகாரிகள் 12 பேரை பணயமாகப் பிடித்த கைதிகள் அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தனர். துப்பாக்கி உள்ளிட்ட ஆயுதங்களைப் பயன்படுத்தி ஒருவரையொருவர் சரமாரியாகத் தாக்கிக்கொண்டனர்.

இந்தக் கொடூர கலவரத்தில் 60க்கும் மேற்பட்டார் உயிரிழந்ததாக அந்த நாட்டுப் பத்திரிக்கைகளில் செய்தி வெளியாகி உள்ளன. கைதிகள் குருதி வெள்ளத்தில் கிடக்கும் வீடியோ காட் சியும் வெளியாகி உள்ளது. கலவர சம்பவத்தைப் பயன்படுத்தி பல கைதிகள் சிறையிலிருந்து தப்பியோடியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

(வ)

## சிறைத் தண்டனை பெற்ற முன்னாள் பேராயர் மறைவு

பலஸ்தீனர்களுக்கு ஆயுதங்களைக் கடத்த உதவியதாக சிறைத் தண்டனை பெற்ற, செசாரியாவின் முன்னாள் பேராயரான ஹிலா ரியன் கப்பூச்சி உயிரிழந்தார் என்ற செய்தியை வத்திக்கான் உறுதி செய்திருக்கிறது. அவருக்கு வயது 94.

சிரியாவின் அலெப்போ நகரைச் சேர்ந்த கப்பூச்சி, பலஸ்தீன மற்றும் பிற மத்திய கிழக்கு நாடுகளில் நடைபெற்ற இயக்கங்களோடு தொடர்புடையவராக விளங்கினார்.

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் பலஸ்தீன தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களைக் கடத்த அவருடைய பதவி நிலையைப் பயன்படுத்தி கொண்டதாக 1976ஆம் ஆண்டு கிரேக்க மெல்கையிட் பாதிரியரான அவர் சிறைத் தண்டனை பெற்றார்.

வத்திக்கானின் தலையீட்டால் இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் விடுவிக்கப்பட்ட அவர், நாடு கடத்தப்பட்டார்.

ஈராக்கை சதாம் ஹூசேன் ஆண்டபோது, அதன் மீது விதிக்கப்பட்ட தடைகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவரும் முன்னாள் பேராயர் ஹிலாரியன் கப்பூச்சி. (வ)


## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் வாரித்தம்பி

(ஓய்வு நிலை கிளை முகாமையாளர் - சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம்)



கல்வயல் சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் வாரித்தம்பி 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வாரித்தம்பி இராமலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்புமகனும் சிவஞானம் காலஞ்சென்றவர்களான பசுபதி வேதாரணியம், பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.01.2017) திங்கட்கிழமை நடைபெற்று பூதவுடல் ஊரிக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி,
கல்வயல்,
சாவகச்சேரி.

(C 218)
(14,17,18,)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



மண்ணில்
17 . 05 . 1937

விண்ணில்
31 . 12 . 2016

### மரியாம்பிள்ளை இராசநாயகம்

(இளைப்பாறிய மீன் பிடிக் கூட்டுத்தாபன முகாமையாளர் பொறியல் பிரிவு - கொழும்பு)

சிறுவிளான் இளவாலையைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை இராசநாயகம் 31.12.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை - ஞானம்மா தம்பதிகளின் புதல்வனும் காலஞ்சென்றவர்களான பிலிப்பையா -மரியம்மா தம்பதிகளின் மருமகனும் மேரித்திரேசாவின் அன்புக் கணவரும் டனிஸ்ரன்(லண்டன்), செல்வின் (லண்டன்), அன்டர்சன் (சணா) ஆகியோரின் அன்புத் தந்தையும் சுமங்கலி (லண்டன்), மேரி அன்ரனீற்றா(லண்டன்), பிறேமினி ஆகியோரின் மாமனாரும் அன்று, அன்றீனா, யெசிக்கா, யூட்சன், கறோலினா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சுவாம்பிள்ளை, மேரி திரேசா, சிங்கராசா மற்றும் மேரி யோசேப்பின் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான மனுவேற்பிள்ளை, அன்ரனி, லீனாட் ஜெயராஜா மற்றும் தைரியநாதர் (கனடா), மரியதாஸ், அருட்பிரகாசம், ஜோசப் ஜெகநாதன் (லண்டன்), பிரான்சிஸ் நவநாதன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (04.01.2017) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அச்சுவேலி புனித சூசையப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு பின்னர் புனித சூசையப்பர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சங்கானை றோட்,
அச்சுவேலி.

(ஜே/7346)(12:ஜ 17)

தகவல்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 04.12.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த

அமரர்



### குலேந்திரன் வரதலட்சுமி

பிறப்பு 1950.05.17

இறப்பு 2016.12.04

எம் குடும்ப பாச விளக்காய்
ஒரு கூட்டுக் கிளியாக
எம்மோடு வாழ்ந்து
எம்மை யெல்லாம் தவிக்கவிட்டு
விண்ணுலகு புகுந்த உங்களை
நாம் எண்ணாத நாளில்லையம்மா.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (03.01.2017) செவ்வாய்க்கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 51/1, இலந்தைக்குளம் வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சுலோசனாதேவி மணிவாசகம்



சுதுமலை தெற்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுலோசனாதேவி மணிவாசகம் 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வியாழம்மா - வல்லிபுரம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும் மண்டைதீவைப்பிறப்பிடமாகக் கொண்ட காலஞ் சென்ற மாணிக்கம் மணிவாசகத்தின் மனைவியும் நர்கநந்தினியின் அன்புத் தாயாரும் பிருந்தா - கபிலன் தம்பதியரினதும் மற்றும் தாரணி, திவியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சஞ்சீவின் ஆசைப் பூட்டியும் செந்தில்குமரன், செல்வக்குமரன் ஆகியோரின் பெரிய தாயாரும் மாதவன், மாதினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலைமத்தி,
மானிப்பாய்.

(C 216)
(12,17,18,)

தகவல்:
குடும்பத்தினர்.
077 941 3688

### இராசையா நவேந்திரராசா

(Owner - Hotel Angel - Thellippalai)



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், ஏழாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட இராசையா நவேந்திரராசா நேற்று (02.01.2017) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான இராசையா - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வேலாயுதம்பிள்ளை - தவமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், சுசீலாதேவியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற சிவபாக்கியம் மற்றும் தருமராசா, கௌசலாதேவி, மகேந்திரராசா, கேசவராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற சிவலிங்கம் மற்றும் இராஜேஸ்வரி, காலஞ்சென்ற செல்வராசா மற்றும் கமலாதேவி, சசிகலா, றாகினிதேவி (கனடா), வாமதேவன், றதினி ஆகியோரின் மைத்துனரும், சுஜீபன் (ஆசிரியர்), திலீபன் ( Hotel Angel / Thellippalai), சனந்தன் ( நிரூபன்- தபால் ஊழியர் - சுன்னாகம்), லகிந்தன் (கட்டார்), ஜீவிதன் ( Hotel Angel / Thellippalai ) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மரீனாவின் அன்பு மாமனாரும், நிரோமியின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2017) செவ்வாய்க் கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குப்பிளான் காடாகடம்பை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏழாலை தெற்கு,
சுன்னாகம்

(J/7353)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

077 991 2473

# மரண அறிவித்தல்

## திருமதி கிறேஸ் சற்குணநாயகி விறாஸ்பிள்ளை

**(பண்டத்தரிப்பு)**



வடலியடைப்பு பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும், கனடா வன்கூவரை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கிறேஸ் சற்குணநாயகி விறாஸ்பிள்ளை கடந்த (25.12.2016) கனடாவில் காலமானார்.

அன்னார் லெஸ்லிவிறாஸ்பிள்ளை (இளவாலை சென்ற் ஹென்றீஸ் முன்னாள் ஆசிரியர்) இன் அன்பு மனைவியும் காலஞ் சென்ற வல்லிபுரம் - றோஸ்கண்மணி தம்பதியரின் அருமைமகளும் மன்னார் காலஞ்சென்ற மார்க்கிரட் விறாஸ்பிள்ளை தம்பதியரின் மருமகளும் காலஞ் சென்றவர் களான யேசுரட்ணம், துரைரட்ணம், வணக்கத்திற்குரிய (Rev) டேவிட்றட்ணம், அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற பிறிஸ்ஸில்லா மற்றும் லில்லி, ஜெசி, குளோறியா ஆகியோரின் அன்பு மைத்துனியும் கிறீஸ்ரீனா யசோதா (வன்கூவர்), புளோரன்ஸ் சித்திரா (லண்டன்), றெமீடியஸ் பார்த்தீபன் (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தாயும் நீல் ராஜசூரியர், ரோணி ரூபராஜன், காரிவிறாஸ்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும் கிறிஸ்ரி, அஞ்சலோரி, ஜோய், டேவிட், றேச்சல், றொசேல், ஜெறீயல், பென்ஜமின், கிறிஸ்ரினா, தோமஸ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 2017 ஜனவரி 04 ஆம் திகதி மு.ப. 10 மணிக்கு **First memorial Funeral Services, Burkeviewchappel, 1340 Domini on Ave, Fort coquitiam, BCV3 B8 G7** என்ற முகவரியில் நல்லடக்க ஆராதனையுடன் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அத்துடன் 4ஆம் திகதி (அதேதினம்) பி.ப.4 மணிக்கு பண்டத்தரிப்பு சந்திக்கு அருகில் அமைந்துள்ள அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையில் நினைவு ஆராதனை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அந்த நினைவு ஆராதனையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக வழிபாடு செய்ய வருகை தருமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**D. றதினி யூட்**

**கனடா**
**0016 049459380**

(ஜே/7360)(17.20)

### பணியாளர் தேவை

கணக்காய்வுத்துறை
பயிலுனர்கள் தேவை. (J/7356)(14,17,18)

**Siva Brothers**
No -15, 4th Lane, Brown Road, Jaffna.
**077 772 2215**

### வேலைவாய்ப்பு

முன்னணி தொழில் நிறுவனம் ஒன்றுக்கு ஆண், பெண் இருபாலாருக்கும் வேலை வெற்றிடம் உள்ளது.
- வவுனியா
- மன்னார்
- 18 தொடக்கம் 27 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

**077 637 7575** (V/183)(11,17)

### ஊர்க்கோழிகள் விற்பனைக்கு

2மாத ஊர்க்கோழிக்குஞ்சு,
விறாத்து சேவல்கள், கோழிகள்
விற்பனைக்கு உண்டு. ஒரு நாள்
ஊர்க் கோழிக்குஞ்சுகளை
முற்பதிவு செய்து பெற்றுக்
கொள்ளலாம்.

**தொடர்பு : 076 348 8645** (J/7355)(14,17,18)

### காணி விற்பனைக்குண்டு

**2 பரப்பு வெற்றுக்காணி**
**A9, கண்டி வீதியில்,**
**யாழ்ப்பாணம்**
**கச்சேரிக்கு அண்மையில்**
**தரகர்கள் வேண்டாம்.**
தொடர்பு - 076 708 7942,
075 048 4074

### நீங்கா நினைவலைகள்

| 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி | 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி |
|---|---|
| பிறப்பு 14 . 08 . 1926 — இறப்பு 26 . 12 . 2014 | பிறப்பு 10 . 05 . 1960 — இறப்பு 28 . 12 . 2008 |





**சின்னையா சேனாதிராசா** — **சேனாதிராசா தயாளன்**

நாள்கள் பல நூறு ஓடி மறைந்தாலும் - எம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் பாச தீபங்கள் - உங்கள்
நினைவுகள் என்றும் அழியாது
கண்ணின் இமை போல் எமைக் காத்தீர்களே - உங்கள்
கனவுகள் யாவும் நிறைவேறும்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னப்பிள்ளை(பூபதி) ஐயம்பிள்ளை

**(ஆலங்கேணி, பூநகரி)**



**உதிப்பு**
**13.10.1945**

**உதிர்வு**
**01.01.2017**

கரம்பகம், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் ஆலங்கேணி, பூநகரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சின்னப்பிள்ளை ஐயம்பிள்ளை 01.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை-பூரணம் தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும் ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும் பாஸ்கரன் (பிரான்ஸ்), சிறீதரன்(பிரான்ஸ்), சுபாஸ்கரன்(பிரான்ஸ்), சிவநந்தினி(ஜேர்மனி), முரளிதரன்(பிரான்ஸ்), கிருபாகரன்(இலங்கை), பிரபாகரன்(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.01.2016) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொள்ளுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்**
**அ. ஐயம்பிள்ளை(J.P)**
**077 418 9656**

## புதிய...

நிலையிலேயே மேலதிக கருமங்கள் தொடர்கின்றன. மக்கள் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட குழுவினால் முன் வைக்கப்பட்ட பரிந்துரைகள் சகலதும் அரசமைப்பில் உள்வாங்கப்படாது. சிலர் அது தொடர்பிலும் தவறான பரப்புரைகளை முன்னெடுக்கின்றனர்.

கருத்தறியும் குழுக்கள் அறிக்கைகள் மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அதன் பிரகாரம் சில விடயங்கள் மாற்றப்படும். சில காரணிகள் முழுமையாக மாற்றப்படாது. தேவையின் பிரகாரம் மாற்றப்படும். அவற்றை நிராகரிக்கவும் எம்மால் முடியும். எமக்குத் தேவையானவற்றை மாத்திரம் உள்ளீர்ப்போம்.

நாட்டின் நிபுணர்கள் மற்றும் புத்திஜீவிகளின் கருத்துக்களின் பிரகாரம் புதிய அரசமைப்பு குறித்து சமூகத்தில் கருத்தாடல்கள் இடம்பெற வேண்டும். மக்கள் அரசமைப்புத் தொடர்பில் கொண்டுள்ள நிலைப்பாட்டை அறிய முடியும்.

அதனைவிடுத்து வெளிநாட்டவர்கள் மற்றும் தன்னினவாதிகளின் கோரிக்கைக்கு அமைவாக அரசமைப்பைஉருவாக்கவேண்டிய தேவை இல்லை. சிலர் தமது பலத்தை எதிர்காலத்திலும் தக்க வைக்கும் நோக்கில் உண்மைக்குப் புறம்பான விடயங்களைக் கூறுகின்றனர்.

அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் அரசமைப்பை உருவாக்கியமையே இன்று நாட்டில் தோன்றியுள்ள சிக்கல்களுக்கு காரணமாகும். இவ்வாறான குறுகிய சிந்தனைகள்தான் நாட்டைப் போர் வரை கொண்டு சென்றது. நாட்டில் உள்ள பிரச்சினையை அறிந்து அதனை நிவர்த்திப்பதற்கான செயற்பாடுகளை நாம் முன்னெடுக்க வேண்டும். அதனை விடுத்து தனிப்பட்ட சிலரின் தேவைகளுக்காக அரசமைப்பை உருவாக்கி அதனை நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாது. அவ்வாறு குறுகிய நோக்கத்தில் ஓர் அரசமைப்பை உருவாக்கப் போவதில்லை என்றார் ஜனாதிபதி மைத்திரிபால. (த-5)

## மகிந்தவின்...

பிறப்பிக்கப்பட்டிருந்தது. அதற்கு அமைவாகவே அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நீர்கொழும்பு நீரேரி அபிவிருத்தித் திட்டத்துக்கு 11.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் (1.12 கோடி) மோசடி செய்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மேலதிக நீதிவான் சந்தன குலசூரிய இந்த மோசடிக் குற்றச்சாட்டுத் தொடர்பில் முன்னாள் பிரதி அமைச்சர் சரத் குமார குணரத்ன உள்ளிட்ட 6 பேருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பித்திருந்தார்.

எப்படியிருந்தபோதிலும், முன்னாள் பிரதி அமைச்சர் மற்றும் 4 சந்தேக நபர்களும், குற்றப் புலனாய்வுப் பிரிவினர் வழங்கிய திகதியில் வாக்குமூலம் வழங்கச் சமுகமளிக்கவில்லை. இலங்கை மீன்பிடி துறைமுகக் கூட்டுத்தாபனத்தின் விநியோக முகாமையாளர் உரிய திகதியில் வாக்குமூலம் வழங்கினார். அதன் பின்னர் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

வாக்குமூலத்தை உரிய திகதியில் வழங்காத ஏனைய 4 சந்தேகநபர்களும், மன்றில் கடந்த வாரம் சரணடைந்தனர். அவர்கள் 4 பேருக்கும், விநியோக முகாமையாளருக்கும் நீதிமன்றம் பிணை வழங்கியிருந்தது.

முன்னாள் பிரதி அமைச்சர் மாத்திரமே முன்னிலையாகியிருக்கவில்லை. இதனாலேயே அவர் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற விபத்துச் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் சரத் குமார குணரத்ன ஏற்கனவே கைது செய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (த-5)

## பிரபா...

அமெரிக்கா முயற்சித்தது. இந்தியாவின் எதிர்ப்பினாலேயே அந்தத் திட்டத்தை இறுதியில் அமெரிக்கா கைவிட்டது.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணி நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.

இறுதிப் போரின்போது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை காப்பாற்றுவதற்கு அமெரிக்கா முயற்சித்தது என்று, இந்தியாவின் முன்னாள் அயலுறவுத்துறைச் செயலர் சிவ்சங்கர் மேனன் தெரிவித்திருந்தார். இவ்வாறானதொரு நிலையிலேயே விமல் வீரவன்ச மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய அரசமைப்பு உருவாக்கம் நாட்டுக்கு விரோதமானதாகும். அது பிரிவினைவாதத்திற்கே கொண்டு செல்லும்.

வடக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களைப் புனித பூமியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. தென்னிந்தியாவில் புலிகளை வைத்து அரசியல் செய்கின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில், புதிய அரசமைப்பின் ஊடாக காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கின்றது. இது நாட்டுக்குப் பெரும் ஆபத்தையே ஏற்படுத்தும்.

புதிய அரசமைப்பானது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கும் ஏற்றவாறே - அவர்களின் விருப்பப்படியே தயாரிக்கப்படுகின்றது. இந்த நாடு இப்போதும் பிரிவினைவாத அரசியலுக்குள் சிக்கித் தவிக்கின்றது.

2015 ஆம் ஆண்டு ஜனவரி எட்டாம் திகதி 540 மில்லியன் டொலரை அமெரிக்கா செலவு செய்தது சும்மா விளையாட்டுக்காக அல்ல. அப்போது பிரபாகரனை மீட்பதற்கு அமெரிக்கா அதன் இராணுவத்தை இலங்கைக்குள் அனுப்புவதற்குத் தயாராக இருந்தது. இந்தியா அதை விரும்பாததால் அமெரிக்கா அந்தத் திட்டத்தைக் கைவிட்டது. இல்லாவிட்டால் நாம் எதிர்த்தாலும் அமெரிக்கா அதைச் செய்தே இருக்கும்.

இப்படியானதொரு நிலையில் காணி, பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதை எவ்வாறு ஏற்பது? என்றார். (த-5)

## இந்தியப்...

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தப் பேச்சுக்களின் ஆரம்பத்தில், கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி புதுடில்லியில் நடைபெற்ற முதற் கட்டப் பேச்சின் முடிவில் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்துப் பேசப்பட்டது.

சிறையில் உள்ள இரு தரப்பு மீனவர்களையும் விடுவிப்பதற்கும் இதன்போது இணக்கம் காணப்பட்டுள்ளது. மேலும், இந்தியாவில் இனிமேல் மீன்பிடிப் படகுகளுக்குப் புதிதாக அனுமதி கொடுக்கப்பட மாட்டாது என்று இந்தியத் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

இந்திய - இலங்கைக் கடலோரக் காவல் படையினர் கூட்டு ரோந்தில் ஈடுபடுவதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இரு தரப்பினரும் தகவல்கள் பரிமாறிக் கொள்வதற்கு 'ஹொட்லைன்' தொடர்பு உருவாக்கப்படவுள்ளது.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டுவதைத் தடுப்பது தொடர்பில் இந்தியத் தரப்பு முன்வைத்துள்ள கருத்துக்கள் திருப்தியளிப்பதால், இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பதைப் பரிசீலிப்பதற்கு மீன்பிடி அமைச்சர் மகிந்த அமரவீர இந்தச் சந்திப்பில் இணக்கம் தெரிவித்துள்ளார்.

படகு விடுவிப்புக் குறித்து இலங்கை அதிகாரிகள் ஆராய்ந்த பின்னரே அது தொடர்பான முடிவு எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

அத்துடன் அடுத்த கட்டப் பேச்சை எதிர்வரும் ஏப்ரல் மாதம் கொழும்பில் நடத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (த-5-101)

## அபிவிருத்திப்...

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற நிகழ்வின்போதே இந்தப் பிரகடனம் வெளியிடப்பட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா, அமைச்சர்கள், மாகாண முதலமைச்சர்கள், ஆளுநர்கள் மற்றும் அரச உயர் அதிகாரிகள் சிலரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

2030 ஆம் ஆண்டு வரையான அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் இதன்போது கொள்கைகள் முன்வைக்கப்பட்டன. (த-5)

## முடிந்தால்...

அவர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார்.

இந்த ஆண்டு ஆட்சியைக் கவிழ்ப்பது தான் தனது இலக்கு என்று முன்னாள் ஜனா திபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார் என்பது தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் பத்திரிகையாளர் கேட்டதற்கு,

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்குத் தான் விரும்பியதைச் செய்யச் சுதந்திரம் உண்டு. எது எவ்வாறு இருப்பினும் நானே நாட்டின் பிரதமர்.

அடுத்த வாரம் நான் சுவிற்சர்லாந்து செல்லவுள்ளேன். அந்தச் சந்தர்ப்பத்தில், மகிந்த ராஜபக்ச தான் கூறியதைப் போல செயற்பட முயற்சிக்க முடியும் - என்றார். (த-5)

## மகிந்தவின்...

இவ்வாறு பொதுபலசேனா அமைப்பு தெரிவித்துள்ளது.

கிருலப்பனையில் அமைந்துள்ள அதன் தலைமையகத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அதன் தேசிய அமைப்பாளரான டிலாந்த விதானகே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடன் நடைபெற்ற சந்திப்பின்போது, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச எமது அமைப்பை அமைச்சர்களான ராஜித, சம்பிக்க ஆகியோருடன் இணைத்துப் பேசியிருந்தார். இது அடிப்படை ஆதாரமற்றது. பொது பலசேனாவையும், அதன் செயலர் ஞானசார தேரரையும் தனிமைப்படுத்தவே இந்த முயற்சிகளில் இவர்கள் ஈடுபடுகின்றனர்.

எம்மைப் பொறுத்தவரை நாம் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கு மதிப்பளித்தாலும், அவரால் தெரிவிக்கப்படும் இவ்வாறான கருத்துக்களை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவே முடியாது. சிங்கள மக்களுக்காகவே தொடர்ந்தும் குரல் கொடுத்து வருகிறோம்.

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாயவுடன் எம்மை இணைத்து ஆரம்பத்தில் கதைகட்டினார்கள். தற்போது இந்த அரசுடன் இணைத்துப் பேசுகிறார்கள்.

நாம் சில முக்கியமான விடயங்களுக்காக இந்த அரசின் அமைச்சர்களுடன் கலந்தாலோசித்தோம் என்பது உண்மையே. ஆனால், எமது பின்னணியில் எவரும் இல்லை. எமக்கு எதிராக அடிப்படையற்ற குற்றச்சாட்டை முன்வைத்த முன்னாள் ஜனாதிபதிக்கு எதிராக நாம் சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளோம். இது தொடர்பிலான முன்னறிவித்தலை அவருக்கு அனுப்புவதற்காக தற்போது கலந்துரையாடி வருகிறோம்.

தேசப்பற்றாளர்கள் என்று கூறிக் கொண்டிருப்போரின் பேச்சுகளை கேட்டே அவர் இவ்வாறான கருத்துக்களை வெளியிடுகிறார் என்பதை நாம் நன்கு அறிவோம். இவ் வாறானவர்களால் தான் அவர் ஜனாதிபதித் தேர்தலிலும் தோல்வியடைந்தார் - என்றார். (த-5)

## பிள்ளையைப்...

பிள்ளைக்குரிய கற்றலுக்கான பொருள்களை வாங்கக்கூடப் பணம் இல்லாமல் கஷ்டப்படுகிறேன். இன்றைய தினம் வேலை வழங்குவதற்கான பதிவு என்று கூறினார்கள். அதற்குக்கூட அக்காவிடம் காசு வாங்கிக்கொண்டு தான் வந்தேன்-என்று கண்ணீர் மல்கத் தெரிவித்தார். **(மற்றொரு செய்தி 11 ஆம் பக்கத்தில்)** (த-4)

## இளம் தாயும்...

சந்தேகத்தில் வீட்டுக் கிணற்றில் பார்த்தபோது தாயும் மகனும் கிணற்றுக்குள் சடலமாக இருப்பதைக் கண்டார்.

அந்தப் பகுதியிலுள்ளவர்களின் உதவியுடன் சடலங்கள் வெளியே எடுக்கப்பட்டன என்று ஆரம்ப விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு வருடமாகக் கணவன்-மனைவி இடையே கருத்து முரண்பாடு காணப்பட்டது. இருவரும் பிரிந்த நிலையில் தாயும் பிள்ளையும் வவுனியா பண்டாரிக்குளம் பகுதியிலுள்ள தாயின் வீட்டில் வசித்து வந்துள்ளனர். அண்மையில் இருவருக்கும் இடையே புரிந்துணர்வு ஏற்பட்டு ஓமந்தை, பன்றிக்கெய்தகுளம் பகுதியிலுள்ள கணவனின் தாயாரின் வீட்டில் இவர்கள் வசித்து வந்ததுடன், வேறு வீட்டில் வசிக்க ஏற்பாடுகள் மேற்கொண்டிருந்தனர் என்று உயிரிழந்த பெண்ணின் சகோதரன் கூறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை டினோஜன் 7 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடினார் எனவும் தெரிவிக்கப்பட்டது. ஓமந்தை பொலிசார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இதே பகுதியில் நுண்நிதி நிறுவனத்தில் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தாயும் மகனும் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4)

## எல்லை நிர்ணய...

துள்ள நிலையிலேயே, இவ்வாறு பேச்சுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## எல்லை நிர்ணய அறிக்

அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கு முதல் நாள் உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் பைசர் முஸ்தபா வெளிநாடு சென்றிருந்தார்.

இருப்பினும் அறிக்கை கையளிப்பு இடம்பெறும் என்றும், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் இராஜாங்க அமைச்சரிடம் அது கையளிக்கப்படும் எனவும் எல்லை நிர்ணய ஆணைக்குழுவினர் தெரிவித்திருந்தனர். ஆனாலும் அறிக்கை கையளிப்பு நடைபெறவில்லை. ஆணைக்குழுவின் அறிக்கையின் சில மொழி பெயர்ப்புகள் தயாராகவில்லை என்று தெரிவிக்கப்பட்டு அந்தக் கையளிப்பு பிற்போடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வெளிநாடு சென்றிருந்த அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று முன்தினம் நாடு திரும்பியிருந்தார். எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் அறிக்கை கையளிப்பதற்கு, அமைச்சர் பைசர் முஸ்தபாவின் அலுவலகத்துக்குச் சென்றிருந்தார்.

ஆணைக்குழுவின் அறிக்கையில், ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவர் மாத்திரமே கையெழுத்திட்டுள்ளனர். இருவர் கையெழுத்திடவில்லை. ஆணைக்குழு உறுப்பினர்கள் அனைவரும் கையெழுத்திட்டால் மாத்திரமே அறிக்கையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவித்து, அமைச்சர் அதனைப் பெற்றுக் கொள்ளவில்லை.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இ[illegible] அறிக்கை வெளியிடப்படாமையினா[illegible] தாமதமாகி வருகின்றது. இதன் காரணமா[illegible] எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் உ[illegible] பினர்களுக்கு எதிராக வழக்குத் தாக்[illegible] யப் போவதாக கபே அமைப்பு ஏற்க ன[illegible] தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த[illegible])

## இலத்திரனியல்...

15 வயதிற்கு மேற்பட்ட அனைத்து பிர[illegible] களினதும் மரபணு தொடர்பான தகவல்[illegible] உள்ளிட்ட அனைத்தும் இலத்திரனி[illegible] அடையாள அட்டையில் உள்ளடக்கப்ப[illegible] பிரசைகளின் பெயர்ப் பட்டியல் தயாரி[illegible] படவுள்ளது. இதற்குத் தகுதி பெறுவோ[illegible] எண்ணிக்கை 1 கோடியே 60 இலட்சம்[illegible] இலத்திரனியல் தேசிய அடையாள அட்[illegible] கான சட்டவிதிகளை சட்டமா அதிபர் தி[illegible] களம் தயாரித்துள்ளது. அமைச்சரவை[illegible] றும் நாடாளுமன்றத்தின் அனுமதி இ[illegible] மாதம் பெற்றுக் கொள்ளப்படும். பெ[illegible] மக்களின் தகவல்களைப் பெற்றுக் கொ[illegible] தற்காக அனைத்து பிரதேச செயல[illegible] பிரிவுகளிலும் திணைக்களத்தின் பி[illegible] அமைக்கப் பட்டுள்ளது என்றார். (த-4[illegible]

## தமிழர்களின்...

நாயக்க கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நி[illegible] ஒன்றில் கலந்து கொண்ட போதே அ[illegible] சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சமகால நல்லிணக்க அரசு கடந்த இர[illegible] ஆண்டுகளில் நெருக்கடியான பயண[illegible] மேற்கொண்டிருந்தாலும், பல்வேறு [illegible] றிகளைப் பெற்றுள்ளது.

அரசியல் யாப்பு மறுசீரமைப்பு அவச[illegible] மேற்கொள்ளப்படமாட்டாது. எனவே, [illegible] தரப்பினர் தெரிவிக்கும் கருத்துக[illegible] கொண்டு மக்கள் குழப்பம் அடையத் தே[illegible] யில்லை.

சகல கட்சிகளும் சுதந்திரமாக தமது க[illegible] களை தெரிவிக்கக்கூடிய ஜனநா[illegible] இன்று நாட்டில் நிலவுகின்றது-என்றா[illegible]

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 3

**யங்ஸ்ராரின் கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் 22ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈகிள்ஸ் 'ஏ' அணியை எதிர்த்து கோல்டன் ஸ்ரார் அணி மோதவுள்ளது.

**ஐக்கியத்தின் கால்பந்தாட்டம்**

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் வடமராட்சி அணிகளுக்கு இடையில் நடத்தும் குமார் பொன்னம்பலம் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று மாலை 4மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கரவெட்டி நவசக்தி 'பி' அணியை எதிர்த்து நியூட்டன் அணியும் மாலை 5 மணிக்கு பலாலி விண்மீன் 'ஏ' அணியை எதிர்த்துபொலிகை பாரதி அணியும் மோதவுள்ளன. (ம-422-108)

# ஆவரங்கால் மத்தி., யுத் அரையிறுதிக்குத் தகுதி

கரணவாய், ஜன. 3

இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் மத்தி. மற்றும் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகம் என்பன அரையிறுதியாட்டங்களுக்குத் தகுதி பெற்றன.

ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டங்கள் குறித்த கழகத்தின் ஸ்மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகமும் அச்சுவேலி யுத் விளையாட்டுக் கழகமும் மோதின. முதல் செற்றை 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது கலைமதி. சரிவில் இருந்து மீண்டு அடுத்த மூன்று செற்களையும் முறையே 25:20, 25:17, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது யுத்.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் இளவாலை மத்திய விளையாட்டுக் கழகமும் மோதின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்றுசெற்களையும்முறையே 25:14, 28:26, 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்கு முன்னேறியதுஆவரங்கால்மத்தியவிளையாட்டுக் கழகம். (ம-108)



நாடாளுமன்ற உறுப்பினரும், நடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அடைக்கலநாதனின் கடந்த வருடத்துக்கான தனது பன்முகப் படுத்தப்பட்ட நிதியில் இருந்து வவுனியா சிதம்பரபுரம் சக்தி விளையாட்டு கழகத்திற்கு சீருடைகள் வழங்கப் பட்டன. (ம-23)

## யங்ஸ்ரார் அணி அபார ஆட்டம்

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் யங்ஸ்ரார் 'ஏ' அணி வெற்றிபெற்றது.

யங்ஸ்ராரின் மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணியை எதிர்த்து யுனிபைட் விளையாட்டுக் கழக அணி மோதியது. இதில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக 'ஏ' அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

# சென், சேவியர், சென், நிக்கிலஸ் இன்று மோதல்

யாழ்ப்பாணம், ஜன. 3


அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகம் சவால் கிண்ணத்துக்காக நடத்திவந்த கால்பந்தாட்டத் தொடர் அரையிறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது. குறித்த கழகத்தின் மைதானத்தில் இன்று இரவு 8 மணிக்கு இடம்பெறும் முதலாவது அரையிறுதியில் சென். நீக்கிலஸ்அணியைஎதிர்த்துக்கோட்டைசென்.சேவியர் அணி மோதவுள்ளது. (ம-422-108)



சென்.சேவியர்



சென். நிக்கிலஸ்



# யாழ், சதுரங்க முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 3

யாழ். சதுரங்க முற்றம் நடத்திய கடந்த வருடத்துக்கான நியம வேகப் போட்டிகள் யாழ். இந்துக் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றன. குறித்த போட்டிகளின் முடிவுகள்.

**8 வயதுப்பிரிவு**

8 வயது ஆண்கள் பிரிவில் எ.தரன் முதலாமிடத்தையும், டனுசிகன் இரண்டாமிடத்தையும், சசிப்பிரியன் மூன்றாமிடத்தையும் கைப்பற்றினர். பெண்கள் பிரிவில் எஸ்.அனனியா முதலாம் இடத்தையும், எஸ். அஸ்வினியா இரண்டாம் இடத்தையும் என்.நதி மூன்றாம் இடத்தையும் தமதாக்கினர்.

**10 வயதுப்பிரிவு**

10 வயது ஆண்கள் பிரிவில் ரி.பாவலன் முதலாம் இடத்தையும், எஸ்.அட்சயன் இரண்டம் இடத்தையும், ஜெ.அற்றலன் மூன்றாமிடத்தையும் தமதாக்கினர். பெண்கள் பிரிவில் ரி.கிறிஸ்ரினா அனுஜிதா முதலாமிடத்தையம், ரி.வித்தகி இரண்டமிடத்தையும், ஜெ.அஸ்மிலா மூன் றாமிடத்தையும் தமதாக்கினர்.

**12 வயதுப்பிரிவு**

12 வயது ஆண்கள் பிரிவில் ஜெ.ஆரகன் முதலாம் இடத்தையும், எம்.அனுதர்சன் இரண்டாம் இடத்தையும், ஜெ.கீர்த்தனன் மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர். பெண்கள் பிரிவில் பி.அஸ்வினி முதலாமிடத்தையும், எஸ்.ஆரபி இரண்டாமிடத்தையும், எம்.செளமியா மூன்றாமிடத்தையும் கொண்டு சென்றனர்.

**14 வயதுப்பிரிவு**

14 வயது ஆண்கள் பிரிவில் ஆர்.நிவேதன் முதலாம் இடத்தையும், பி.லதுன் இரண்டாம் இடத்தையும், பி.தீபக் மூன்றாமிடத்தையும் கைப்பற்றினர். பெண்கள் பிரிவில் ரி.தமிழ்மதி முதலாம் இடத்தையும், எம்.சோபிதா இர்ண்டாம் இடத்தையும், வி.கேதாகினி மூன்றாம் இடத்தையும் கைப்பற்றினர்.

**16 வயதுப்பிரிவு**

16 வயது ஆண்கள் பிரிவில் எஸ்.அனுசன் முதலாம் இடத்தையும், ஆர்.விரோசன் இரண்டாமிடத்தையும், வ.றஞ்சித்குமார் மூன்றாமிடத்தையும் தமதாக்கினர். பெண்கள் பிரிவில் ஆர்.செளமியா முதலாம் இடத்தையும் சி.அஸ்வினி இரண்டாமிடத்தையும் கைப்பற்றினர்.

**18 வயதுப்பிரிவு**

18 வயது ஆண்கள் பிரிவில் எஸ்.யூட்றெடிசன் முதலாம் இடத்தையும், எஸ்.கஜேந்திரன் இரண்டாம் இடத்தையும், பெண்கள் பிரிவில் யு.சமிந்திரதேவி முதலாம் இடத்தையும் ஆர்.அபிராமி இரண்டாம் இடத்தையும் கைப்பற்றினர். (ம-23)

## நியூசிலாந்து பங்களாதேஷ் ரி-20 இன்று

நியூசிலாந்து - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ரி-20 தொடர் இன்று நடைபெறவுள்ளது.
தொடரில் மூன்று ஆட்டங்கள்- இரண்டாவது ஆட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் எதிர்வரும் 8 ஆம்திகதியும்நடைபெறவுள்ளன.
ரி-20 தொடரைத் தொடர்ந்து இந்த இரு அணிகளுக்கும் இடையில் இரு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது. முன்னதாக முடிவடைந்த ஒருநாள் தொடரை நியூசிலாந்து 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம)

## ஆஸ்திரேலியாவை பயிற்றுவிக்கிறார் ரிக்கி பொண்டிங்

ஆஸ்திரேலிய அணியின் துணைப் பயிற்சியாளராக அந்த அணியின் முன்னாள் தலைவரான பொண்டிங் நியமிக்கப்பட்டார்.
ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி அடுத்த ஆண்டு இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து நான்கு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட இருக்கிறது. டெஸ்ட் தொடர் தொடங்குவதற்கு முதல் நாள் வரை ஆஸ்திரேலியா - இலங்கைக்கு எதிரான ரி-20 தொடரில் விளையாட இருக் கிறது. ரி-20 தொடரை ஆஸ்திரேலியாவில் முடித்துக் கொண்டு அடுத்த 24 மணி நேரத்தில் இந்தியாவுக்கு வந்து விளையாடுவது சாத்தியமில்லை என்பதால், இரு வேறு அணிகளை களமிறக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை முடிவெடுத்தது. இதனால் இலங்கைக்கு எதிரான தொடரில் விளையாடும் அணியின் தலைமைப் பயிற்சியாளராக லாங்கரும் துணைப் பயிற்சியாளராக கிலெஸ்பியும் நியமிக்கப்பட்டிருந்தனர். தற்போது பொண்டிங்கும் பிறிதொரு துணைப் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார். (ம)



## முபடாலா தொடரைக் கைப்பற்றி திறனை உறுதி செய்தார் நடால்

ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் நடைபெற்ற முபடாலா ரென்னிஸ் தொடரைக் கைப்பற்றி கடந்த வருடத்தை வெற்றியுடன் நிறைவு செய்தார் ரென்னிஸ் ஜாம்பவான் நடால்.
கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஸ்பெய்னின் நட்சத்திர வீரரான நடாலை எதிர்த்து பெல்ஜியத்தின் டேவிட் கோபின் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றார் நடால். அடுத்த செற்றையும் கைப்பற்றினால் நடால் சம்பியன் என்ற நிலையில் பெரும் போராட்டத்தை வெளிப்படுத்தினார் கோபின். இதனால் அந்த செற் இழுபறியாக நீண்டு சென்றது. முடிவில் ஒருவாறாக 7:6 என்ற புள்ளிகள் அடிப்படையில் நடால் வெற்றிபெற்றதை அடுத்து 2:0 என்ற நேர் செற் வெற்றியுடன் அவர் சம்பியனானார். கடந்தாண்டு முழுவதும் உபாதைகளால் அவதிப்பட்டு வந்த நடால், அந்த ஆண்டை வெற்றியுடன் நிறைவு செய்தார். (ம)

## ரொனால்டோ என் உத்வேகம் இப்படிச் சொல்கிறார் கோக்லி


கால்பந்து ஜாம்பவான் ரொனால்டோவே தனது உத்வேகம் என்றவாறாக கருத்துத் தெரிவித்தார் இந்திய டெஸ்ட் அணியின் தலைவரான கோக்லி.



நான்கிறிஸ்டியானோ ரொனால்டோவிடமிருந்து ஏராளமான வகையில் உத்வேகம் பெற்றுள்ளேன். கடின உழைப்பினால் அவர் பல வருடங்களாக முதல் இடத்தில் உள்ளார். உலகிலேயே மிகவும் கடினமாக உழைக்கக் கூடியவர் (கடின பயிற்சி) ரொனால்டோதான். அதனால்தான் அவர் அந்த இடத்தில் இருக்கிறார். மெஸ்ஸி ஓர் சிறந்த மேதை. ஆனால், கடின உழைப்பில் ரொனால்டோ அவரை விடச் சிறந்தவர் என கோக்லி மேலும் தெரிவித்தார். (ம)

## விளையாடுவார் மிஸ்பா; பாக். கிரிக்கெட் உறுதி

சிட்னி, ஜன. 3
ஆஸ்திரேலியாவுக்கு எதிராக இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணியின் தலைவராக மிஸ்பா விளையாடுவார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது.
இந்த இரு அணிகளுக்கும் இடையில் முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் தோல்வியடைந்திருந்தது. மிஸ்பா மோசமான ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார். இரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் நான்கு இன்னிங்ஸிலுமாகச் சேர்த்து அவர் 20 ஓட்டங்களையே எடுத்திருந்தார். இதனால் கடந்த ஆட்டத்தின் பின்னர் அணித்தலைவர் என்ற வகையில் கருத்துத் தெரிவித்த அவர் எனது ஓய்வு தொடர்பில் சிந்திக்கிறேன். சில வேளைகளில் அடுத்த டெஸ்ட் ஆட்டத்துக்கு முன்பாகவும் ஓய்வு பெறலாம் என்று தெரிவித்திருந்தார். இதனால் மிஸ்பா இன்று களமிறங்குவாரா என்பதில் சந்தேகம் நிலவியது. இந்த நிலையில் இன்றைய ஆட்டத்தில் தலைவராக மிஸ்பா பங்கெடுப்பார் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அறிவித்தது. (ம)



## இறுதி டெஸ்ட் இன்று

பாகிஸ்தான் - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ளது.
முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் இரண்டிலும் ஆஸ்திரேலியா வெற்றிபெற்றது. இதனால் இன்றைய ஆட்டத்தின் முடிவு எவ்வாறு அமைந்தாலும் அது ஆஸ்திரேலியாவைப் பாதிக்காது. ஆனால் 3:0 என்று வழித்துத் துடைக்க ஆஸ்திரேலியாவும், குறைந்த பட்சம் ஒரு வெற்றியையேனும் பதிவுசெய்ய வேண்டும் நிலையில் பாகிஸ்தானும் உள்ளன. சிட்னி ஆடுகளத்தில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.
3:0 என்ற அடிப்படையில் ஆஸ்திரேலிய அணி கிண்ணத்தைக் கைப்பற்றும் என்று அதன் தலைவரான சிமித் ஏற்கனவே தெரிவித்திருந்தார். இதன் காரணமாகவும் இந்த ஆட்டத்தில் எதிர்பார்ப்புக்கள் பெரியளவில் உள்ளன. (ம)



## தாக்கூர் அதிரடி நீக்கம்: உயர் நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பு

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவரான அனுராத் தாக்கூர், செயலாளர் அஜய் ஆகியோரை குறித்த பதவிகளில் இருந்து நீக்கித் தீர்ப்பிட்டது இந்திய உயர் நீதிமன்றம்.
இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கிய செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மை இருக்கும் வகையில் புதிய நிர்வாகிகள் நடந்து கொள்ள வேண்டும் என்று - கடந்த ஜூலை மாதம் உயர் நீதிமன்றம்உத்தரவிட்டிருந்தது. ஆனால், இந்த உத்தரவுக்கு மதிப்பளிக்காமல் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் நிர்வாகிகள் சில முடிவுகளை தன்னிச்சையாக எடுத்தனர், செயற்பட்டனர் என்று குற்றச்சாட்டுக்கள் எழுந்தன.



இந்த அத்துமீறல்களை சுட்டிக்காட்டிய முறைப்பாடு தொடர்பான விசாரணை நேற்று விசாரணைக்கு வந்தது.
மன்றின் உத்தரவை பின்பற்றத் தவறிய இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரிய தலைவர் அனுராக் தாக்கூர், செயலாளர் அஜய் சிர்கே ஆகியோரை குறித்த பதவிகளில் இருந்து நீக்கி, நேற்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. உங்கள் மீது ஏன் நடவடிக்கை எடுக்கக் கூடாது? என்று விளக்கம் தாருங்கள் என்றும் உத்தரவிடப்பட்டது. இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் புதிய தலைவர் மற்றும் செயலாளரை தேர்ந்தெடுக்கும் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக சட்ட நிபுணர்களையும் மன்று நியமித்தது. (ம)

# எல்கர், குயின்டன் அபார ஆட்டம்; தடுமாறி மீண்டது தென்னாபிரிக்கா

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் தடுமாற்றமான ஆரம்பத்தை எதிர்கொண்டிருந்த போதிலும் எல்கர், குயின்டனின் சிறந்த இணைப்பாட்டத்தால் சரிவிலிருந்து மீண்டது தென்னாபிரிக்கா.

தொடரில் மூன்று ஆட்டங்கள். முதலாவது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றது. இதனால் நடைபெற்றுவரும் ஆட்டத்தில் வெற்றிபெற இலங்கை முனைய வேண்டும். குறைந்தபட்சம் சமநிலையிலாவது முடித்தால் மட்டுமே கிண்ணத்தைத் தீர்மானிப்பதில் அடுத்த ஆட்டம் வரை உறுதியற்ற நிலை இருக்கும்.


நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை, முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. தென்னாபிரிக்காவின் ஆரம்ப வீரர்களாக குக் மற்றும் எல்கர் இருவரும் களமிறங்கினர். முதல் பந்துப்பரிமாற்றத்தின் நான்காவது பந்தில் ஓட்டமெதனையும் பெறவிடாது குக்கை வீழ்த்தினார் லக்மல். எல்கருடன் இணைந்தார் அம்லா. இணைப்பாட்டம் நிலைபெற படிப்படியாக சரிவிலிருந்து மீண்டது தென்னாபிரிக்கா. இணைப்பாட்டமாக 68 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா. வீழ்த்தியவர் 19 வயதேயான இளம் வேகப்பந்து வீச்சாளர் லகிரு குமார. ஓட்டமெதனையும் பெறாத நிலையில் டுமினியையும் வீழ்த்தினார் குமார. 66 ஓட்டங்களில் மூன்று இலக்குகளை இழந்தது தென்னாபிரிக்கா. அந்த அணி உணவு இடைவேளையின் போது 69-3 என்றிருந்தது.

பிளாசிஸ், எல்கர் இணைந்து ஓரளவு தாக்குப் பிடித்தனர். 38 ஓட்டங்களுடன் கேரத்தின் சுழலில் சிக்கினார் பிளாசிஸ். எல்கர், குயின்டன் இணை தென்னாபிரிக்காவை சரிவிலிருந்து தூக்கி நிறுத்தியது. இருவரும் அரைச்சதம் கடந்தனர். எல்கர் சதத்தையும் நிறைவு செய்தார். அணி 272 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் எல்கரை வீழ்த்தினார் லக்மல். தொடர்ந்தும் நிலைத்து நின்றார் குயின்டன். நாள் முடிவில் தென்னாபிரிக்கா 297-6 என்ற நிலையில் உள்ளது. (ம)




## படமாக உருவெடுக்கிறது மாரியப்பனின் வாழ்க்கை

பிரேசிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் கடந்த வருடம் நடைபெற்ற பரா ஒலிம்பிக் தொடரில் உயரம் பாய்தலில் தங்கப் பதக்கம் வென்ற தமிழ் வீரர் மாரியப்பன் தங்கவேலுவின் வாழ்க்கை படமாக உருவெடுக்கவுள்ளது. ஐஸ்வர்யா தனுஷின் இயக்கத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் படம் வரவுள்ளது. புதுவருடத்தினத்தன்று குறித்த திரைப்படத்தின் போஸ்டரை சாருக்கான் வெளியிட்டு வைத்தார். (ம)



## பிரிஸ்பெய்ன் ரென்னிஸ் தொடர்; பவுச்சேர்ட் அதிர்ச்சித் தோல்வி

ஆஸ்திரேலியாவின் பிரிஸ்பெய்ன் நகரில் நடைபெற்றுவரும் ரென்னிஸ் தொடரில் முதல் சுற்றுடன் வெளியேற்றப்பட்டார் கனடாவின் வீராங்கனை பவுச்சேர்ட்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பவுச்சேர்டை எதிர்த்து அமெரிக்காவின் செல்பை மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 2:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் பவுச்சேர்ட். இரண்டாவது செற்றை அவர் 6:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய போதிலும் இறுதி செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் செல்பையின் வசமானது. இதனையடுத்து 1:2 என்ற செற் கணக்கில் பவுச்சேர்ட் வெளியேற்றப்பட்டார். பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியத் தொடர் 15 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில் தற்போது நடைபெற்றுவரும் பிரிஸ்பெய்ன் தொடர் ஆஸ்திரேலியத் தொடருக்கான முன்னேற்பாட்டுத் தொடராகக் கருதப்படுகிறது. (ம)

## தீவுகளை அழைத்தது பாக். தமது மண்ணில் விளையாட

இரண்டு ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகளை பாகிஸ்தானுக்கு வருமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை அழைப்பு விடுத்தது.

இலங்கை அணி கடந்த 2009 ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப் பயணம் செய்து விளையாடிக் கொண்டிருக்கும்போது இலங்கை வீரர்கள் மீது ஆயுததாரிகள் தாக்குதல் நடத்தினார்கள். அதன்பிறகு எந்தவொரு அணியும் பாகிஸ்தான் மண்ணில் சென்று விளையாடவில்லை. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தீவிர முயற்சியின் காரணமாக சிம்பாப்வே அணி மட்டும் ஒரு முறை பாகிஸ்தான் மண்ணில் சென்று விளையாடியது. இதற்குப் பாகிஸ்தான் தரப்பில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டது. தற்போது இரண்டு ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாட பாகிஸ்தான் மண்ணிற்கு வருமாறு மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் சபைக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அழைப்பை ஏற்பது தொடர்பில் தீவுகள் இன்னும் எவ்வித துலங்கல்களையும் வெளிப்படுத்தவில்லை. (ம)

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1328 சீட்டிழுப்பு திகதி 2017.01.02
வெற்றி இலக்கங்கள்
02 03 31 60 P
ரூ. 15,765,690/-

அபிவிருத்தி இலட்சாதிபதி
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 43 சீட்டிழுப்பு திகதி 2017.01.02
வெற்றி இலக்கங்கள்
10 21 34

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 597
சீட்டிழுப்பு திகதி 02.01.2017 திங்கட்கிழமை
வெற்றி இலக்கங்கள்
10 34 67 72 A
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46,603 250/=

கனரக சாரதி
தகுதி :- உரிய அனுமதிப் பத்திரம்
அனுபவம் :- 1-3 வருடங்கள்
வயதெல்லை :- 23-45
தொடர்புகளுக்கு :- முகாமையாளர்
077 346 6262 ,021 227 1242
வெற்றிடம் :- இரண்டு
விண்ணப்ப முடிவு திகதி :- 10-01-2017

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், இளைஞர், யுவதிகள், தொழில் தேடுவோர், வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம்
1. காலை 08.00-10.00 3. பி.பகல் 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
பயிற்சியில் இணைவோர் 07.01.2017 வரை பதிவுகளை மேற்கொள்ளமுடியும்
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல் தளபாட காட்சி அறைக்கு
- Cashier (Part Time & Full Time)
- Showroom Marketing Sales & Executives (Boys) ( Coimputer அனுபவமுள்ளவர்கள்)
- Driver (Heavy Vehicle License) விரும்பத்தக்கது.
ஆர்முள்ளவர்கள் சுயவிவரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
KINGS ELECTRONICS PVT (LTD)
NO.12, Point Petro Road, Jaffna.
021 454 6699

KBK Accounting Centre
(கணக்கீட்டுக்கான பிரத்தியேக / குழு வகுப்புக்கான நிலையம்)
A/L 2019 (New Syllabus) Day Batch
கிளை 01 / ஆரம்பம் | கிளை 02
05/01/2017 - வியாழன் 3 மணி (கந்தர்மடச்சந்தி) | 07/01/2017 சனி 3 மணி (கொழும்புத்துறை)
ACCOUNTING - MR.BALAKAJEN
B.Com(Jaf.),H.N.Dip-in-ACC.,Dip-in.Edu(ousl),M.Com(ACC.)
(Tutorial Staff) T.P: 077 674 0450
தரம் 10,11 இற்கான வணிகக் கல்வியும் கணக்கீடும். A/L2017, A/L 2018 பிரிவுகளுக்கும் ஆரம்பத்தில் இருந்து கற்பிக்கப்படும்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.